44

R.B A.N.M s (Bifurcated)
High School Librar;
Bangalore - 560 042

V. R. Balakrishnan.

திருவள்ளுவர் திருவுள்ளம்

மு. அப்துல்கரீம், எம்.ஏ.,

வானதி பதிப்பகம்

திருவள்ளுவர் திருவுள்ளம்

பேராசிரியர்
மு. அப்துல்கறீம் எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
காதிர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்.

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை · 17

முதற் பதிப்பு : ஏப்ரல், 1980

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 5-00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

நூலில் நுழையுமுன்...

வள்ளுவன் தன்னை உலகிற்குத் தந்து தமிழகம் வான்புகழ் கொண்டதென்ற பாரதி பாட்டும், வள்ளுவனைப் பெற்றதால் வையமே புகழ்பெற்றது என்ற அவர் தாசன் பாட்டும், இருவகைகளில் வள்ளுவர் பெருமையை வகையுறக் காட்ட வல்லன. உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உவந்து தரவல்லது என்றும், இதன்பால் இல்லாத எப் பொருளும் இல்லை என்றும், திருக்குறளின் பரந்த பொருளகலம் பேசப்படும். திருக்குறளின் ஆழமும் அழகும் உறுதியும் தெளிவும் அனைத்தும் எல்லாப் புலவராலும் பாராட்டப்பட்டதோடு, எடுத்தாளப் பட்டும் ஏற்றம் பெற்றுள.

இசையொடு தமிழர் இனிது வாழத் திருக் குறளைக் கசடறக் கற்றல் இன்றியமையாதது என, இருபது ஆண்டுகட்கு முன்பே நான் எண்ணியதுண்டு. டாக்டர் வ. சுப. அவர்களின் 'வள்ளுவம்' என்ற முழுநூலைக் கற்ற காலை என் கருத்து இன்னும் வலுவுற்றது. வாழ்வுயர்த்தும் அறங்கள் பலவற்றை வகைப்படுத்திப் பேசும் வள்ளுவர், தலையெனப் போற்றும் தனியறம் யாது எனக் காணும் வேட்கை யில், திருக்குறளைப் பன்முறையும் பயின்றபோது எழுந்த எண்ணங்கள் குறிப்புக்களாகப் பதினைந் தாண்டுகள் அரும்பு நிலையில் இருந்து, இன்று முழுமை பெற்றுத் 'திருவள்ளுவர் திருவுள்ள'மாக மலர்ந்திருக்கிறது.

கரையற்ற கல்விக்கு எல்லையற்ற பொருளை இன்று நாம் வாரி இறைத்தும் மிகக் குறைந்த பயன் பெறுகிறோம். வள்ளுவர் கல்விச் சிந்தனைகளைச் செயற்படுத்தும் துணிவு நமக்கிருந்தால், பெரும் பயன் பெறலாம். கல்வி அறிவு ஒழுக்கம் என முக்கூறுபட்டு நிற்கும் முழுமையான வள்ளுவர் கல்விக் கொள்கையை வகுத்துக் காட்டுவது முதற் கட்டுரையாகும். அடுத்துத் தொடரும் ஆறு கட்டுரைகள் 'வள்ளுவர் உள்ளம்' தொடங்கிக் 'கடமையும் உரிமையும்' வரை—எல்லாக் கட்டுரை களும் ஒரு பொருள்மேல் உருவானவையாகும். வள்ளுவ நூல் முழுமையும் அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கும் ஒருணர்வு—வறுமையாளர் பால் இரக்கமும், அவர் இன்மை தீர்க்கும் திறங்கொண்டார்மேற் புகழும், அஃது தீர்க்காதவர் மேல் இகழும் என, வள்ளுவர் அதிகாரங்கள் அனைத்தையும் அதிகாரஞ் செய்து நிற்கும் ஒரு பொருளைக் கண்டேன். திருக்குறளில் எங்கெங்கு காணினும் ஈகையடா என்று கண்டு கொண்டேன்.

தலைவன் தலைவிக்குப் பணிவதும்கூடத் தகும் என்று விதிவிலக்குப் பெற்ற களம் காமக்களம். காமத்துப் பாலிலும் வள்ளுவர் மறக்காத மாண் பறம் ஈதலறமே என்பது நினைக்கத் தக்கதாகும். மனைவி தோள் மருவிப் பெறும் நிகரற்ற காமவின்பத் திற்குத் தம்மிலிருந்து தமது பகுத்துண்ணும் ஈகை யறம் ஒன்றுமட்டுமே ஈடாகும் எனப் பேசும் வள்ளுவர் உள்ளத்தைக் காமத்துப் பாலிலும் கண்டேன். சிந்தித்துச் சிந்தித்து உள்ளம் தழும் பேறிய திருவள்ளுவர் திருவுள்ளம் உவந்து போற்றிய ஓரறம் — தலையறம் — ஈதலறமே எனத் தெளிக. அதுவே இந்நூல் நோக்கம்.

அரபு மொழிப் பேரறிஞர் கஸ்ஸாலி அவர் களுடைய அரிய நூல்களின் மொழியாக்கத்தைக் கற்றபோது, வள்ளுவர் கருத்துக்களோடு ஒத்த பல செய்திகள் கண்டு வியந்தேன். இங்குக் கருத் தொப்புமை மட்டுமன்றிக் கருத்தைச் சொல்லும் முறையிலும் உள்ள ஒற்றுமை உணரத் தக்கதாகும். நட்புப் பற்றிய இரு பேரறிஞர்தம் கருத்துக்களின் ஒப்பாய்வே, 'அறிஞர் போற்றிய அரிய நட்பு' ஆகும். இரு பேரறிஞரையும் தொடர்ந்து ஒப்பாய்வு செய்ய இக்கட்டுரை துணைசெய்யும் என்ற நம்பிக்கை உண்டு.

இறுதி மூன்று கட்டுரைகள், வள்ளுவரொடு பிந்திய புலவர் மூவரையும் ஒப்பிட்டுக் கற்ற கல்வி யின் உறுபயனாகும். இலக்கியக் கல்வியில் ஒத்த களங்களை உற்றுநோக்கி ஒப்பிட்டாய்வது பேரின்பம் தருவதாகும். ஒத்த களங்களைக் கண்டாய்ந்து பெருகிய சிந்தனைக்குளத்தில் குளிக்கலாம்; வள்ளுவத் தைத் தெளியலாம்.

பதினைந்தாண்டுப் பழமையுடைய இந்நூற் சிந்தனைகள் இன்று பொருந்துமா என்ற ஐயம் வேண்டாம். என்றும் நின்று நிலவும் திறன்மிக்க வள்ளுவ அடித்தளத்தின் மேல் எழுந்த வளமான சிந்தனைகட்குக் காலப்பழமை இல்லை. இத்தனை ஆண்டுகட்குப் பிறகு இச் சிந்தனைகள் சிந்தை யள்ளும் அழகிய நூலுருவம் பெறத்துணையாக விளங்கிய வானதி திருநாவுக்கரசர் தமிழ்த்தொண்டு வாழ்க! வெல்க! கற்றதன் பயன், தூய இறைவன் நற்றாள் தொழுவதே என்ற வள்ளுவர் கொள்கையில் ஊறிநிற்கும் வானதியாருக்கு, என் ஆழியநன்றியினை உரித்தாக்குகின்றேன்.

அன்பன்,

அதிராம்பட்டினம்
20-3-80

மு. அப்துல்கறீம்.

பொருளடக்கம்

வள்ளுவர் கல்விக் கொள்கை	... 9
வள்ளுவர் உள்ளம்	... 27
பகுத்துண்டு பல்லுயிரோம்பல்	... 41
தானமா? தவமா?	... 48
நன்றியா? உதவியா?	... 53
செயலில் வாய்மை ஈகையே	... 60
கடமையும், உரிமையும்	... 67
அறிஞர் போற்றும் அரிய நட்பு	... 76
வள்ளுவர் முறையில் இறைமுறை இயம்பல்	... 93
வள்ளுவர் வழியில் பாரதி	... 104
வள்ளுவர் வழியில் பாவேந்தர்	... 114

R. B. A. N. M.'s (Aided)
High School Library
Bangalore

வள்ளுவர் கல்விக்கொள்கை

கல்விக்கு முதலிடம்

கல்வி கடல் போன்றது; ஆனால் கரையற்றது. எல்லையின்றி விரிந்த பரப்புடையது. அளவற்ற ஆழம் உடையது. காலம் செல்லச் செல்ல அதன் அளவும் வளர்கிறது. தேவையும் மிகுகிறது. இன்றைக்குக் கல்வித்துறைகள் பலவாகப் பெருகியுள்ளன. துறைப்பெருக்கம் போலவே கல்வி கற்றற்கும் வசதிகள் வாய்ப்புக்கள் பெருகி நிற்கின்றன. பழந்தமிழர் கல்விக் கொள்கையில் இன்று போல் துறைகள் பலவாகப் பெருகவில்லை, புறவசதிப் பெருக்கம் காரணமாகக் கல்விக்குரிய முயற்சி எளிமையாக்கப் படவில்லை என்பது உண்மை. துறைப் பெருக்கம் இவ்வளவு பரந்து விரியவில்லையாயினும். கல்விக்கொள்கை வானுற உயர்ந்து வளமாக வளர்ந்திருந்தது. பழந்தமிழர் கல்விக் கொள்கையை உள்ளபடி உணர்ந்து, 'அவ்வடிப் படைமேல், இன்றைய அறிவும் கொண்டு இக்காலக் கல்விக் கொள்கை வகுக்கப்படுமேல் பயன் பெரிதாகும்.

பழந்தமிழர் கல்விக் கொள்கை முரணற்றது. தெளிவுடையது. ஆயிரம் ஆண்டுச் சிந்தனையின், அறிவின் பயனாக மலர்ந்தது. அக் கல்விக் கொள்கையை முற்ற முழுக்க உணர்தற்கு வள்ளுவரே வழிகாட்டி. "நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322) என்ற வள்ளுவர் நடையே

இதற்குச் சான்று. முந்திய அறிஞர் தொகுத்த அறக்கருத்தெல்லாம் ஆய்ந்தவர் வள்ளுவர் என்பதும், அத்தொகுப்புள்ளும் தலையாயது இது என்று தேர்ந்து கண்டவர் வள்ளுவர் என்பதும், இந் நடையால் விளங்கும். பல செய்திகளை 'என்ப' என்ற நடைப்படுத்திப் பேசுவர். ''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை'' என்பர். பல அறிவு நூல்களை, அறிஞர் தொகுத்த அறிவுச் செல்வத்தை ஆய்ந்து, முன்னோர் சொல்லும் பொருளும் தேர்ந்து, அவற்றுள்ளும் சிறந்தன தெளிந்து, மெய்ப்பொருள் கண்டு நூல் செய்தவர் வள்ளுவர் என்பது தெளிவு. ஆகவே பழந் தமிழர் கல்விக் கொள்கையைக் குறள் நூல் ஒன்று கொண்டு, பல நோக்கிலும் அறிய முடிகிறது.

திருக்குறள் நூலின் முதலதிகாரம், கடவுள்வாழ்த்து. இப்பகுதியில் இறைவனைச் சித்திக்கும் போதே, இன்னும் சொன்னால் இறைவனைச் சிந்திக்கும் முன்பே, வள்ளுவர் மொழியையும், கல்வியையும் சிந்திக்கின்றார் என்பது காணத்தகும் கருத்தாகும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

'இறைவனை முதலாக உடையது உலகு!' என இறை முதன்மைபற்றிக் கூறவந்த வள்ளுவர், அப்பேருண்மையை விளக்குவதற்கு, அதனினும் முன்பாக, 'எழுத்தெல்லாம் அகரத்தை முதலாக உடையன' என்கின்றார். இரண்டாவது குறளிலும் இறைத்தொழுகையின் இன்றியமையாமைக் குறிக்க வந்தவர், கல்வியின் பயன் என்ன? என்ற வினாவை எழுப்புகிறார். இன்னும் அம் முதலதிகாரத்திலேயே, எழுத்தடிப் படையில் அமைந்த நூல்களான்

ஆன கல்வியின் பயன், 'பொய்தீர் ஒழுக்க நெறி' யுணர்வதே என்று சுட்டிக்காட்டுவாராக, ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்ஞர் நீடுவாழ் வார்'' என்பர். இறையதிகாரத்திலேயே கல்வியின் சிறப்பு கல்வியின் பயன் இரண்டையும் சிந்தித்ததோடு, கல்விப் பயன் 'ஒழுக்க நெறி நிற்றலே' என்ற உண்மையையும் உலகிற்குணர்த்தினர் வள்ளுவர் என உணரலாம்.

முக்கூறுகள்

வள்ளுவர் கல்விக்கொள்கை மூன்று கூறுபாடுடையது. அவை கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பன. இம்மூன்றும் ஒன்ருெடொன்று தொடர்புடையன. இதனைப் பரிமேலழ கரும், 'கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் ஒழுக்கம்' என உரைத்துக் காட்டுவர். கல்வியின் உயிர் நிலைகளாகிய இம்மூன்றினையும், பல குறள்களில் வள்ளுவரே நாம் உணர விரித்துரைக்கின்ருர்.

> ''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.'' (391)

கற்க-அறிக-ஒழுகுக என்ற மூன்று நிலைகளையுடையது இக்குறள்.

> ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்'' (140)

இக்குறளில் அம்மூன்று கூறுபாடுகளையும் பயன் நோக்கில் —முறை மாற்றி, ஒழுக்கம் அறிவு, கல்வி என்ருங்கு ஒழுக்கம் இல்லாதவர் பலகற்றும் அறிவில்லாதவரே என்பர். இங்கு ஒழுக்கம்—அறிவு—கல்வி என முக்கூருகப் பேசப்படுதல் காண்க. கல்வி, அறிவு ஒழுக்கம் என்ற மூன்று நிலைகளும் இயல்பான மனிதவளர்ச்சிப்படி களாகும். இதனை இன்னும் விளங்கிக் கொள்ள உண்ணல், உரமாதல், செரித்தல் போன்று மூன்று கூறுகள்

எனலாம். உண்ணலும் கற்றல் போன்று ஒரு வினையே. முறைப்படி வாழக் கற்றல் தேவை. உயிர் வாழுதற்கே உண்ணல் தேவை. இரண்டும் இன்றியமையாத் தலைமையுடைய மனித முதல் வினைகளாகும். இவ்விரண்டினும் கூட, செவி உணவாம் கல்வி, வயிற்றுணவினும் உயர்ந்தது எனப் பேசும் வள்ளுவரினும், கல்விச் சிறப்பை யார் பேச முடியும்? உண்ணல் பசிபோக்குதற்கே எனினும், உண்டது செரித்தலும், செரித்தது உரமாதலும் என்ற தொடர் வினைகள் இன்றேல், உண்டது வீணாகும்; முழுப்பயன் தராது போகும். அதுபோன்றே கற்றது அறிவாகவில்லையென்றால், அறிவாயது ஒழுக்கமாகச் செயலாகவில்லையென்றால், கற்றது வீணாகும்; முழுப்பயன் தராதுபோகும். ஆகவே இம்மூன்றினையும் இணைத்துப் பேசும் வள்ளுவர் கல்விக் கொள்கை வளஞ்சான்றது என்பது தெளிவு.

ஒழுக்கத்துக்கு ஊக்காக் கல்வி கடையேயாம்

கல்விப்பயன் இறந்தகால நிகழ்காலக் கருத்தறிவு எனலாம். ஆகவே கல்வி இறப்பும் நிகழ்வும் பற்றியது. அறிவு நிகழ்வும், எதிர்வும் பற்றியது. இறந்தகால, நிகழ்காலக் கல்வி, எதிர்கால அறிவைத் தரவேண்டும். நிகழ்ந்தன கொண்டு நிகழ இருப்பன அறிவதும், அவ்வறிவு கொண்டு செய்யத்தகுவன செய்யும் ஒழுக்கமும் கைவரவேண்டும். இவ்வள்ளுவர் கல்விக் கொள்கைக்குக் கீழ்வரும் குறள் தொடர்களே சான்று: 'அறிவுடையார் ஆவது அறிவார்' (427) 'எதிரதாக் காக்கும் அறிவினார்' (429). அறிவுக்கு வள்ளுவர் தரும் இவ்விளக்கம், இறந்தகாலக் கருத்துத் தொகுதியைக் கற்றுத்தெளிவதால் அறிவு வளரும் என்ற உண்மையைக் காட்டும். மேலும் அவ்வறிவு எதிர்காலத்து வருவதறிதற்கும், இக்காலத்துச் செய்யத்தகுவன இவையென்று காட்டுதற்கும் பயன்படும். செய்யத்தக்கன இவை

தகாதன இவை என்று பகுத்துணர்த்தும் அறிவு, ஒழுக்கச் செயல் என்ற முடிந்த நோக்கம் கொண்டது. இம் முடிந்த நோக்கமாய நற்செயல் செய்யும் ஒழுக்கம் இன்றேல், கல்வியும் அறிவும் பயனற்றொழியும்—உண்டதும், செரித்தலும் உடலுக்கு உரமாகாதபோது, உழைக்கும் ஆற்றலைத் தராதபோது பயனற்றொழிவதுபோல, ஆகவே வள்ளுவர் கொள்கைப்படி, கல்வி, அறிவுகளின் பயன் ஒழுக்கமே. எனவே, அதனை,'உயிரினும் ஓம்பப்படும்' என்றார். ஓதுதல், உணர்தல், பிறர்க்குரைத்தல் அனைத்தும் தானடங்காவிடில் பயனின்றொழியும். என்கின்றார். கற்றவனை—அறிந்தவனை, அவன் கற்ற கல்வியும் பெற்ற அறிவும் அடக்கமுடையனாக மாற்ற வேண்டும், இன்றேல் கல்வியும் அறிவும் பயனற்றொழியும். கற்றல் உணர்தல் தெளிதல் அளவில் நின்று விட்ட அறிவு, ஒழுக்கச் செயலுக்குக் காரண மாகாத அறிவு, வள்ளுவர் நோக்கில் அறிவென்ற பெயர் பெறுவதில்லை. எழுத்துக்கல்வி, சொற்கல்வி, பொருட் கல்விகளில் சிறந்து பன்னூற் கல்வியுடையாரையும், பல மொழி வல்லாரையுங் கூட—அவர்கள் கற்றவை செயலாக மாறாதபோது—வள்ளுவர் இகழ்ந்து பேசக் காண்கிறோம். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார், பலகற்றும் அறிவிலா தார் என்பர். வெறுங்கல்வி, தெளிந்த செயலாக மாறாத கல்வி, தீய செயலை விடுக்கவும், நற்செயலைப் போற்றிச் செய்யவும் துணைபோகாத கல்வியறிவு, கடையானதென்று வேறுபல இடங்களிலும் இகழப்படுகிறது.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

வள்ளுவர் அறிவுபற்றிக் கொண்டுள்ள கருத்தினை மேற்குறித்த குறள்கள் தெளிவுறக் காட்டும். பிறர் துன்பந் துடைக்க முந்தும் நற்செயல், கேடு செய்தார்க்கும் தீமை செய்யாதொழிதல், தீயன நீக்கி நல்லனவற்றில் ஈடுபடுத்தும் அரிய பண்பு, பிறர் வெறுப்பன செய்யாமை முதலிய செயல்களே—அச் செயல்களைத் தூண்டும் உயர்ந்த உளப் பண்பே அறிவெனக் கருதப்படுகிறது. உயர் பண்புடையராய், உயர்செயல்களைச் செய்யாதவர் அறிஞர் எனுந் தகுதி பெறமாட்டார் என்பதே வள்ளுவர் முடிவு. "அறிவினான் ஆகுவதுண்டோ?" என்ற வினா, ஒழுக்கச் செயலில்லா அறிவு இழிந்தது எனக் காட்ட வள்ளுவர் எழுப்பிய வினாவாகும். "அறிவு என் ஆம்?" என்பது ஒழுக்கச் செயலுக்குத் தூண்டாத அறிவு பயனற்றது என்று காட்ட வள்ளுவர் மேற்கொண்ட நடையாம். சுருக்கமாக, ஒழுக்க உணர்வில்லா நூற்பயிற்சியுடையார், அழுக்குப் பொதி சுமக்கும் கழுதைபோல, வெற்றுக் கருத்துச் சுமக்கும் கசடரேயன்றி, அறிவுடை அறிஞராகார் என்பது தெளிவு. 'ஒழுக்க மிலான்கண் உயர்வில்லை,' 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற குறட்கருத்துக்கள் காரணங்காட்டி ஒழுக்க உயர்வுரைப்பன வாகும். எத்துணை கோடி கல்வி வளர்ச்சிக்கு வாரி இறைப்பினும், கல்வி, எழுத்து, சொற்பொருள்களின் தெளிவு என்ற அளவோடு நின்றுவிடுமாயின் ஒரு பயனும் இல்லை; ஒழுக்கச் செயலுக்குத் தூண்டவில்லையாயின் உயர்வேதும் இல்லை. உடலுக்கு வலிமை தரா உணவுபோல, உயிர்வளர்க்காத —உணர்வு வளர்க்காத — ஒழுக்கம் வளர்க்காத கல்வியறிவு கடையேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்ற பாராட்டுக்குச் சொற்பொருள் மட்டும் காணும் வெற்றுக்

கல்வியாளர் உரியராக மாட்டார். ஒழுக்க உயர்வுடையாளரே உரியராவார். கல்வி உயிர்நோய்க்கு உறுமருந் தாய் அமையும் போதுதான், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்ற பாராட்டுக் குரியதாகும். இன்றேல் கிளி போலச் சிலவற்றை ஒலிப்பதால் கற்றவர் என்ற பெயருக்கு உரியராக மாட்டார்.

இன்றைய நிலை

கல்விச் சிறப்பு, அறிவுத் தெளிவு, ஒழுக்க உயர்வு என் றுங்கு வள்ளுவர் வகுத்த முந்நிலைக் கல்விக்கொள்கை, பழந்தமிழர் கல்விக் கொள்கை என உரைக்கலாம். அன்றி வள்ளுவர்க்குப் பின்வந்த தமிழறிஞர்களும் இக்கொள்கை யையே கொண்டிருந்தனர் என்பதற்கு அவர்தம் நூல்களே சான்று. இக் கல்விக் கொள்கை இன்று போற்றப்படவில்லை என எண்ண வேண்டியிருக்கிறது. துறை பல பெருகு வதும், பொருள் பல செலவாவதும் தவிர, மனிதப்பண்பை ஒழுக்கத்தை வளர்க்கும் நன்னெறிகளில் நாட்டம் குறைந்துவிட்டமையால் போலும், கல்விப்பயன் மிகவில்லை. கல்வியின் பயன்பற்றிய கொள்கையே நம்மிடத்து இன்று தெளிவாக இல்லை. புறச் செல்வ வளம் அளவின்றிப் பெருகிவரும் நாடுகளிலுங்கூட, உண்மை இன்பமும், உள்ள அமைதியும் அருகி வருவதற்கும் இதுவே காரணம் எனக் கருத வேண்டி உள்ளது. மண்ணுடை நிலத்தில் உரமிட்டு விளைவைப் பெருக்கத் துணைபோலும் நம் கல்வி, உணர்வுடை நெஞ்ச நிலத்தில் வாய்மை உரமிட்டு, இன்ப விளைவைப் பெருக்கத் துணைபோகவில்லையே ஏன், எனச் சிந்திக்க வேண்டும். இன்றைய அமைதியற்ற பூசல் நிறைந்த உலகச்சிக்கலை அறுக்க அச்சிந்தனை துணை போகலாம்.

வள்ளுவரது கல்விக் கொள்கை நிலை மூன்றுடையது என்று மேல் விளக்கினேன். ஆனல் கல்வியை இன்று

போல் இயற்பெருக்கம் செய்திலர் என்பதையும் சுட்டிக் காட்டினேன். எண், எழுத்து என இரண்டு இயல்களும் கல்வியின் இருகண்கள் (392) எனப் பேசுவர் வள்ளுவர். ஆகவே கல்வியை இயல்களாகப் பகுக்கும் நோக்கம் இருந்தது என அறியலாம். ஆனால் அவ்வியற்பகுப்பு மேல் கீழ் எண்ணத்தைத் தரவில்லை. வேளாண்மை, மருத்துவம் அரசு எனவாங்குப் பல இயல்களும் இன்றுபோல் அன்றும் திருக்குறளிலேயே பகுத்துப் பேசப்பட்டுள. ஆனால் ஒவ்வோரியலையும் தனியே கற்கும் துறைப் பகுப்பு இருந்ததா? என்பது ஒரு வினா. இன்று கலைக்கல்வி, இலக்கியக்கல்வி முதலியனவும் தனித்துறைகளாகக் காண்கிறோம். "நவில் தொறும் நூல் நயம்" என்ற வள்ளுவத் தொடர் நயந்தேறும் இலக்கியக் கல்வியைக் குறித்து நிற்கும். வள்ளுவர் இல்லறவியல் தனித்துப் பேசுகிறார். இன்று மனையியல் தனித்துறையாக வளர்ந்துள்ளது. காம இயலும் குறளில் தனிப்பகுதியாக இலங்கும். கற்கத்தகும் செய்திகள் எல்லையின்றிப் பரந்து கிடப்பதால், எண்ணின்றி இயல்கள் பகுக்கலாம். யார்க்கும் பல்வேறு இயல்களைக் கற்பது வாழ்வுக்கு இன்றியமையாததாகும். இன்றும், முதுகலை நிலையிலேயே ஒருதுறைக் கல்வி அமைந்துள்ளது. தொடக்க நிலையில் எல்லா இன்றியமையா இயல்களும் அடிப்படை அளவில் கல்வித்திட்டத்தில் இடம்பெறவே செய்யும். ஆகவே வள்ளுவர் எல்லா இயல்களும் வாழ்வுக்கு இன்றியமையாதவையே என்று கொண்டு, எவ்வியற்கல்வியையும் போற்றத் தக்கதாகவே கருதினர். அறிவியலே வாழ்வுயர்த்தும், கலையியல் அவ்வளவு இன்றியமையாததன்று எனவரும் இன்றையச் சிந்தனை, கல்வியையே கருவறுக்கும் என்ற கருத்தான் அறவெறுத்தார். அனைத்தியல்களும் கற்கத் தகுவன என்ற கருத்தினர் ஆயினர். ஆகவே கல்விக்குரிய கால அளவு சிலபல ஆண்டுகள் எனக்

கருதவில்லை. கல்விக் காலம் ஒருவனுக்கு அவன் வாழ்நாள் முழுவதும் என்று கருதினர். ஆகவே 'என் ஒருவன் சாந் துணையுங் கல்லாதவாறு?' என வினவினர். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்ற காமப்பாற் குறள் அறிவுக் குரிய அனைத்துத் துறைகளையும் வாழ்நாள் முழுக்கக் கற்றாலும், கற்க முடியாது என்ற உணர்வைத் தரும். சாந்துணையும் கற்றாலும், அனைத்துத் துறையறிவும் கை வராது என்பது அவர் முடிவு. ஆகவே கல்விக்கு இயற் பகுப்பும் செய்யாது அவரவர் நிலைக்குத்தக அப்பகுப்புகளை மேற்கொள்ள விடுத்தார். அன்றியும் வாழ்நாள் எல்லாம் கற்கவேண்டும் என்ற அளவில் அன்றி, ஒவ்வொரு நாளும் கற்க வேண்டும் என வலியுறுத்துவதையும் காண்கிறோம். "நாளென ஒன்று போற் காட்டி உயிரீரும் வாள்" *(334)* என்றவிடத்து, வாழ்நாளில், ஒருநாள் என்று இகழாது எல்லா நாளையும் போற்றிக் கற்க ஊக்கமூட்டுவர். நாள் என அழைக்க வேண்டாம்; வாள் என அழையுங்கள் என்பார். நாள் ஒன்றாயினும் வரையறுக்கப்பட்ட வாழ்நாளின் ஒரு பகுதி ஆதலால், அதன் கழிவு ஆயுட் காலத்தின் ஒரு பகுதி கழிந்ததாகக் கருதப்படவேண்டும் என்பர். நாள் வாளாக மாறி ஆயுளின் ஒரு பகுதியை அறுத்துவிட்டது என உறுத்தும் நடையில் கால அருமையை உணர்த்துவர். ஒவ்வொரு நாளையும் கற்கத் தகுந்த நாள் எனப் பயன் கொள்ளத் தூண்டுவர்.

கற்குமுறை

கல்வித்திட்ட அமைப்பில் கற்குமுறை, கற்பிக்குமுறை கட்கு உரிய இடம் அமைதல் வேண்டும். கற்கத்தகுவன இவை என்று காட்டும் கல்வியாளன் அவற்றைக் கற்குமுறை இதுவென்றும் காட்டக் கடமைப்பட்டுள்ளான். கற்கத் தகும் நூல்கள் பலவற்றைப் பலகாலமாக உடைமைகளாகப்

பெற்றிருந்தும், தமிழினம் கற்குமுறையறிந்து கல்லாமையால், உடைமையுள் வறுமையை அனுபவித்து வந்திருப்பது உலகறிந்த செய்தி. பொருளிருந்தும் வறுமையுள் வாடுவது பெருந்துன்பமல்லவா? பாரதி நடையில் சொன்னால் 'கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், நாவிருந்தும் ஊமையராய்' வாழும் வாழ்வு எத்துணை துன்பந்தரவல்லது. ஞாயிறு எத்துணை ஒளியை உலகத்துப் பரப்பினும், கண்ணில்லார் அவ்வொளியால் காட்சிப்பயன் பெறமாட்டார். அதுபோல் வாழ்வுயர்த்தும் பலநூல்களைத் தமிழினம் பெற்றிருந்தும், அவற்றைப் பயன் கொள்ள அறியாமையால், கற்குமுறை தெரியாமையால் வாழ்வில் உயர்வு பெறவில்லை. ஆகவே கல்விக்கொள்கை தெளிவாக இருப்பதுமட்டும் போதாது; கற்குமுறையும் கற்பார்க்குத் தெளிவாக இருக்கவேண்டும். 'கம்பன் பிறந்த காரணத்தால் தமிழ்நாடு கல்வியில் சிறந்தது' என்பார் பாரதியார். திருக்குறள் உறுதியால் தமிழினம் அழியா வாழ்வுபெறும் என நம்பிக்கை தெரிவித்தார் பாரதியார். இவையெல்லாம் தகுதியுடைய நூல்கள் தமிழில் உள என்று காட்டப் போதுமானவை. ஆனால், அந்நூல்களுடைமையால்மட்டும் தமிழினம் வாழ்வு பெற்றுவிட முடியாது. உரிய முறையில் அந்நூல்களை முறைப்படி கற்றால்தான் வாழ்வு பெறமுடியும் என்பதையும் பாரதியார் அறிந்திருந்தார். ஆகவே, கற்குமுறை அறியாரைக் 'கவியுளம் காண்கிலார்' எனச் சாடுவர்.

கசடறக் கற்க

நூல் எவ்வளவு நுண்ணியதாயினும், ஆசான் எவ்வளவு நுண்மையாகக் கற்பிப்பினும், கற்பான் வேட்கை அளவு, கற்பான் முயற்சி அளவு, கற்பான் உணர்திறன் அளவே கல்வி நலம் அமையும். 'வெள்ளத்

தனையது மலர்நீட்டம்' என்றது போல், கற்பான் உணர் திறன் அளவு கல்வி சிறக்கும் எனலாம். இதனையே தொல்காப்பியர், 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' எனக் கூறுவர். உணர்வோர் திறன் உயர்வாக இல்லையென்றால், உணர்முறைக்கு உரிய பயிற்சி இல்லையென்றால், முயற்சி எவ்வளவிருந்தும் எதிர்பார்க்கும் பயன் விளையாது. களர் நிலத்து உழவன் உழைப்புப்போல், வீண் முயற்சியாகி விடும்.

''நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்'' (373)

கற்ற நூல் பலவாயினும், உற்றுணரும் திறன் இல்லாத போது கல்விசிறவாது என்று காட்டுவதே இங்கு வள்ளுவர் நோக்கம். ஆகவே, வள்ளுவர் கல்விக் கொள்கையில், கற்பார் கற்கு முறைக்கும் உரிய பெரிய இடம் உண்டு என உணர வேண்டும். 'கற்றனைத் தூறும் அறிவு', 'உண்மையறிவே மிகும்' என்ற குறட் பகுதிகள், கற்பார் முயற்சிக்குத் தக, கற்கு முறையறிந்து கற்றுணரும் திறனுக்குத் தக, அறிவு விளக்கம் அமையும் என்ற வள்ளுவர் கொள்கை காட்டுவன. இவ்வள்ளுவர் கொள்கையினை முழுமையும் உடன்படுவர் குமரகுருபரர்.

''எத்துணைய வாயினுங் கல்வி இடனுணர்ந்து
உய்த்துணர் வின்றேல் இல்லாகும்''

என்ற குமரகுருபரர் கருத்து உணர்ந்து போற்றத்தகும் உயர்வுடையதாகும். கசடறக் கற்றல் என்ற வள்ளுவர் கருத்துக்குக் குமரகுருபரர் தரும் விளக்கமே முழுமையுடைய தெனலாம். கசடு நூலுள் இருந்தால், அதனை நீக்கிக் கற்க வேண்டும். உள்ளத்தில் உள்ள கசடு நீங்கவும் கற்க வேண்டும். ஐயங் களைந்து மெய்ப்பொருள் கண்டு கற்க வேண்டும் எனப் பலவகையால் 'கசடறக்கற்க' என்ற

தொடருக்கு விளக்கம் தரப்படுகிறது. இவ்வெல்லா வற்றினும், 'இடனுணர்ந்து, உய்த்துணர்ந்து கற்றலே கசடறக் கற்றல்' என்பது சிறந்த கருத்தாகும். உண்மைக் கருத்தை உள்ளபடி முழுமையாக உணர, இடனுணர் தலும், உய்த்துணர்தலும் இன்றியமையா இலக்கணங் களாம். இவ்விரு இயல்புகளும் இல்லாவழி நூலாசிரியன் கருத்தும், கற்பான் கருத்தும் வெவ்வேறாகி விபரீதங்கள் விளைவதைக் காண்கிறோம். நேர்மாறான—தவறான— பிழையான கருத்தை ஆசிரியன் கருத்தெனக் கற்பான் மயங்குவான். அதுபற்றியே,குமரகுருபரர் கல்வி இல்லாகும் என்றார். இக்குற்றம் நிகழாதிருக்கும் பொருட்டே தொல் காப்பியர் 'நோக்கு' பற்றிப் பேசுவார். நூலாசிரியன் கருத்தை நோக்கியுணர்தல் என்பது, இடனுணர்ந்து, உய்த்துணர்ந்து கற்றுணர்தலேயாகும். 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என வள்ளுவரும், உண்மைப் பொருளை— உள்ள பொருளை, உள்ளவாறு மயக்க உணர்வின்றி அறிதலையே விளக்குவர்.

கசடறக் கற்றல் என்றும், மெய்ப்பொருள் காணல் என்றும், நோக்குதல் என்றும், இடனுணர்ந்து உய்த் துணர்தல் என்றும் எல்லாம், தமிழறிஞர் கற்கு முறை கழறுவாராயினர் என உணர வேண்டும். இம்முறையில் கற்றால், 'மெய்ப் பொருள்' காணமுடியும். இன்றேல் மாறுபட எண்ணுதல், வேறுகொள உணர்தல் முதலிய வற்றால் கல்வி பெருங்கேடு விளைவிப்பதைச் சில சான்று களுடன் கண்டால் தெளிவு பிறக்கும்.

மக்கட் பேறு? புதல்வரைப் பெறுதலா?

குறளுக்கு நுண்ணுரை செய்த திறனாளர் பரிமேலழகர், வள்ளுவர் உள்ளங் காணவும் காட்டவும் முயன்று வென்றவர். அவரும் சில இடங்களில் திரிபுபட உணர்ந்தும்

உணர்த்தியும் இருக்கக் காண்கிறோம். 'மக்கட்பேறு' என்பது ஓரதிகாரம். அவ்வதிகாரத்தில், முதற்குறளில், 'மக்கட்பேறு' என்ற தொடரும், அடுத்த ஐந்து குறள் களில் 'மக்கள்' என்றும், இறுதி நான்கு குறள்களிலும் ஒன்றனுள் 'மக்கள்' என்றும், மூன்று குறள்களில் 'மகன்' என்றும் வரக் காண்கிறோம். இதற்கு முந்திய அதிகார மாய வாழ்க்கைத் துணைநலம், 'மக்கட்பேறு' என்ற தொடரோடு முடியக் காண்கிறோம். இவ்வதிகாரத்துக்கு 'மக்கட்பேறு' என்ற பெயரையும், பிறர் காட்டக் காண் கிறோம். பரிமேலழகர் மட்டும் 'புதல்வரைப் பெறுதல்' என இவ்வதிகாரத்தை அழைக்கிறார். இத்தொடரை இவர் எங்கிருந்து பெற்றார்? 'புதல்வன்' என்ற சொல் குறளில் எங்கும் காணோம். இடம் நோக்கிப் பொருள் கொள்ளாது, இடப் பொருத்த மில்லாத தொடர் ஒன்றைக் கொண்டு வந்து திணிக்கிறார் பரிமேலழகர். அதிகாரப் பெயர் மாற்றத்தால் பரிமேலழகர் பெறநினைத்த பயன் என்னவென்று ஆழ்ந்து கண்டால் அறிய முடிகிறது. முதல் குறளின் 'அறிவறிந்த மக்கள்' என்ற தொடருக்கு, உய்த்துணர்வில்லா உரை விளக்கம் செய்கிறார் என்று கூறுவதைத் தவிர்க்க முடியவில்லை. "அறிவறிந்த என்ற தனால், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது" என்பர் பரிமேலழகர். மக்கள் என்ற சொல் பொதுவாக மனித மக்களைக் குறிக்கும் என்பதை உடன்பட்டு, அறிவறிந்த என்ற அடை சேர்ந்ததனால், இவ்விடத்துப் பெண்ணைக் குறிக்காது ஆணை மட்டும் குறித்தது என்பது அவர் கருத்து. இக்கருத்து வள்ளுவருக்கு ஏற்புடைத்தன்று என்பதனை விளக்க வேண்டியதில்லை. "பெண்ணிற் பெருந் தக்க யாவுள?" என அறப்பாலில் வினா எழுப்பிப் "பெண்ணிற் பெருந்தக்க தில்" எனக் காமப் பாலில் விடை யிறுக்கும் வள்ளுவர், பெண்ணுக்கும் அறிவுக்கும் தொடர்

பில்லை என்ற கருத்தினர் என்பது வியப்புத் தருகிறதே தவிர விளக்கந் தரவில்லை. கல்வியில்லார் விலங் கொடனையர் என்று கழறிய வள்ளுவர்—கண்ணுடையார்க் கெல்லாம் கல்வியையும் உயிருடையார்க் கெல்லாம் அறிவையும் விதியாக்கிய வள்ளுவர்—பெண்மக்கட்கு அறிவை விலக்கி வைத்தார் எனல் ஆய்வாகுமா? மழலை யின்பத்தை எல்லையின்றிப் புகழும் வள்ளுவர், பெண் மக்களை விடுத்துப் புதல்வரை மட்டும் பெருமைப் படுத் தினார் என்று கூறலாமா? புதல்வனையோ, புதல்வியையோ பெறுவது பெறுவார் விருப்பத்தைப் பொறுத்ததா? எனச் சிந்திக்க வேண்டும். பரிமேலழகர் திணித்த விளக்கமும், கொண்ட உரையும் இடனோக்கியும் அமையவில்லை. அன்றியும் உய்த்துணர்வின்றி வன்புரையாக உள்ளம் உறுத்துகிறது என்பதை முந்திய அறிஞர் பலரும் அழகுற எடுத்துக் காட்டியுளர். டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், ''வள்ளுவத்தின் அடிவேரினை விளக்கம் என்னும் வாள் கொண்டு அறுத்தெறிந்தார் பரிமேலழகர்'' எனத் தெளிவுறுத்துகிறார்.

'அறிவறிந்த மக்கள்' என்றதனால், அறிவறியா மக்களும் உண்டென்று பிறழ—மாறுபட—உணர்ந்ததால் எத்துணைப் பெருங்கேடு விளைந்தது, எண்ணிப்பார்மின். அப்படி உணர்ந்தால், அவ்வதிகாரத்து அடுத்த குறளில், 'பண்புடை மக்கள்' என்றதைப் பண்பிலா மக்களும் உண் டென்று பிறழ உணர்ந்து, பெண்மக்கள் பண்பும் இலர் என்ற முடிவுக்கு வரவேண்டும். பெண்ணுக்கு அறி வொதுக்கம் செய்ததோடு, பண்பொதுக்கமும் செய்ய வேண்டும். ''பொறியின்மை யார்க்கும் பழியன்று'' (618) என்ற குறளில் ''யார்க்கும் அறிவறிந்து ஆள்வினை யின்மை பழி'' என்று அனைவரும் அடங்கப் பேசுவர். இங்கும் அறிவறிந்து என்ற தொடரையே வள்ளுவர் ஆளுவர்.

இத்தொடர் அழகு கண்டிருந்தால், 'அறிவறிந்த' என்ற தொடருக்குப் பரிமேலழகர் 'பொய்ப்பொருள்' கண்டிருக்க முடியுமா?

'குடிக்கு விளக்காகிய புதல்வன்' என்ற அகப்பாட்டு, குடித்தலைமையை ஆண் மகனுக்குத் தனிப்பிரித்துச் சுட்டு கிறது. இக்கொள்கை பழந்தமிழர் கொள்கை. வள்ளுவருக்கும் உடன்பாடு. ஆகவே மக்கட்பேறு அதிகாரத்தில் மூன்று குறள்களில் 'மகன்' எனப் பிரித்தே பேசுகிறார். குடித்தலைமை ஆண்மகனுக்குரியது என்று உடன்பட்டதாலேயே, பெண்ணை 'வாழ்க்கைத்துணை' என்றார் வள்ளுவர். குடிப்புகழுக்குப் புதல்வன் தலைமை புறவுலக அடிப்படையில் காரணமாகிறது. ஆகவே, 'மக்கட்பேறு' என்ற அதிகாரம், பொதுவாக இருபால் மக்களையும் குறித்து ஏழு குறள்களிலும், மகனைப் பிரித்து மூன்று குறள்களிலும் பேசுகிறது. புதல்வன் என்ற சொல் குறளில் இல்லை. இவ்விளக்கத்தால், முன்பு இதுபற்றிய அருமையான விளக்கங்கள் பல்வேறு அறிஞர்களால் தரப்பட்டிருப்பதால், பரிமேலழகர், புதல்வரைப் பெறுதல் என்று அதிகாரத் தலைப்புக் கொண்டது, இடனுணர்வில்லாக் கல்வியால் ஏற்பட்ட பிழை என்பது தெளிவு. இப்பிழைக்குக் காரணம், அறிவு பெண்ணுக்கு வேண்டாதது என அவர் கொண்ட உய்த்துணர்வில்லா விளக்கமே காரணம் என்றும் கண்டோம்.

குறள் முரணுடை நூலா?

பரிமேலழகர் கண்ட உரையில், கற்குமுறைக் குற்றம் காரணமாகப் பெருவிபரீதம் விளைந்ததை மேலே கண்ட நாம், உய்த்துணராது கற்றால் குறள்களுள் பெருமுரண் உண்டென மயங்க வேண்டியிருக்கும் என்பதற்கும் ஒரு சான்று காண்போம்.

'இடனறிதல்' என்ற வள்ளுவர் அதிகாரம், பெரும் பான்மையும் செயலுக்கு உரியதேனும், நூலுண்மை காணும் நோக்கில், சிந்தனைக்கும் அது உரியதாகும். இதனைத்தான் குமரகுருபரர் 'இடனுணர்ந்து' பொருள் கொள்ளாதபோது கல்வி இடர்ப்படும் என்பார்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். (404)

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (1046)

இம்மூன்று குறள்களையும் நுணித்து நோக்குவோம். இம்மூன்றும் பேச்சுப் பற்றியன. அறிவுக்கு இலக்கணம் ஆவது, யார் கூறினாலும் கூறியதன் மெய்ப்பொருள் காண்பது ஆகும் என முதற்குறளில் பொதுப்படப் பேசுகிறார். 'யார் யார்வாய்க் கேட்பினும், என்ற அழுத்தத்தால், சொல்வார் யார் என்பது கருத்தில்லை; சொல்லும் பொருளினது உண்மை காண்பதே அறிவு என விளங்கிக் கொள்கிறோம். அடுத்த இரண்டு குறள்களிலும், சொல்லுவான் கல்லாமை நோக்கியும், இல்லாமை நோக்கியும் சொல்லும் பொருள் சோர்வு படுவதைக் காட்டுகிறார். 'யார் யார்வாய்க் கேட்பினும்' எனப் பேசிய உணர்ச்சிக்கு இது முரணல்லவா? கல்லாதான் கருத்தை அறிவுடையார் ஏலார் என்றும், நல்கூர்ந்தான் பேச்சு சோர்வு படும் என்றும், முன் சொன்னதற்கு முரண்பட்டல்லவா பேசுகிறார்? என்ற சிந்தனை ஆழ்ந்து கற்றால் எழுந்தே தீரும்; எழ வேண்டும். இக்குறள்களில் உண்மையில் முரண்பாடு உண்டா? அல்லது முரண்பாடு காணும் நம் சிந்தையில் முரண் உண்டா? என்று கண்டாக வேண்டும்.

வேறு பல குறள்களுக்கு விளக்கம் தரும் போது, பரிமேலழகர் போன்றோரும், கருத்து முரண்பாடின்மையைக் காட்டிச் செல்வதைக் காண்கிறோம். இக்குறள்களில் அத்தகைய ஆய்வு உரையாசிரியர்களால் செய்யப்பட வில்லை.

வள்ளுவர், மக்களினம் நோக்கி, அவர்தம் பல்வேறு நிலை நோக்கி, வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறார். அன்றியும் அவர் வகுக்கும் அறங்களும் பல்வேறு பட்டன. அறிஞர்க்கும், கல்லார்க்கும், இல்லார்க்கும் நெறிகாட்டும் கடப்பாடுடையார் வள்ளுவர். மெய்ப்பொருள் காண முந்தும் முந்திய அறிவினார்க்கு முதற்குறளில் வழிகாட்டிய வள்ளுவர், பிற்குறள்களில் கல்லார்க்கும், இல்லார்க்கும், கற்றுயரவும், பெற்றுயரவும் வழிகாட்டுகிறார் என இடங் கண்டு பொருள் விளங்கிக் கொண்டால், முரண்பாடு விலகும். இதனைத்தான் குமரகுருபரர், 'இடனுணர்ந்து கற்கவேண்டும்' எனக் கற்குமுறை கழறினார். மெய்ப் பொருள் காணும் நோக்கினர்க்கும் கல்லார்க்கும் இல்லார்க் கும் எனப் பல்வேறு நிலைப்பட்டார்க்குச் சொன்ன வழிகள் ஒன்றாக இருத்தல் இயலுமோ? ஊமையர்க்குச் சொல்வன்மை பற்றியும், செவிடர்க்கு இசையின்பம் பற்றியும் உரைப்பதால் பயனில்லை. அவரவர்க்கு வேண்டும் வழி காட்டல் வள்ளுவர் கடன். ஆகவே, மெய்ப்பொருள் காண்பாரை நோக்கி, ஆள் நோக்காது கருத்து நோக்கி உண்மை காணத் தூண்டினார். கல்லா தானை நோக்கி, அவன் நுட்பம் உலகில் எடுபட வேண்டு மானால் கற்க முந்துக என்றார். நல்கூர்ந்தார்க்கு அவர் சொற்பொருள் சோர்வுபடுவது காட்டி, வறுமை ஓட்ட அயராதுழைக்க வலியுறுத்தினார். கெட்டார்க் குலகில் நட்டாரில்லை என்ற உலகியல் சுட்டத் தவறினால், வள்ளுவரை வாழ்வுநூற் புலவர் எனப் போற்று

வோமா? ஆகவே இடனுணர்ந்து பொருள் கொண்டால், யார் யார் வாய்க் கேட்பினும் என்ற முன் கருத்தோடு, கல்லாதான் நுட்பத்தை அறிவுடையார் கொள்ளார் என்றும், வறியவன் சொற் சோர்வுபடும் என்றும் உரைத்த உலகியலுண்மைகள் முரண்பட மாட்டா என்ற தெளிவு பிறக்கும். இத் தெளிவு, யாருக்கு வள்ளுவர் சொன்னார் என இடனுணர்ந்து பொருள் கொள்ளாதவரை, பிறக்காது காண்க.

வள்ளுவர் உள்ளம்

நடைநலம்

ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறள்களும் வள்ளுவர் உள்ளத்தை விளைநிலமாகக் கொண்டு வளர்ந்த பயிர்களே. அவ்வெல்லாம், மனிதவாழ்வில், ஏதேனும் ஒரு சூழலில், யாராயினும் ஒருவருக்கு வாழ்வாங்கு வாழ வழி காட்டும் வலிமையுடையனவே. அவையெல்லாம் தனித்தனி கற்கத் தக்கவையே எனினும், ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் படிப்பதாலும், அக்குறள்களுக்கிடையே பொதுநீர்மையாய் ஓடும் உணர்வுகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதனாலும், வள்ளுவர் வலியுறுத்தும் செய்திகளைத் தனிப்பிரித்துப் பார்க்க இயலும் தலையாயது எது என உணரவும் இயலும். 'யாகாவாராயினும் நாகாக்க', 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை', 'அறிவினுள் எல்லாம் தலை', 'எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை', 'யாண்டும் வேண்டாமை ஒழிப்பது இல்', 'இன்மையுள் இன்மை, வன்மையுள் வன்மை, பேதையிற் பேதை' எனவரும் வள்ளுவர் நடையினை நுட்பமாக நோக்கினால், பலபேசிய வள்ளுவர் சில சிறந்தன என்று பிரித்துக்கூறும் நுட்பத்தை உணரமுடியும். காக்கவேண்டிய பலவற்றுள் நாவினைக் காத்தல் சிறந்தது; நூலோர் தொகுத்த அறங்கள் பல வற்றுள் பகுத்துண்ணல் தலையாயது எனவாங்கு பொருள்

களைப் பிரித்துப் பேசும் நடைநலமுணர்ந்து குறள் கற்பதே, வள்ளுவர் உள்ளமறிந்து குறள் கற்பதாகும்.

பசிக்கொடுமை

இம்முறையில் வள்ளுவர் உள்ளங்காண முந்தும் நாம், முதற்கண் 'நாடு' என்ற அதிகாரத்தைச் சிந்திப்போம். இவ்வதிகாரத்து முதல் மூன்று குறள்கள் சேர்வதுநாடு விளைவதுநாடு, தேர்வதுநாடு என்று முடிவு பெறுகின்றன. நாட்டின் இன்றியமையாத் தேவைகளை இவை பேசு கின்றன எனப் பொதுவாக உணர்கிறோம். அடுத்த இரண்டு குறள்கள் சேராதியல்வது நாடு, இல்லது நாடு என முடிவு பெறுவதால், இக்குறள்கள் நாட்டில் இருக்கத் தகாதவைகளைப் பேசுகின்றன எனவும் பொதுவாக உணர் கிறோம். இங்கு எடுத்த பொருளை முறைப்பட எண்ணி வகுத்துரைக்கும் வள்ளுவர் ஆற்றல் வெளிப்படுகிறது. இப்படிப் பொதுப்போக்குத் தெரிந்ததும், தனிப்போக்குத் தெரிய முயல வேண்டும். நாடு பலவற்றைப் பெற வேண்டும்; பலவற்றைப் பெருதொழிய வேண்டும் எனக் கூறுகிறார். அவற்றுள் சிறப்பாக வேண்டுவது எது, வேண் டாதது எது எனவும் அறிய முற்பட வேண்டும். ஒரு குறள் சேர்வது நாடு என முடிகிறது. ஒரு குறள் சேராதது நாடு என முடிகிறது. இரண்டிடங்களிலும் மும்மூன்று பொருள் கள் பேசப்படுகின்றன.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (731)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (734)

சேரவேண்டிய மூன்றனுள் தலையாயது உணவு; சேர வேண்டாத மூன்றனுள் தலையாயது பசி. நாடு என்ற

பரந்துபட்ட பொருள் ஒன்றைப் பேசும்போதும், நாட்டுக்கு இலக்கணம் பேசும்போதும் வள்ளுவர் உள்ளம் கண்டு நடுங்கும் கொடுமை பசிக் கொடுமையே. பசித்திருப்போ ரைக் கண்ட வள்ளுவர் உள்ளம் கரைந்து உருகுவதைக் காண்கிறோம். இன்மையே இன்னாதது என்ற தேற்றேகார நடையில் வைத்துக் கொடிய துன்பத்துள் துன்பம் வறுமை எனப் பேசி, 'நல்குரவு'க்குத் தனி அதிகாரம் கண்டவர் வள்ளுவர். 'நல்குரவு', 'இரவு' என்ற இரு அதிகாரங் களிலும் நாம் அவர்தம் குறள்களைக் காணவில்லை; அவர் உள்ளக் குமுறல்களையே காண்கிறோம். உணர்ச்சிப் பிழம் பாக வள்ளுவர் மாறிவிடும் இடம் இதுவே. 'இன்மை என ஒரு பாவி' என வயிறெரிந்து வறுமையைத் திட்டுகிறார். 'பசி என்னும் தீப்பிணி', 'கொன்றது போலும் நிரப்பு'— எல்லாத் துன்பங்களின் பிறப்பிடமும் வறுமைதானும். நல்குரவு தாய்ப் பார்வையையே திரித்துவிடும் என்று அத் துன்பத்தின் எல்லையைச் சுட்டுகிறார்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. (1048)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. (1049)

பசித்தவன் தவிக்கும் தவிப்பை இதனினும் சிறப்பாக உணர்த்த முடியுமா? பொல்லாத இல்லாமைக் கொடுமை குறித்துப் பேசாதவர் யார்? சாத்தனார் பேசினார்; புறநானூற்றுப் புலவர்கள் உரைத்தனர்; சமணமுனிவரும் சாற்றினர். வள்ளலார் வற்புறுத்திப் பேசினார். ஆனால் யாரும் வள்ளுவர் பேசிய அளவு உணர்ந்தாரில்லை, உரைத் தாரில்லை என்று கூடச் சொல்லாம். 'இரவு'க்குத் தனியதி காரம் கண்ட புலவரை உலகத்துப் பார்க்க முடியுமா? இது ஒன்றுக்கே 'புரட்சிப் புலவன்' எனப் புதுப்பட்டம் சூட்ட

லாம். இல்லாது அல்லலுறுவோர் இடும்பை கண்டு துடித்த நல்லோருள் தலைமையானவர்—மணிமுடி வள்ளுவர்.

இரக்க வழிகாட்டிய ஒரே புலவர்

'இரக்க இரத்தக்காரிக் காணின்' என இரக்க ஏவுகிறார் வள்ளுவர். அதற்கும் ஒருபடி மேலே போய், 'இன்பம் ஒருவற்கு இரத்தல்' என்றார். பின்பு அதற்கும் ஒருபடி போய் 'இரத்தலும் ஈதலே போலும்' என்கிறார். அது மட்டுமா? இரப்பும் ஓர் அழகுடைத்தாம். இரப்பார்க்கு இசை பாடிய புலவர் புவிக்குள்ளே வள்ளுவர் ஒருவரே. இரப்பதற்கு வழிகூறப் புகுந்து 'வெகுளாமை வேண்டும்' என அறிவுரையும் பகர்கின்றார். பசியால் வாடுவார் துன்பத்தை வள்ளுவர் எவ்வளவு உணர்ந்திருந்தால், அவருக்காக எவ்வளவு வருந்தியிருந்தால், இரப்பதற்கு வழி காட்டியமைவார். 'இ ர வு' இழிந்ததென்று தெரியாதவரா வள்ளுவர்? இரவின் இழிவினைச் சுட்டுவதற்கும் பத்துக் குறள்கள் பாடியிருக்கிறாரே.

> ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
> இரவின் இளிவந்தது இல். (1066)

இழிவுக்குப் பேரெல்லை வகுத்துக் காட்டி, இரத்தலை வெறுக்கும் வள்ளுவர், இரத்தற்கு வழியும் காட்டியிருப்பது வியப்பாகத் தோன்றும். பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் வ ஞ் ச க ரா வள்ளுவர்? நினைத்துப் பார்க்க வேண்டிய இடம் இது. முன்னுக்குப் பின் முரண் என்று துணியத் தகுமா? இரவும், இரவச்சமும் அடுத்தடுத்த அதிகாரங்களல்லவா? இங்குதான் வள்ளுவர் உள்ளத்தை நம்மால் உணரமுடியும். நுகர்தற்குரிய பொருள்கள் இல்லாமையால், அரிய இம்மனிதப் பிறப்பை மாய்த்துக் கொள்ளவேண்டும் என, உலகம் ஓம்ப முடியா

வெற்று அறம் பகர்தல், கற்றுத்துறை போகிய வள்ளுவப் பெருந்தகைக்குக் கடைபோகா அறமாகப்படுகிறது. வாழப் பிறந்த மனிதஇனத்துக்குச் சாகச் சிறந்தவழி வறுமை எனக் காட்டுவது நல்லறமாகுமா? பசித்துன்பம் கடத்தற்கு வேறு வழி இல்லாதபோது, 'இரக்க' என்கின்ருர். உள்ள வழி அது ஒன்றே என்ற இறுதி நிலையில், இரக்கலாம் என அனுமதி வழங்கும் வள்ளுவர் உள்ளம் மிகப்பெரியது. ஆனால் அவ்வனுமதி தரும்போது, 'இரத்தக்கார்க் காணின் இரக்க' எனக் கூறுகிருர். இரக்கலாம்; ஆனால் இரத்தற் குரிய தகுதியுடையாரிடத்தில் மட்டுமே இரக்கவேண்டும் என விதிக்கிருர். உயிர்காக்க இரக்கலாம்; ஆனால் மானங் காக்கும் மதியுடையாரிடம் மட்டுமே இரக்கலாம் என்கிருர். உயிரையும் மானத்தையும் உடன்காக்க முயலும் வள்ளுவர் வழி கோடிபெறும். தலைவன் உயர்ந்தவன்; தலைவி அவனைச் சார்ந்தவள். இது பொது நீதி. தலைவி உயர்வும் தலைவன் பணிவும் ஊடற்காலத்து மட்டும் பொறுக்கத்தக்கது எனக் கூறுவது, தொல்காப்பியர் தனிநீதித் தத்துவம். உழைத்து உண்ணல் பொதுநீதி; அது மாட்டாதபோது, மறுக்காத வரிடத்து மட்டும் மானந்திராத வகையில் இரந்து அப் போதைக்கு உயிர் காக்கலாம் என்பது வள்ளுவர் வகுக்கும் தனிநீதி. இத் தனிநீதித் தத்துவத்தில் தானே அவர் உள்ளத்தின் உயர்வு விளங்கித் தோன்றுகிறது. ஊடற் காலத்துப் பணிவதால், தலைவன் தகுதி குறைவதில்லை. அது போலப் பசிக்காலத்துத் தக்காரிடத்து இரப்பதால் இரப் பார் மானம் போவதில்லை. இரவு இழிந்ததுதான்? ஏன்? மானங் குறைப்பதால். மானந்தீர்க்காத இரவு ஒன்று இருக்குமானல், அதனை ஏற்பதில் தடை என்ன? இரக்கும் போது, இரப்போரை வெறுத்து, உள்ளதை மறுத்துக் கரத்தலைச் செய்வதனால்தானே இரவு இழிந்ததாகிறது. அத்தகையாரை விட்டு, இரப்பார் துன்பத்தை யுணர்ந்து'

உள்ளதை மறைக்காத—மறுக்காத உத்தமரிடம் இரப்பதால், இரவு கேவலமாவதில்லை. இரப்பவர் கேவலப்படுத்தப் படுவதும் இல்லை. அதனால்தானே வள்ளுவரே இரக்கிறார்; அதிலும் 'இரவச்சம்' என்ற அதிகாரத்தில் இரக்கிறார்.

> இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
> கரப்பார் இரவன்மின் என்று (1067)

கரக்காதவரிடத்துச் சென்று இரத்தல் பழியில்லை; அப்படியே அவர் உள்ளதை மறைத்தாலும்—மறுத்தாலும் பழி அவர்க்கே, இரந்தவனுக்கில்லை என்கின்றார். என்னே வள்ளுவர் உள்ளத்துயர்வு!

எங்கெங்கு காணினும் ஈகையடா

வள்ளுவர் உள்ளம் நிறைந்து நின்றது இவ்வுணர்வே என்பதனை, மேற்பேசிய ஓரிரண்டு அதிகாரக் குறள்களை மட்டும் வைத்து முடிவெடுத்ததாக எண்ணிவிட வேண்டாம். நூல் முழுக்க, வள்ளுவர் இவ்வுணர்வை அதிகாரந் தோறும் காட்டிச் செல்கிறார். சில காட்டுகளைக் கண்டு தெளிவோம். இல்லறவியல் முழுக்க இச்சிந்தனை பரவிக் கிடக்கிறது; பொருட்பால் முழுக்கப் பரந்து விரிந்து கிடக்கிறது. காமத்துப் பாலிலும் கலந்து கிடக்கிறதென்றால் பேசுவானேன்?

குறளின் பல பகுதிகளிலும் பரவிக்கிடக்கும், இவ் வள்ளுவர் மனப்போக்கு வறுமையின் கொடுமை பேசும் வகையிலும், கொடுப்போர் உயர்வு பேசும் வகையிலும், கொடாதார் தாழ்வு பேசும் வகையிலும் என மூன்று அடிப் படைகளில்எதிரொலிப்பதைக் கேட்கலாம். யாதொன்றைப் பேசும்போதும், அவர் நூல் மேற்குறித்த மூன்று அடிப் படைகளில் ஒன்றைப் பற்றியே நவில்கிறது. செருக்குடைய செல்வன் எச்செய்தி பேசினாலும் அவன் பேச்சில் அவன்

செல்வச் செருக்கு எதிரொலிக்கும். பசியுடைய வறுமையாளன் எது பேசினும் அவன் பேச்சில் இல்லாமை எதிரொலிக்கும். அதுபோல வள்ளுவர் எதுபேசினும்—அது பொறையாயினும், காமத்தின் நிறையாயினும் —இல்லாமையின் தொல்லையைச்சொல்வார், அல்லது ஈவாரின் புகழ்எல்லையைச் சொல்வார். வள்ளுவரின் உள்ளம் சுற்றிச்சுழன்று கொண்டிருக்கும் இடம் இதுவே.

ஈவார்க்கே புகழ் !

தொழில்களுள் எல்லாம் தலையான தொழிலை 'உழந்தும் உழவே தலை' எனப் புகழ்கின்றார். உழவு ஒன்றை மட்டுமே தொழிலாகப்பேசி எல்லாத் தொழிலும் அதனுள் அடங்கியதை உணர்த்தினர். சொல்லேருழவர், வில்லேருழவர் எனப் புலவரையும், வீரரையும் பேசி, உழவர் இன்றேல் அவர்க்கும் வாழ்வில்லை என்பதை உணர்த்திக் காட்டினர். 'உழுவார் உலகத்தார்க் காணி' என அவர்தம் உயர்வைக் காட்டினர். உயர் தொழிலாளராம் உழவர் குடியினர் உயர்வைக் குறிக்குங் காலத்தும், வள்ளுவர் உள்ளம் எண்ணுவது யாரை?

> இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது
> கைசெய்தூண் மாலை யவர். (1035)

உழவர்க்கு மாலை சூட்டி வள்ளுவர் உவக்கக் காரணம், இரப்பார்க் கொன்றீயும் திறம் அவருக்குரியது என்பதனுலன்றோ? புகழ், ஈவார் மேல் நிற்கும் என்பதை வள்ளுவர் எல்லா இடத்தும் காட்ட முற்படுவர்.

உலகத்தார்க்கு ஆணியாகிய உழவரிடை ஈவோர் பெருமையைக் கண்டவர், உலகத்தார்க்கு இறையாகிய மன்னர்தம் மாட்சி பேசும்போதும் அதனையே காண்கிறார். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் நான்கும்

வேந்தர் இயல்பென்றார் (382). இன்சொலால் ஈத்தளிக்க வல்லாரே உலகாளும் நல்லார் (387) என ஈந்து மகிழ்வோர் ஏற்றம் பேசுகிறார். வேந்தருள் ஒளிமிக்கோன் கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையோனே (390) என அடுக்கிய நான்கினுள் முடிமணியாகக் கொடையையே சொல்லப் பார்க்கிறோம். நாடாளும் மன்னன் முதல், நிலமாளும் உழவன் வரை கொடுப்போர்க்கே புகழ் எனப் பேசுவது வள்ளுவர் வாய்மை.

> **வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
> **மிச்சல் மிசைவான் புலம்.** (85)

'உழவு அதிகாரத்து மட்டுமன்று; உள்ளதை விருந்தினர்க் களித்து எஞ்சியதை, உண்பார் நிலத்திற்கு வித்தும் இட வேண்டியதில்லை என, 'விருந்தோம்பல்' அதிகாரத்தும் புகழ்வார். பகுத்துண்ணும் பண்புடையானைப் பசிப்பிணி தீண்டாது என வாழ்த்தும் வழங்குகிறார். இல்வாழ்வது எதற்கு என வினாத் தொடுத்து, வேளாண்மை செய்தற்கு என விடையும் கூறுகிறார். உடையார்தம் செல்வம் உலகுக்கு உதவும் போதுதான், அவரை வள்ளுவர் வாழ்த்துவர். இன்றேல் அவர்தம் செல்வ இருப்பை மட்டும் ஒருநாளும் விரும்பியவரல்லர். 'பொருட்செல்வம் பூரியர் கண்ணும் உள' என எடுத்தெறிந்து பேசும் வள்ளுவர், அவர் பொருள் ஊருக்குதவுமாயின் அதனைப் போற்றத் தவறியதில்லை. செல்வப் பயனின் உண்மையை யும், இன்மையையும் உணர்த்தவே இருவேறு அதிகாரங் களை எதிர் எதிராக வைக்கின்றார். ஒன்று ஒப்புரவறிதல்; மற்றையது நன்றியில் செல்வம்.

ஈயார்க்கு இகழே

> **பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
> **நயனுடை யான்கண் படின்** (216)

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று (1008)

குறள் கற்பார் இவ்விரண்டு குறள்களையும் ஒப்பிட்டுக் காண வேண்டும் என்பதே வள்ளுவர் நோக்கம். ஆதலின் ஈவார் புகழ்பாடவும், ஈயார் இகழ் கூறவும் ஒத்த தொடர்களை ஆள்கிறார். இரண்டு குறள்களிலும் ஆளப்பட்டுள்ள தொடர்களை நோக்குக. நயனுடையான் செல்வம்; நச்சப் படாதவன் செல்வம். பயன்மரம் பழுத்தற்று: நச்சுமரம் பழுத்தற்று. உள்ளூர்; நடுவூர். இருவருக்குமே பழுத்த மரங்களை உவமை செய்கிறார். இரண்டு மரங்களுக்கும் எத்துணை வேறுபாடு? பயனுள்ள பழுமரம் பயன்படும். நச்சுமரம் பயன்படாமை மட்டும் அன்று; பெருந்தீங்கும் விளைவிக்கும் அதுபோல ஈயார் செல்வம் யார்க்கும் பயன் படாதது மட்டுமின்றி, பெருந்தீங்கு புரிவதையும் எடுத்துக் காட்டுகிறார்.

கொடுப்பாரைப் பாராட்டும் நிலையில் வள்ளுவர் உள்ளங் காண்பதைவிட, கொடாரை ஏசும் நிலையில் அவர் உள்ளங் காண்பது எளிது.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (160)

அழுக்காற்றினை வெறுக்கும் வள்ளுவர், கொடுப்பது அழுக் கறுத்தலை அறவெறுத்துப் பேசுதலைக் காண்கிறோம். குற்றம் புரிந்தவனை மட்டும் குறைகூறி அவனுக்குக் கேடு வரும் என அச்சுறுத்துவதே பிறவிடங்களில் வள்ளுவர் போக்கு. இங்குமட்டும், அவன் மட்டும் கெடுவான் என்றாரில்லை? சுற்றத்தொடும் கெடுவான் என்கின்றார். கொடாதாரை அவர் கெடுவர்என்றும்,அவர் செல்வம் கெடும். என்றதோடு கொடுப்பது அழுக்கறுப்பானை மட்டும் சுற்றத் தொடும் கெடுவான் எனப் பேசியது நினைக்கத் தக்கது: அவர்

உள்ளம் உணர்த்துவதுமாகும். கொடுப்பதழுக்கறுப்பானைக் கெடுவான் என்றதனினும், அவன் கெடுமுறையைச் சொன்னது, அவன் கொடிய உள்ளத்தைக் கடிதின் உணர்த்துகிறது. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' என்கின்றார். இங்கு ஈகையின் நோக்கத்தையும் உடனுணர்த்தி விடுகிறார். 'ஊணுடை எச்சம் உயிர்க் கெல்லாம் வேறல்ல (1012)' எனவும், 'ஊனைக் குறித்த உயிரெல்லாம் (115)' எனவும், மக்களினம் அனைத்துக்கும் இன்றியமையா அடிப்படைத் தேவைகள் பொதுவானவை எனப் பொருட்பாலினும் சுட்டுவார். உடையும், உணவும் யார்க்கும் இன்றியமையா அடிப்படைத் தேவைகள். அவற்றின் கொடையே மானங் காக்கும், உயிர்காக்கும், உயர்வுடையது. இத்தகு கொடைகள் எல்லாராலும் செய்யவும் தகுவது. இவ்வடிப்படைத் தேவைகளை ஒருவன் பெறுதற்கும் தடையாகும் வகையில் அழுக்கறுப்பான் உண்மையில் கடையவருள் எல்லாம் கடையவனே. தானும் உதவான்; பிறர் உதவவும் உடன்படான்—அவன் என்னென்ன வகையில் ஒருவனுக்குக் கேடு சூழ்ந்தானோ அன்னன்ன வகையில் அவனும் அவன் சுற்றமும் கெடும் என்பதுவே வள்ளுவர் கருத்து. வள்ளுவர் வெறுப்போருள் எல்லாம் அறவெறுப்போர் பிறர் கொடுப்பதையும் விரும்பாது பொறாமை கொள்வாரே. தானும் கொடாது, பிறர் கொடுப்புக்கும் தடையாவார், தானும் கெட்டுத் தன் சுற்றத்தையும் கெடுப்பர் என்பதுவே உயர்ந்த உள்ளங் கொண்ட வள்ளுவரின் சாபம்! எண்ணிப் பார்ப்போம். நூல் முழுக்கப் பலரை ஏசுகிறார் வள்ளுவர். பயனில் சொல் சொல்பவனை மகன் எனல் வேண்டாம், பதர் என்க என்பார். நாண் இல்லார் மரப்பாவை அன்னர்; பண் பில்லார் மரம் ஒப்பார்; வாயுணர்வு ஒன்று மட்டுமே உடையார் வாழினும் வீழினும் ஒன்றே; சொல்வேறு

செயல்வேறு பட்டார் கனவிலும் நினைக்கத் தகாதவர்; கள்ளுண்பவர் நஞ்சுண்பவரே; பெண்வழிச் சேர்ந்தார்க்குப் பெருமையில்லை. இங்ஙனம் நூல் முழுக்க வள்ளுவர் வெறுக்கும் கீழ்மக்கள் பலர். ஆனால் ஈயாரையும், ஈவார்க்குத் தடையாவாரையும் வள்ளுவர் வயிறெரிந்து சாபமிடுவதுபோல் வேறு யாரையும் வையக் காண்கிலோம். ஈயாத புல்லரை ஏசும்போது வறிதே அவரைச் சுமந்து நிலம் வருந்துகிறதே என வள்ளுவர் வருந்துகிறார் (*1003*).

ஈயாக் கயவர்

குற்றம் புரிந்தோர் பலருக்கும் பலவகைத் தண்டனை இம்மையிலும் மறுமையிலும் உண்டு. ஆனால் ஈயாக்குற்றவாளிக்கு வள்ளுவர் விதித்த தண்டனை நம்மைத் திடுக்கிட வைக்கிறது. கீழ்மக்களை உலகினர்க்கு அறிமுகப்படுத்தத் தனியதிகாரம் கண்டு, அவர் கடையானவராதலால் பொருளதிகாரத்துக் கடைசியில் அவரைத் தள்ளினார் வள்ளுவர். மக்கள் மத்தியில் வராமல் ஒதுக்கப்பட வேண்டிய அவரை ஒதுக்கி இறுதிக்குத் தள்ளியமை நினைத்தின்புறத்தக்கது. அக் கயவருள்ளும், வள்ளுவரின் கொடுந் தண்டனைக் குரியவரான தனிக்கயவர் ஈயாக் கடையரே. வள்ளுவர் கண்ட கயவர் எண்வகையர். நெஞ்சத்து அவலமிலாக் கயவர்; விரும்பியதெல்லாம் செய்து வாழும் கயவர்; செருக்குடைக் கயவர்; அவர் உடைக் கயவர்; அறை பறையன்ன மறைபொருள் தூற்றும் கயவர்; பொறுமையுடைக் கயவர்; விரைந்து தன்னையே விற்றுவிடும் கயவர்; பிறர்க்குப் பயன்படாப் பொருளுடைக் கயவர் என எண்வகைக் கயவருள்ளும், வள்ளுவர் இருகுறள் ஒதுக்கியது ஈயாக் கயவருக்கே. பிற எழுவகைக் கயவரையும் ஒவ்வொருகுறளில் அறிமுகப்படுத்தியவர், ஈயாத புல்லர்க்கு மட்டும் இரு குறள் ஒதுக்கியதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

கொடுக்காமை குற்றமே

பிற கயவரை அவர்தம் இயல்பு காட்டி அறிமுகப் படுத்தி ஒதுக்கத் தூண்டிய வள்ளுவர், ஈயாக் கயவரை மட்டும் இனங்காட்டியதோடு நில்லாமல், அவர்க்குரிய தண்டனையையும் காட்டுகிறார். கொடாக் குற்றவாளி ஒருவருக்கே, பாதிக்கப்பட்டவர் நேரடி நடவடிக்கையினைச் சிபாரிசு செய்கிறார் வள்ளுவர்.

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு (1077)

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ் (1078)

கொடிறு உடைக்கும் கூன் கையர்க்கு மட்டுமே வழங்காக் கயவர் பயன்படுவர்; கரும்புபோல் கசக்கிப் பிழிவோர்க்கே கீழ்மக்கள் கொடுப்பர் என இரண்டிடத்தும், எடுத்துச் சொல்வார்க்குப் பயன்படாமல் பல்லுடைப்பார்க்கே பயன் படும் ஈர்ங்கை விதிராக் கயவர் இயல்பு கூறுதல், உண்மையில் நம்மைத் திடுக்கிட வைக்கிறது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யத் தூண்டும் வள்ளுவர், நன்று ஒன்றை மட்டும் நினைத்துத் தீமை மறக்கத் தூண்டும் வள்ளுவர். பிறர்க்குத் தீமை பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும் என்பவர், ஈயாத புல்லர்க்கு மட்டும், கொடிறுடைத்தல் தண்டனையும், கொலைத் தண்டனையும் விதிக்கிறார் என்றால் வியப்புத்தானே! கொடிறுடைப்பார்க்கே கயவர் கொடுப்பர்; கரும்புபோல் கொல்வார்க்கே கயவர் கொடுப்பர் என்ற தெளிவான நடை, கொடுக்காதவர் எவ்வளவு கொடுமையானவர் என்பதைத் தெளிவு படுத்தும். இதனினும் தெளிவாக, எங்ஙனம் வள்ளுவர் உள்ளங்காண முடியும்?

பகுத்துண்டு பல்லுயிரோம்பல்

செல்வப் பயன் சுட்டும் நோக்கத்தில் வள்ளுவர் பல பேசுகிறுர். கொடுத்தலும் துய்த்தலும் எனச் செல்வப் பயன் இரண்டு காட்டுவர். பின் குறித்த துய்த்தலைப் பலர் மேற்கொள்வர். இப்பயன் வள்ளுவர்நோக்கில் இரண்டாவ தாகவே எண்ணப்படுகிறது. முதலில் வைத்து எண்ணப் படும் தலையாய பெருமை கொடைக்கே உண்டு. இச் செல்வத் தலைப்பயனுய ஈகையைப் புறநானூற்றுப் புலவரும் 'செல்வத்துப் பயனே ஈதல்' என மொழியக் காண்கிறோம். தேற்றேகாரத்தால், பல பயன்கள் உண் டெனினும் தலைப்பயனும், முதற்பயனும் ஈகையே என விளக்கக் காண்கிறோம். இக்கொள்கையுடைய வள்ளுவர். செல்வப் பயன் குறிக்கும் நோக்கில், ஈகைப்பயன் தலையாயது என்று குறித்தது மட்டுமன்று, அறங்களுள் எல்லாமும் தலையாயதும் இதுவே எனத் தனிவிதந்து வியந்து பாராட்டக் காண்கிறோம்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (322)

இக்குறள் கொல்லாமை அதிகாரத்தது. பிற உயிர்களைப் போற்றிப் பேணும் வகையில், இக் கொடை இன்றியமை யாதது ஆதலின், இங்கு பகுத்துண்ணும் அறத்தை வலியுறுத்துகிறுர். பல அறங்கள் பேசும் வள்ளுவர் சில

அறங்களைத் தலையெனத் தனிப்பிரித்துப் பாராட்டுவர். 'அறிவினுள் எல்லாந் தலையென்ப (202),' எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை (300) எனவரும் குறள் நடையினைக் கூர்ந்து பயின்றால், இப்படிச் சில அறங்கள் விதந்தோதப் படுவது காணலாம். ஆயினும் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என ஓதப்பட்ட வேறு ஓரறம் குறள் முழுவதும் இல்லை என்பதில் ஐயம் எதுவும் இல்லை. வள்ளுவர் தன் முடிவினை மட்டும் வலியுறுத் தாது, பிற அறநூலோர் அனைவரும் உறுத்திச் சொன்ன உயர்பேரறம் இதுவே எனக் காட்டுகிறார். தவம், வாய்மை கொல்லாமை, வேண்டாமை முதலிய நான்கறங்களும் வள்ளுவரால் நனி பாராட்டப்படும் தலையாய அறங்கள் என்பதனைக் குறட்கல்வி தெளிவுபடுத்தும். இவ்வறங்களைப் புகழ்கின்ற காலத்தும், வேறு அறநூலாசிரியர்களை உட் படுத்தி அவரும் தலையெனச் சொன்னார் எனச்சுட்டவில்லை. கொல்லாமையறம் எல்லோராலும் போற்றப்படும் அற மன்று என்பதை நாம் உணர்வோம். இது கருதியே எல்லோரும் தலையென ஒப்பும் ஓரறம் ஈகையெனத் தெளிந்து, நூலோர் தொகுத்த அறங்களுள் எல்லாம் தலையெனக் குறிப்பதை நினைந்து பார்த்தால், வள்ளுவர் உள்ளம் பார்க்கலாம். "எப்பாலவரும் பயின்றுசொன்ன அறங்கள் எல்லாம் வள்ளுவரால் ஆயப்பட்டுள்ளன என்பதும், எல்லோரும் ஒக்கும் அறங்களைப் பக்குவமாகச் சொன்ன பாவலர் வள்ளுவர் என்பதும், கல்லாடர் நமக் கறிவுறுத்தும் நயமிகு செய்திகளாகும். எல்லாச் சமயவறங் களும் ஒக்கப் பாராட்டிய ஓரறம் ஈகை. சங்கப் புலவரும் இடைக்காலப் புலவரும், இன்றைப் புலவரும் ஒன்றாகப் பாராட்டும் தலையறம் ஈகை என்பதும் கருதத்தக்கது.

இவ்வறத்தை வள்ளுவர் மிகுத்துப் பேசும் களங்கள் பல. ஈகை யதிகாரத்தில்,

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" (227)

இக்குறளில் எல்லாரையும் ஈக என ஊக்குவார், பிறர் பசி தீர்க்கப் பகுத்தீந்தால், தம் பசி மாயும் என மக்கள் இயல்பறிந்து ஈகையறம் பேசுவார். இல்வாழ்க்கை அதிகாரத்தும்,

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்றும் இல்" (44)

இல்வாழ்வார் துணையாக நின்று காக்க வேண்டிய பலரையும் வகுத்தும் தொகுத்தும் கூறும் வள்ளுவர், பகுத்துண்டு பல்லுயிரோம்பின் இல்வாழ்க்கை எவ்வகையிலும் குறைப்படுதலில்லை என்பர். பகுத்துண்ணும் கடமையினை ஆற்றுதபோது, இல்லறம் பழிப்புண்ணும் என்பதையும், வசைதுடைக்கப் பகுத்துண்ணல் இன்றியமையாதது என்பதையும், இங்கு எடுத்துக் காட்டுவர்.

"மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" (222)

என்ற ஈகைக்குறளையும் ஈண்டு இணைத்து நினைக.

அறத்துப்பால் முழுக்க மூன்று இடங்களில் பகுத்துண்ணலைப் போற்றுவழி பழிநிகழும் என அச்சுறுத்தி ஈகையறத்தைப் பேசிய வள்ளுவர், பொருட்பால் முழுக்கவும் இவ்வறத்தின் ஏற்றத்தைப் பேசக் காண்கிறோம். குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தை மட்டும் இங்கு நினைப்போம். அறிவுடைமைக்கு அடுத்த அதிகாரம் இது. அறிவுடைமைக்கு அடையாளம் குற்றங் கடியவேண்டும் என்பது குறிப்பு. குற்றங் காத்தொழுகாதவனை அறிவுடையனுக வைக்காது வையகம். குற்றங் கடியும் போதும், வள்ளுவர் உள்ளம் செல்வக்குற்றம் புரிவோனையே பெரிதும் எண்ணுகிறது. குற்றங்களுள்

எல்லாம் தலையாய குற்றம், 'பற்றுள்ளம் என்னும் இவறன்மை' என்பது வள்ளுவர் கருத்து. பொருளிடத்துப் பற்றுக் கொண்டு அதனுன் ஈயாதொழுகும் இழிதக வுடையாரை ஏசும் வள்ளுவர் குறள், அவர் உள்ளத் தைப் பொக்கெனக் காட்டும். 'எற்றுள்ளும் எண்ணப் படுவதொன்றன்று' எனக் கண்ணேட்டமின்றிக் காய்தல் காண்க. 'தீயவை யாவையினும் சிறந்த தீயாள்' எனக் கம்பன் நடைப்படுத்துவது போலக் குற்றங்கள் யாவற்றினும் சிறந்த குற்றம் ஈயா இழிவு என உட்கொள்ள வேண்டும்.

''பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று'' (438)

அம்மட்டா?

'செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்' (437)

என ஈயாச் செல்வம்—செயற்பாலதாகிய கொடுத் தலைச் செய்யாது குற்றப்பட்ட செல்வம்—அழிந்தொழியும் என அச்ச முடிவு காட்டி, ஈதற்குத் தூண்டுவதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இங்ஙன் நூல் முழுக்க, எங்கும் எது பேசும்போதும் வள்ளுவர் உள்ளம் நிறைந்து கிடக்கும் ஈகையறம், தலையறம் என வள்ளுவரே விளக்கியமைகின்ருரெனினும், அவர் நூலகத்துச் சான்று கண்டு தெளிதலே சாலும். அறம், பொருள் இரண்டிலும் ஈகையறம் ஓங்கி நிற்றல் வியப்பன்று. இன்பம் பேசும் காமத்துப்பாலிலும், வள்ளுவர் ஈகையுள்ளம் ஓங்கி நிற்றலே எண்ண வேண்டிய இனிய செய்தி.

இருநூற்று ஐம்பது குறள்கள் காமத்துப் பாலுக்கு உரியன. இருபத்தைந்து அதிகாரங்களிலும் கலப்பற்ற

காமச்செய்தி பேசப்படுகிறது. வேறு செய்தியைக் காமத்தோடு கலந்து பேசல் பொருந்துவது மன்று. பிற மறந்து காமத்தால் ஒன்றி நிற்பதுவே காமந்துய்ப்பார் பெறும் இன்பம்; பயனுங்கூட. தனித்துத் துய்த்தற்குரிய இவ்வின்ப அதிகாரத்தில், எல்லாக் குறள்களிலும் கலப்பின்றிக் காமப்பொருளே பேசுகிறார். இதனை நான் வலியுறுத்திச் சொல்லக் காரணம், அறம் பொருட்பால்களில், ஓரறம் பேசும்போது ஒத்த வேறறங்களை உவமை மாட்டாயினும் உறழ்ந்து பேசுவது வள்ளுவர் இயல்பு.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை' (295)

வாய்மையறத்தின் உயர்வு காட்ட தவம், தானம் இரண்டையும் உறழ்ந்து பேசுவார்; உவமையில் அன்று.

'நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு' (408)

கல்லாமை அதிகாரத்து நல்லார்கண்பட்ட வறுமை உறழ்ந்து பேசப்படுகிறது. இவ்வதிகாரத்தும் கல்லாதான் இழிவு சுட்டும்போது காமப்பொருளையும் கலந்து உவமைவழிப் பேசுகிறார் (402).

'அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு' (135)

அழுக்காறுமை எனத் தனி ஓரதிகாரம் இருந்தும், ஒழுக்கமுடைமை அதிகாரத்து உவமைவழி அழுக்காறுமையை உறழ்ந்துபேசக் காண்கிறோம்.

'பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு' (532)

இவ்விடத்துப் பொச்சாவாமையில் நல்குரவுச் செய்தி கலந்து பேசப்படும்.

'கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு' (984)

இவ்விடத்துச் சான்றாண்மையில் கொல்லாமையின் இயல்பு இணைத்துப் பேசப்படும். இங்ஙன் உறழ்ந்து பேசும் இயல்பு காமத்துப் பாலில் இல்லை. காமப்பால் கலப் பில்லாப் பாலாக நிற்கிறது. எனினும் இங்கும் விதி விலக்கு ஓரதிகாரத்து உண்டு. அவ்விடமே வள்ளுவர் உள்ளங்காண உரிய இடம். அறம், பொருட்பால்களில் ஆயிரத்தெண்பது குறள்களில் பேசிய எல்லா மனிதகுல அறங்களையும் விட்டுவிட்டு, வள்ளுவர் உள்ளம் மக்கள் மனநலமும் உடல்நலமுங் காக்கும் காமத்தைக் கலப் பின்றிப் பேச முந்துகிறது; இம்முயற்சியில் வெற்றியும் பெறுகிறது. காமத்துப் பாலின் மூன்றாவது செய்தி யாய 'புணர்ச்சி மகிழ்தலில்' வள்ளுவர் தம்மையும் மறந்து அவர் உள்ளம் வெளிப்படுத்தி நிற்கக் காண் கிறோம். உள்ளம் பிணித்த ஒருத்தியோடு புணர்ந்து மகிழ்ந்த தலைவன் அக்கால இன்பத்தை மீண்டும் உள்ளத் தால் நினைந்து பேசுதல் புணர்ச்சி மகிழ்தல் ஐம்புல இன்பமும் இவள் ஒருத்தியிடம் பெற முடிகிறதே என முதலில் வியக்கிறான். இவளால் வந்த நோயை இவளே தீர்க்க வேண்டியிருக்கிறதே என, நோய் தீர்ந்த நிலையில் வியக்கிறான். இவள் தோள் தந்த இன்பத்தினும் உயர்ந்த இன்பத்தைத் தாமரைக் கண்ணான் உலகும் தர முடியாது எனத் தெளிகிறான். இப் புதுத்தீயை எங்கு பெற்றாள் என, விம்மிதம் அடைகிறான். இவள் தோள் அமிழ்தின் இயன்றனவோ என இறும்பூ தெய்துகிறான். (1101-1106) இங்ஙனம்—புணர்ந்த மகிழ்ச்சியில் பூரித்துப் பேசும் தலைமகன் உள்ளம், இணையில்லாக் காமவின்பத்தின் தலைமையை நினைத்துத் தடுமாறுகிறது. அப்போதும் அத்தலைமகன் உள்ளத்தில் இவ்வின்பத்துக்கும் இணையான

R. B. A. N. M's (Bifurcated) High School Bangalore - 560 042

இன்பம் வேறொன்றுண்டு என்ற எண்ணம் பிறக்கிறது. வள்ளுவர் தலைவன் பேசுகிறான்;

'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' (1107)

உவமையணி பூண்ட குறள் இது. உவமை பொருளினும் உயர்ந்ததாதல் வேண்டும். முயக்கம் பொருள்; தமது பகுத்துண்ணல் உவமை. ஆறு குறள்களில் இணையில்லா இன்பமாக முயக்க வின்பத்தைக் கருதினான் காதலன்; பின் தெளிகிறான். இவ்வின்பத்துக்கு இணையான வேறு ஓர் இன்பமும் உண்டு என்று இக்கருத்தைச் சொல்லும் குறளிலும், 'அம்மா அறிவை முயக்கு' என்ற அடியில், அரிவையொடு முயங்கிப்பெற்ற இன்பம் உரைக்க முடியாப் பேரின்பம் என்பதை, 'அம்மா' என்ற வியப்புச் சொல்லால் குறிக்கிறான். (இச் சொல்லை அம்மா எனப் பரிமேலழகர் பிரித்து, அழகிய மாமை நிற முடையாள் எனப் பொருள் கொள்வர்.) சொல்லமுடியாப் பேரின்பமாகிய முயக் கின்பத்தைச் சொல்லி விளக்கவேண்டுமானால், உவமையின் துணை நாடியாக வேண்டும். தம்முடைய இல்லத்தின்கண் இருந்து தம்பொருளைப் பகுத்துப் பிறரை ஊட்டித்தானும் உண்டு பெறும் இன்பம் அனையது என்பது உவமையின் விளக்கம். மிகச் சிறிய ஆறு சொற்களில் எண்ணற்ற எண்ணி மகிழத்தக்க பெரிய செய்திகளைச் செறித்து வைத்திருக்கிறார் வள்ளுவர். அறம் செய்தற்குரிய இடம் வீடு; அரிவையொடு முயக்கின்பம் பெறும் இடமும் வீடே. ஆதலின் தம்மில் இருந்து என்றார். பகுத்துண்ண முடியாத தனித்துண்ணும் இன்பம் தலைவி தோளின் முயக்கம். ஆனால் தம் செல்வப்பொருள் தனித்துண்ணத் தகாதது; கொடுத்துண்ணத்தக்கது. அன்றியும் உள்ளதை யெல்லாம் கொடுத்தவன் இன்பம் பெற முடியாது. பகுந்துக் கொடுத்து விட்டு எஞ்சியதை உண்பவனே உலக

நடையறிந்த உத்தமன் ஆதல் முடியும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவோன் பெறும் ஈத்துவக்கும் இன்பம் ஒன்றை மட்டுமே, மனேவி தோள் மருவிப் பெறும் இன்பத் துக்கு ஈடாகச் சொல்லமுடியும் என்ற குறள் கருத்து ஒன்று போதும். சிந்தித்துச் சிந்தித்துத் தழும்பேறிய வள்ளுவர் நெஞ்சில் நிறைந்து நின்ற தலையறம்—ஒப்பற்ற ஒரு பேரறம்—ஈதலறமே என்பதற்கு இக்குறளே சாலும். அடுத்து, கலப்பில்லாக் காமவறம் பேசி வருகையில், ஒரு கலப்பு நிகழ்ந்து விட்டதும், துணிவு வந்து விடுகிறது வள்ளுவர்க்கு, மற்ருெரு மீறலேயும் உடன் செய்து விடுகிருர்.

> 'அறிதோறு அறியாமை கண்டற்ருல் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு (1110)

என அறிவுக் கருத்தொன்றையும் கலந்து விடுகிருர். பின் வரும் இருபத்திரண்டு அதிகாரங்களிலும் கலப்பு நிகழ வில்லே.

இனேயில்லாப் புணர்ச்சி இன்பத்திற்கு இணேசொன்ன தலேவன், வள்ளுவர் கண்ட புதுத்தலேவனே. எப்புலவர்க் கும் இத்துணிவு பிறந்ததில்லே. புணர்வு இன்பத்தொடு இணேக்கத்தக்க உணர்வு வேருென்றில்லே என்பதுவே, புணர்ந்த காலத்துத் தலேவனின் உள்ளமாக இருக்கும். வேறு உணர்வு இடையிட்டால், புணர்வு முழுமை பெற வில்லே என்பதுவே கருத்து. தலேமைக்குக் குறை நிகழ்ந்த தாகவும் கருதக்கூடும். வேறு உணர்வுக்கு இடமின்றி ஒருணர்வே நீக்கமற நிறைந்திருக்கவேண்டிய இடத்தில், வேறு ஒருணர்வு வந்து இடைபுகுகிறது என்ருல், அவ் வுணர்வு வலியது, சிறந்தது, ஆற்றல் மிக்கது என்பதனேச் சொல்ல வேண்டுவதில்லே. 'மாதுதரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக் கீடில்லே' என்ற பாவேந்தர் பாட்டும், 'குடும்ப

விளக்கில்' படுக்கைக் காட்சியில், கட்டிலண்டை, மங்கை மணாளனுக்குச் செந்தமிழ்த் தொண்டைச் சிந்தைக்கு விருந்தாக்குவதும், காமத்துய்ப்புக் காலத்தும் மறக்க வொண்ணாத—மறக்கக்கூடாத—பேருணர்வு செந்தமிழ் முன்னேற்றம் என்ற பாவேந்தர் உள்ளத்தைப் பொருக் கெனக் காட்டும். இணையற்ற வீரனாக இரணியனை எடுத் தியம்புவான் கல்வியிற் பெரிய கம்பன். ஊடற்காலத்தில் படுக்கைக்களத்தில் தலைவிக்குப் பணிதலால் தலைமைக்குக் குற்றமில்லை என இலக்கணமே விதிவிலக்குத் தந்திருக் கிறது. எனினும் அங்கும் தலைவணங்காதவன் இரணியன் என்ற கம்பன் பாட்டு, இரணியனை ஆட்கொண்டிருக்கும் பேருணர்வு வீரமே என்பதனை விதந்து காட்டும். அது போன்று, வள்ளுவரின் காமத்தலைவனும், இணையில்லை காமவின்பத்துக்கு என்று பேசிவிட்டு, மேலும் சிந்தித்துப் பகுத்துண்ணல் ஒன்றுமட்டுமே அதற்கு இணையாகும் என்று பேசுகிறான். இப்பேச்சு, பகுத்துண்டு பல்லுயி ரோம்பும் அறத்தை வள்ளுவர் போற்றும் பெற்றியைத் தெற்றெனக் காட்டும். காமக்காலத்தும் மறக்கவொண்ணா மாண்புடையறம், தலையறம் ஈதலறம் எனத் தெளிகிறோம்.

தானமா? தவமா?

'கற்றனைத் தூறும் அறிவு' 'நவில்தொறும் நூல்நயம்' எனவரும் திருக்குறள் தொடர்கள், பொதுவகையான் நூற் கல்வி பற்றி அமைந்தனவெனினும், திருக்குறள் கல்விக்கும் நனி பொருந்துவனவாம். வாழ்வெல்லாம் இடையறாத கல்வியாலும் சிந்தனையாலும், ஆய்வாலும் வள்ளுவர் செய்த இவ்வொரு நூல், கருத்தாலும், கருத்து மொழிந்த வகையாலும், அதிகார அமைப்பாலும், நிகரின்றி நின்று என்றும் வழிகாட்டுகின்றது. வாழ்வுக்குரிய வழிகளை எல்லாம் வகுத்துரைக்கின்றது. கொள்ளத்தகும் நன்மைகளையும், தள்ளத்தகும் தீமைகளையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. பலகொள்ள, பலதள்ள வழிகாட்டும் நூலாசான் எவ்வகையானும் கொள்ளத்தகுவது இது, எந்நிலையிலும் தள்ளத்தகுவது இது என்று சிலவற்றைப் பிரித்துச் சிறப்பறஞ் சுட்டும் போக்கையும் காண்கிறோம். இவ்வாறு வாழ்நெறிகளைவரையறுத்து வகைப்படுத்தும் இந்நூலுள் உள்ள கருத்துக்களை, மீண்டும் மீண்டும் கற்றுக் கற்று நயந்தேர்ந்தோமானால், எவ்வறம் வள்ளுவரால் உயர்வானதெனப் போற்றப்பட்டது என்பதனை எளிதில் உணரமுடியும். அடுத்தடுத்து ஆய்ந்தால் இரண்டாம் நிலையில் வைத்துப் போற்றப்பட்டது எது என்று அறிய முடியும். இவ்வாறு தனித்தனிக் குறள்களைக் கற்று, பிறகுறள்களோடு தொடர்புபடுத்திக் கண்டு, வள்ளுவர் வானளாவப் புகழ்ந்த

தனி அறம் எது? வள்ளுவர் நூல் முழுக்க அங்கிங்கெனுத படி எங்கும் பரந்து கிடக்கும் ஓரறம் எது? என ஆயும் முயற்சியில் ஈடுபட்டேன். இவ்வாய்வு வள்ளுவர் உள்ள மறிந்து குறள் கற்கும் குறிக்கோளினர்க்குப் பெருந்துணை புரியும் என்பது என் கருத்து.

குறள் மாளிகையின் நுழைவாயில் பாயிரம். பாயிரத்தில் வாலறிவனை வணங்கலே கல்வியின்பயன் எனப் பேசும் வள்ளுவர் கருத்துக்கண்டு, அவர் கடவுட் கொள்கை அறிகிறேம். அடுத்து உலக நூல் செய்தவர், உலகத்திற்கு உயிராய் விளங்கும் மாமழை போற்றும் பாங்கினைக்கண்டு, அவர் உலகச் சிந்தனையை உணர்கிறேம். உலகிற்கு உறு துணை புரியும் வான்மழையின் சிறப்பை முதலில் எடுத்துப் பேசியது பொருத்நம் எனவும் உணர்கிறேம். மழையில்லாது போனல் உலகிற்கு வரும் இடையூறுகளை எண்ணும் போது, வானம் வழங்காமற் போனல், 'தானம், தவம் இரண்டும் தங்கா' எனப் பேசுகிறுர். உலகம் வறண்டு போனல் தானமும் தவமும் இல்லாமற்போகும் எனவருந்து வதால் உலகத்து நிலைக்கவேண்டிய அடிப்படையறங்களுள் தானம் தலையாயது என்பது பெறப்படுகிறது. இங்கு குறித்த இரண்டு அறங்களுள் முதலில் தானத்தைக் குறிக்கிறுர். தானம் பிறர் பொருட்டுச் செய்யப்படுவது; தவம் தன் பொருட்டுச் செய்யப்படுவது. இரண்டினுள் தானம் தலையாயது என்பது தகும் எனத்துணிவோம். பரிமேலழகரும்,தானமாவது அறநெறியான் வந்த பொருள் களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல்' என நனி மிகு நயவுரை நல்குவர். மேலும், 'தவமாவது,மனம் பொறி வழி போகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருங்கல் முதலாயின' எனத் தித்திக்கும் தெளிவுரை தருவர். ஆகவே சுருக்கமாக இல்லார்க்கு ஈதல் தானம் எனப் பட்டது; தன்னை அடக்குதல் தவம் எனப்பட்டது. உலகு

பேணும் அறமாகிய தானம், தன்னைப் பேணும் அறமாகிய தவத்தினும் உயர்ந்ததெனில் பொருத்தமே. இதனினும் நன்கு இதனை விளங்கிக் கொள்ள வேண்டு மானல், அன்பு, அறிவு எனும் இரண்டையும் நீள நினைக்க வேண்டும். அன்பும் அறிவும் வள்ளுவரால் மிகச் சிறப்பாகப் பேசப்பட்ட பெரும்பொருள்கள் என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை. அன்பு பேசும்போது உலகத் தொடு ஒட்டிய பண்பாகப் பேசப்படும். அறிவு பேசும் போது தற்காப்புப் பெருங் கருவியாக அது பேசப்படும். உலக உயர்வுக்கு தனிமனிதன் உள்ளத்துப் பெருக்கெடுக்கும் அன்பு வெள்ளம், தன்னைக் காத்தற்குரிய கருவியாகிய அறிவினும் உயர்ந்ததே என்று ஒருவாறு கொள்ளலாம். அன்பினை 'அகத்துறுப்பு' என்பர் வள்ளுவர், "அன்புடை யார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றதையும், "அன்பின் வழியது உயிர்நிலை" என்றதனையும் நினைந்தால், 'அன்பு எதுஎன உணரலாம்." அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றதனையும், "அறிவு அற்றங் காக்கும் கருவி" என்றதனை யும் நினைந்தால் 'அறிவு' எது என உணரலாம். அன்பு ஒருவன் உள்ளத்தில் எழுந்து உலகளாவிப் பரந்துசெல்வது. 'அன்பீனும் ஆர்வம் உடைமை'; 'அருளென்னும் அன்பீன் குழவி' என்ற கருத்துக்களையும் எண்ணுக. அன்பு உலகஞ் சார்ந்து நிற்பது என்று துணிக. அறிவு உலகில் யாராலும் அழிக்கப்படாதபடி, எல்லாந் தந்து தன்னைக்காக்கும் கருவி என்பதை எண்ணுக. ஆகவே அறிவு தற்சார்ந்தது என்று துணிக. இவ்விளக்கத்தால், அறிவிற்கும் மேலாக அன்பு போற்றப்படும் என்பது தெளிவு. இத்தெளிவு தவத்தினும் தானஞ் சிறந்தது என்ற தெளிவைத் தரும். உலகுபேணும் தானம், தற்பேணும் தவத்தினுஞ் சிறந்தது. வள்ளுவர் நூல் முழுக்க ஆய்வோர், இதுவே வள்ளுவர் கொள்கை எனத் துணிவர். வள்ளுவர் பேசும் அதிகாரம் எதுவாயி

னும் அங்கு அதிகாரஞ்செய்யும் தலைக்கருத்து ஈகை உதவி, நன்றி, கொடை, ஒப்புரவு என்றிருக்கும். ஆகவே வள்ளுவர் உள்ளங் கவர்ந்த பேரறம்—எதனினும் உயர்ந்தது எனப் பேசும் ஒப்பற்ற ஓரறம்—ஈகை என்பது என் முடிவு. இம்முடிவினை வகுத்தும், தொகுத்தும் சுட்டுவது என் ஆசை. இம்முயற்சியின் முதற்படியே தானமா? தவமா? என்ற கேள்வி. இதுவரை தானமே தலையாயது என்று கண்டோம். தானத்திற்குத் தரமிக்க தகுவுரை பெய்த பரிமேலழகர், 'தவம்' என்ற அதிகாரத்து "தானத்தின் தவம் மிக்கது என்பது பெற்றும்" என எழுதுகிறார். இது அவர் கருத்தென்று விடுக்கலாம். ஆயினும், இது வள்ளுவர் கருத்தாவென ஆய்வது நம் கடமை.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்" (263)

என்பது நினைக்கத்தக்க குறள். ஈண்டு தவத்தின் பெருமை சிறப்பாக உரைக்கப்படுகிறது என்பதில் ஐயமில்லை. தவத்தின் பெருமையைத் தவசியர் மட்டுமன்றி இல்லறத்தாரும் இனிது உணர்ந்திருத்தலால், தவசியர்க்கு உதவும் பொருட்டு அவர் தவத்தை மேற்கொள்ளாது இல்லறத்தில் முயன்றனர்போலும் என விதந்து பேசும் வள்ளுவர் உள்ளத்தைப் பொறுமையாக ஆய்ந்துணர வேண்டும். பரிமேலழகர் இக் குறட்கருத்தை முழுக்க நுனித்துணர்ந்து பேசிவிட்டு, முடிவில்மட்டும், 'தானத்தினும் தவம் உயர்ந்தது' எனப் பிறழ்ந்து எழுதுகிறார். துறந்தாராகிய தவசியர்க்கு வேண்டுவன கொடுத்து ஆதரித்தல் இல்வாழ்வார் கடன் என்பதை வள்ளுவர் பல முறையும் பயின்று பேசுகிறார். 'ஈகையினை உவந்து செய்யும் ஆசைகாரணமாக இல்லறத்தார் தவத்தைத் துறந்தார்களோ?' என்ற வள்ளுவர் உணர்ச்சியினைப் பிறழாது உணரும் பரிமேலழகர், முடிவில் பிறழுவது ஏன்? என்பது விளங்கவில்லை.

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (48)

என்ற குறளை எண்ணிப்பார்க்க வேண்டும். வெளிப் படையாகப் பேசும் இடம் இது; இப்படிப் பேசக்காரணம் இல்வாழ்வார் தம் துன்பமும் பிறர் துன்பமும் தாங்குவார்; தவசியர் தம் துன்பம் தாங்குவார்; அன்றியும் வள்ளுவர் இன்னும் வெளிப்படையாக, இல்வாழ்வான், 'புறத்தாற்றிற் போய்ப் பெறுவது எவன்?' (46) என்றும், 'முயல்வாருள் எல்லாந்தலை' (47) என்றும் எடுத்துக் காட்டுவர். இறுதியில் தவத்தால் பெறக்கூடிய வீடுபேறும் இவர்க்கு உண்டு என்பதை, இல்வாழ்வான் 'வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும் (50)' என்று ஐயத்திற்கிடமின்றி அறிவுறுத் துவர். அம்மட்டோ? வேறிடங்களிலும் வள்ளுவர்,

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை" (1036)

என் இல்லறம் முயல்வாரே தவசியரைத் தாங்குவோர் எனத் தவத்தினும் தானம் உயர்ந்தது என்பதை இனிது காட்டுவர்.

தமிழ்கூறு நல்லறிஞர் பிறரும் இக்கருத்தினரே என் பதற்கு ஒரு சான்று காட்டுவோம். வள்ளுவரைக் காப்பியம் முழுக்கச் சொல்லாலும் பொருளாலும் பொன்னெனப் போற்றி எடுத்தாளும் இயல்பினர் இளங்கோவடிகள் என் பதற்குச் சிலம்பு சான்று. நுண்மையாக வள்ளுவரைக் கற்ற இளங்கோ, தானஞ்செய்து இல்லறஞ் சிறந்த பெண்ணை யும், தவஞ்செய்து துறவறங்காத்த தவசியையும் இணைத்துக் குறிக்க வேண்டிய இடத்தில், 'புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்' (காடு காண்காதை) எனத் தானஞ் செய்ய விரும்பிய கண்ணகிக்கு முதலிடத்தையும், தவஞ் செய்துயர்ந்த கவுந்திக்கு அடுத்த இடத்தையும் கொடுத் ததை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நன்றியா? உதவியா?

வள்ளுவர் நெஞ்சமெல்லாம் நிறைந்து கிடக்கும் சிந்தனை இல்லார் அல்லலும், அவ்வல்லல் துடைப்பார் புகழின் எல்லையுமே என்ற உண்மையை ஆயும் முதற்படியாகத் தவத்தின் பெருமை பேசும் வள்ளுவர் தவத்தினும் உயர்வாகப் பேசுவது தானமே எனத் தெளிந்தோம். அடுத்து 'நன்றி' என்ற சொல்லை வள்ளுவர் பல்வேறு அதிகாரப் பலகுறள்களில் பன்முறை ஆள்கிறார். பயின்று ஆளப்படும் நன்றிச் சொல் குறிக்கும் பொருளை ஆய்ந்து காணும் போதும், வள்ளுவர் உள்ளம் பளிச்சென்று தோன்றி நிற்கின்றது. மக்கட்பேறு அதிகாரத்தில், தந்தை மகன் உறவு நிலையில்,அவரவர்தம் கடமையினை நினைப்பூட்டுவார், நன்றி, உதவி என்ற இரு சொற்களையும் ஆள்வார்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்' (67)

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்' (70)

இவ்விடத்து நன்றி, உதவி என்ற சொற்களை ஆண்டுள்ள சொல்லாட்சித்திறம் காட்டிச் சிலர் நயவுரையும் நல்குவர். இவ்விடத்து நுழைந்து நோக்கியபோது, நன்றி, உதவி என்ற இருசொற்களும் ஒரு பொருட் பன்மொழியாக நிற்கும் நிலை கண்டேன். தந்தை மகற்கு ஆற்றும் உதவியை

'நன்றி' என்றும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியை 'உதவி' என்றும் குறிக்கின்றார். உலகியல் வழக்கில், ஒருவர் பிறர்க்குப் புரியும் நன்மையை உதவி என்றும், அவ் வுதவியைப் பெற்றவர் போற்றிக் காக்கும் உணர்வினை நன்றி என்றும் சொற்படுத்துகின்றோம். இப்படுத்துகை முறையானதே. ஆனால், வள்ளுவர் உதவிக்கும் உதவிபெறு கைக்கும் உள்ள உறவு கருதியோ என்னவோ உதவுதலையே நன்றி என்ற சொல்லால் குறிக்கின்றார். மேற்காட்டிய இடத்தும் அவ்வாறே குறிக்கக் காண்க. அன்றி, இரண்டு சொற்களும் பொருள்வேறு குறித்து நிற்பதாகக் கொள் வோமானல், வள்ளுவர் சொல்லாட்சித் திறத்தில் குறை நிகழக் காண்கிறோம். நயங்காட்டத் தொடங்கிக் குறை காட்டிய கதையாகிவிடும். உலகியல் வழக்குப் பொருளில் பார்த்தால் கூட, தந்தை மகனுக்குச் செய்ததை 'நன்றி' எனக் குறித்தது பொருந்தவில்லை. மகன் தந்தைக்குச் செய்ததை நன்றி எனக் குறித்திருக்க வேண்டும். மாறாக, மகன் தந்தைக்குச் செய்ததை 'உதவி' எனக்குறிக்கின்றார். நன்றி, உதவி என்ற சொற்களை வள்ளுவர் பிறஇடங்களில் ஆளுமுறையினை ஆழமாகக் கண்டால், இரு சொற்களும் ஒரு பொருள் குறித்து நிற்றல் காணலாம். தந்தை மகற் காற்றிய உதவி, மகன் தந்தைக் காற்றிய உதவி எனச் சொல்வேறு குறித்துப் பொருள் ஒன்று உணர்த்தக் கருதினர் என்பதுவே உண்மை.

'செய்ந்நன்றி அறிதல்' என்ற அதிகாரப் பெயரை நினைக. 'பிறர் செய்த உதவியை அறிந்து போற்றுதல்' என்பதுவே பொருள். இப்பொருளே பத்துக் குறள்களிலும் ஒத்து நடத்தல் காண்கிறோம். இங்கு நன்றி என்ற சொல் உதவி என்ற நேர்பொருளில் வருதல் காண்க. அன்றி நன்றி என்பதை பிறர்செய்த உதவியை நினைந்து போற்று தல் என்ற உலகியற் பொருளிற் கருதினல், 'செய்ந்நன்றி

அறிதல்' என்ற தொடர் பொருட்குழப்ப மடையும், பரிமேலழகரும் 'பிறர் செய்தநன்மையை மறவாமை' எனப் பொருள் கொண்டு, நன்றி என்ற சொல்லுக்கு நன்மை எனவே பொருள் காண்பர். வேறு சில இடங்களிலும் அவ்வாறே காண்பர். நன்மை எனப் பொருள் கொள்வதும் உதவி எனப் பொருள்கொள்வதும் வேறுபடவில்லை. ஒன்றே என உணர்கிறோம். 'செய்ந்நன்றி யறிதல், அதிகாரத்து முதல் மூன்று குறள்களைப் பார்த்தால், வள்ளுவர் ஆளுமையின் போக்குத் தெற்றென விளங்கி விடும்.

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது' (101)

'காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது' (102)

'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது' (103)

இம்மூன்று வரிசைக் குறள்களிலும், மூவகையான உதவியின் பெருமையினை அடுக்கி மொழிகிறார். தனக்கு முன் உதவியிராத போதும் உதவுதல், காலத்து உதவுதல், பயன் கருதாது உதவுதல் என்ற மூன்று உதவிச் சூழ்நிலைகள் இங்கு உணர்த்தப்படுகின்றன. செய்யாமற் செய்கின்ற உதவியினை உதவி என்றவர், காலத்திற் செய்த உதவியினை நன்றி என்பானேன். மீண்டும் பயன்கருதா உதவியை உதவி என்பானேன். மூன்று இடத்தும், உதவி, நன்றி என்ற இரு சொற்களை ஒரே பொருளில் ஆள்வது தெளிவு.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்' (104)

தினைத்துணையாகச் செய்யப்பட்டது உதவியே. உதவியதனை நினைத்துப் போற்றும் நன்றியன்று. தினையளவு

உதவி செய்தாலும், உதவி பெற்றவர் பனையளவாகக் கருத வேண்டும் என்பது கருத்து. நன்றி என்ற சொல்லை உதவி என்ற நேர் பொருளில் ஆண்டுள்ளமையை எட்டுணை ஐயமும் அன்றித் தெளியும் இடம் இது. இன்னும்மேல்,

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று' (108)

உதவியை மறவாதே என்பதே பொருள். இன்னும் மேல் நோக்குக, இறுதிக் குறளில்,

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (110)

எவ்வுதவியை மறந்தார்க்கும் என்பதுவே இயல்பான பொருள். 'எந்த அறத்தைச் சிதைத்தார்க்கும்' என்ற பரிமேலழகர் உரை நயவுரை எனலாம்; இயல்புரை ஆகாது. இக்குறள் கருதிய கருத்தைச் சுருக்கிக்கூறும் பரிமேலழகர், 'இதனாற் செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது'' எனக் குறிப்பதால், பரிமேலழகர் கருத்தும் நம் கருத்தே என உணரலாம். நன்றி உதவியேயன்றி வேறில்லை. உதவியை உணர்ந்து போற்றும் உணர்வாகிய நன்றியுணர்வு, நன்மை செய்தமையின்—உதவியின் பயனாக விளைந்தது. ஆதலினால், அதனையும் உதவி என்ற பொருள் குறிக்கும் நன்றி என்ற சொல்லால், வள்ளுவர் ஆள்கின்றார் என உணர்ந்து வள்ளுவர் உள்ளம் காண வேண்டும்.

நம் முடிவுக்கு இவ்வோரதிகாரம் மட்டும் உரைகல் ஆகிவிடுமா? வேறிடங்களிலும் காண்க.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்' (138)

என்பது ஒழுக்கமுடைமை பேசும் உயர்குறள். நல்லொழுக்கம் காரணம்—நன்றி காரியம். நல்லொழுக்க

முடைமையினுல் ஒருவர் பெறும் பயன் பிறர்க்கு உதவும் ஈகைப் பண்பே. நல்லொழுக்கத்தினுல் விளையும் பயன் பிறர்க்குதவும் பெரும் பண்பே, 'நல்லொழுக்கத்தின் காரணமாக நன்மை விளையும்' என இயல்பாகப் பொருள் கொள்ளும் போதும், நன்றி 'நன்மை' என்ற பொருள் தரும். பிறர்க்கு நன்மை செய்வது என்பது, உதவுதல் என்பதன்றி வேறு என்ன? இக் கருத்தை,

'கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு' (117)

என்ற நடுவுநிலைமைக் குறள், நலமுற உணர்த்தும். நன்றியினுல் தாழ்வு, பிறர்க்கு உதவியதால் பெற்ற தாழ்வு, கொடுத்ததால் நிகழ்ந்த குறைவு என்ற கருத்தைக்காண்க. நடுவுநிலைமையொடு உதவியதால் வந்த தாழ்வென்ருல் என்ன பொருள்? பொருள் தனக்குரியது என்று கருதாது எல்லோர்க்கும் உரியது என்று கருதி ஈந்தமையால் வந்த தாழ்வு என்பதுதானே முடிந்த பொருள். இங்கும், நன்றி என்பது உதவி என்ற பொருளிலேயே வருகிறது என்பதில் ஐயமேதும் இல்லை.

'நன்றியில் செல்வம்' என்ற அதிகாரத் தலைப்பை நோக்குக. இத் தொடருக்கும்கூடக் கொடுக்காத செல்வம் என்றே பொருள் கொள்ள வேண்டும். பயன்படாத செல்வம்—உதவப்படாத செல்வம்—என்பதே நேர்பொருள் எனலாம். பயன்படாமை என்பதற்கு விளக்கம் காணலாம். செல்வம் பயன்படும் வழிகள் இரண்டென்பது வள்ளுவர் கொள்கை. ஒன்று கொடுப்பது; மற்றையது துய்ப்பது.

'கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு' (1005)

இவ்விடத்தும் செல்வம் பயன்படாத நிலை என்பதில், வள்ளுவரால் முதற்கண் எண்ணப்படுவது கொடாமையே. ஆகவே, நன்றியில் செல்வம் என்பது வழங்கப்படாத—

—கொடுக்கப்படாத—பிறர்க்கு உதவாத செல்வமே என்பது தெளிவு.

இறுதியாக ஒன்று கூறி முடிப்பாம். 'பண்பு' என்பதே இல்லாதவர்க்கு வழங்கப்படும் ஈகைப்பண்பே என்பது வள்ளுவர் கருத்தாதலைப் 'பண்புடைமை' அதிகாரம் விளக்கி நிற்கக் காண்கிறோம்.

> ''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டு முலகு'' (994)

நயனை நீதி என்றும், நன்றியை அறம் என்றும் பரிமேலழகரும் விளக்கம் தருகிறார். 'நன்றிபுரிந்த பயனுடையார்' என்ற நடை மிகத்தெளிவாக இருக்கிறது. ''பிறர்க்கு உதவி புரிதலால் உலகிற்குப் பயன்படுவார்'' என்பதே பொருள். இங்கு உதவுதலே பண்பெனக் குறிக்கப் பெறுகிறது. 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்பது எல்லோரும் எடுத்துக் காட்டும் அரிய கலிப்பாட்டு. பரிமேலழகரும் எடுத்துக்காட்டிஉடன்பட்டு உரைக்கின்றார். 'பாடறிந்தொழுகல்' என்பது எல்லாரியல்புகளு மறிந்து ஒழுகுதல் என்பது, அவர்தரும் பொருத்தமான விளக்கம். பிறர் இயல்பும் நிலையும் அறிந்து, அவரவர் இயல்புக்கும் நிலைக்கும் தக உதவி செய்து வாழும் உயர் வாழ்வையே பண்பொடு பட்டதென்றும், உலகம் பாராட்டத் தக்க தென்றும் புகழ்ந்துரைக்கின்றார். பண்புடைமை அதிகார அனைத்துக் குறளுமே இக்கருத்துக்கு அரண்செய்தலை ஆழ்ந்து நோக்குக. பிறர்பால் எளிய செவ்வியராதல், அன்பினராதல், பண்பாற்றுதல் எனவரும் செய்திகள் எல்லாம், பிறர்க்கு உதவும் உயர்பண்பே பண்பெனப் பொதுவாகக் குறிக்கப்பெற்றுள்ளதைக் காட்டுவனவாகும். இறுதிக் குறள், தெற்றெனத் தெளித்தல் காண்க:

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று" (1000)

செல்வம் பெருஞ்செல்வமாக இருந்தும், அதற்குரிமையுடையான் பண்பிலான் ஆதலால் பயனின்றி ஒழிந்தது என்றால், பண்புடைமை, உடைய செல்வத்தைப் பிறர்க்கும் வழங்கும் உள்ளமுடைமையே என்பது தெளிவு. பால் குற்றமற்ற தேனும், கலத்தின் குற்றத்தால் கெட்டழிந்தது. அது போலச் செல்வம் தன்னளவில் குற்றமில்லாததாயினும், அது உடையான் பண்பிலாக் குற்றவாளி ஆதலால், பயனற்றொழிந்தது. ஆகவே, இங்கு 'பண்பிலான்' என வள்ளுவர் குறித்தது கொடுக்கும்—உதவும் உள்ளமில்லானையே என்பது தெளிவு. இறுதிக் குறளில், பண்புக்குச் செல்வத்தோடு தொடர்புபடுத்தி விளக்கிப் பண்புடைமை பலவகைப் பண்புகளையும் தன்னுள் அடக்கி நிற்பினும், கொடுக்கும் பண்பே பண்பென்று குறிக்கத்தகும் தலைப்பண்பென்று உணர்த்தக் காண்கிறோம். இவ்விளக்கத்தாலும், பண்புடைமை அதிகாரத்து வரும் 'நன்றிபுரிந்த பயனுடையார்' என்ற தொடர், உதவிபுரிந்து உலகிற்குப் பயன்படும் உயர்ந்தாரையே குறித்து நிற்றல் தெளிவு. இவ்வாய்வு, வள்ளுவர் 'நன்றி, உதவி' என்ற சொற்களை ஒருபொருள் குறித்து நிற்கும் இரு சொற்களாகவே பயன்படுத்தியிருக்கிறார் என்ற சொல்லாட்சித் திறம் காட்டுவதோடு, வள்ளுவர் திருவுள்ளம் எப்பொழுதும் எது பேசினும் ஈகைத்திறத்தை— கொடைமாண்பை— உலகத்துக்குதவும் உயர்பண்பையே பாராட்டுகிறது என்ற பேருண்மையையும் காட்டும்.

செயலில் வாய்மை ஈகையே

பலவறங்களைப் பாராட்டிப் பேசும் வள்ளுவர் குறள் கற்போர், 'எதற்குந் திருக்குறள் இடந்தரும்' என்ற கருத்துக் கொண்டு விடுகின்றனர். பேச எடுத்துக்கொண்ட ஒரு செய்தியைப் பிற செய்திகளின் உயர்ந்தது என்று காட்டுவது வள்ளுவர் இயல்பு எனச் சிலர் கூறிவிடுகின்றனர். தொடர்பறிவோடு பல இடங்களையும் ஒப்பாய்வு செய்யும் குறட் கல்வியாளர், மேற்குறித்த கருத்துக்கள் தவறுடையவை எனக் காணக்கூடும். சான்றொன்று காண்போம்:

'வாய்மை' யதிகாரங் கற்றவர், வள்ளுவர் வலியுறுத்தும் அறம் வாய்மையொன்றே என்ற முடிவுக்கும், வாய்மைக்கொத்த அறம் வேறொன்றில்லை என்ற முடிவுக்கும் வருவர்.

'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.' (300)

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.' (299)

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.' (297)

'பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.' (296)

இப்படிப் பேசும் வள்ளுவர், வாய்மையைப் பாராட்ட வரிந்து கட்டிக்கொண்டு வருகிறாரே எனத் தோன்றுதல் இயல்பு.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை'. (295)

தானம் தவம் இரண்டினுஞ் சிறந்த அறம்; எல்லா அறமும் தரும். 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை' எனத் தம்மை உளப்படுத்தித் தம் காட்சியில் மாட்சியுடைய அறம் வாய்மையே என்றெல்லாம் பேசுகிறார். வாய்மைக்கு விளக்கம் தரும் அதிகார முதற் குறள்களைக் கண்டால், உண்மை தெரியலாம். 'வாய்மை எனப்படுவது யாது?' என்பது வள்ளுவர் வினா. 'யாதொன்றும் தீமை இலாத சொலல் என்பது' விடை. யாருக்கும் தீமையில்லாத சொல் வாய்மைச் சொல், குற்றம் நீங்கிய நன்மை பயக்கக்கூடிய சொல் வாய்மைச் சொல் என்பது, வள்ளுவர் கருத்துச் சுருக்கம். இரண்டு விளக்கமும் ஒன்றே. உடன்பாட்டானும் எதிர்மறையானும் சொல்லப்பட்டது. சொல்நிலையில் இது வாய்மைக்கு விளக்கம். அறத்திற்கு மூன்று நிலைக்களங்கள் உண்டு மனம், சொல், செயல். வாய்மையை மனநிலையில் வைத்து விளக்கும் வள்ளுவர், 'மனத்தொடு வாய்மை மொழியின்' (295) என்பர். சொல்லளவில் உள்ள வாய்மையினும், மனத்தொடு வாய்மை மொழிதலே சிறந்தது என்பது காட்டவே,

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை' (295)

என்கின்றார். 'மனத்துக்கண் மாசின்மை அனைத்தறம்' (34) என்ற முற்கருத்தொடு ஒப்பிட்டால் உண்மை விளங்கும். மனத்தளவிலும், சொல்லளவிலும் வாய்மை விளக்கப்பட்டது. செயலளவில் வாய்மை எது? 'பொய்யாமை ஆற்றின்'

(297) எனப் பேசும் வள்ளுவர், செயலளவிலும் வாய்மையறம் ஆற்றப்படவேண்டும் எனக்கருதுகிறார். 'பொய்யாமையைச் செயலளவில் செய்தால் வேறறம் செய்ய வேண்டியதில்லை எனவுங் கூறுகிறார். செயலளவில் வாய்மை போற்றுதல் என்பது பெரும்பகுதியும் ஈதலறத்தையே குறிக்கும் என்பது என் கருத்து. அன்றியும், 'புரை தீர்ந்த நன்மை பயத்தல்' என்ற விளக்கத்தைச் சொல்நிலையில் மட்டும் வைத்துப் பொருள் காணாது, செயல் நிலையிலும் வைத்துப் பொருள் கண்டால், என் கருத்து வலிமைபெறக் காணலாம். பிறர்க்கு நன்மை செய்யும்போது பலநேரங்களில் மாறான பயன் விளைந்து விடுவதுண்டு. நன்மை செய்வதாகக் கருதிக்கொண்டு, தீமை செய்து வைப்பவர் உலகத்துப் பலர்.

'நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை' (469)

என வள்ளுவரும் பிரித்து விளக்கம் செய்வர். ஆதலான் செயலளவில் புரை தீர்ந்த நன்மை பயத்தலே வாய்மை என விதந்து ஓத வேண்டியதாயிற்று. பிறர்க்குச் செய்யப்படும் பல்வகை நன்மைகளுள் புரைதீர்ந்த நன்மை ஈகை என்பதில் மாறுபட்ட கருத்திருக்க முடியாது. இடம் பொருள் ஏவல் என்ற மூன்று வகையாலும் புரை நீங்கிய முழுநன்மை ஈதலே. ஆதலினால் தானே, உதவியை நன்றி என்றும் குறித்தார் வள்ளுவர். மனத்திலும், சொல்லிலும் உள்ள வாய்மை, செயலில் மலர்கிறபோது ஈகை என்ற மாற்றுப் பெயர் பெறுகிறது. மேகம் என வானத்தில் பெயர் பெற்று, மண்ணில் மழை என வாழ்த்தப்படுவது போல, உள்ளத்திலும் சொல்லிலும் வாய்மை எனப்பெயர் பெற்ற அறம், செயலில் ஈகை எனப் பெயர்பெறுகிறது எனக் கருதவேண்டும்.

வள்ளுவர் கருத்தும் இதுவே என்ற என் துணிவுக்கு மற்றுமொரு விளக்கம்:

"பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா அறமுந் தரும்" (296)

என்ற குறளில், புகழுக்குக் காரணமான பல அறங்களுள் பொய்யாமையறம் தலையாயது என்கின்றார். இக்குறள் நீள நினைய வேண்டிய குறள். 'பொய்யாமை யொத்த புகழ்க் காரணமில்லை' என்பது பரிமேலழகர் விளக்கம். ஈகை, புகழ் என்ற இரு செய்திகளையும் பற்றிய வள்ளுவர் கருத்தை உட்கொண்டால், செயல் நிலையில் வாய்மை போற்றுதல் என்பது ஈகையைப் போற்றலே என்ற தெளிவு பிறக்கும்.

புகழ் அதிகாரத்துக்கு முன்னுரை எழுதும் பரிமேலழகர் 'புகழ் பெரும்பான்மையும் ஈதல் பற்றி வருதலின் அதன் பின் வைக்கப்பட்டது என எழுதுகிறார். கோடி பெறும் இவ் விளக்கம்! அதிகார வைப்புக்கொண்டு வள்ளுவர் உள்ளங் காண முந்துவார்க்கு நந்தா விளக்கமாகும். புகழ் பெரும் பான்மையும் ஈதல் பற்றி வரும் என்பது பரிமேலழகர் விளக்கம் என்று எண்ணிவிடக்கூடாது. வள்ளுவர் கொள் கையும் அதுவே. கொள்கை மட்டுமன்று, வள்ளுவர் செய்த கருத்துப்புரட்சி என்றாலும் பொருந்தும். புகழ் அதிகாரத்து முதற்குறளே இதற்குப் போதும். 'ஈக இசைபட வாழ்க' (231) எனவே தொடங்குகின்றார். இசைபட' வாழாமை வசை என முன்னுங் கூறியிருக்கிறார். வாழ்வின் குறிக் கோள் புகழ் என்பதும், அப் புகழ் பெற விரும்புவார் ஈக என்பதும் வள்ளுவர் ஆணை. ஈதலே புகழுக்கு முதற் காரணம் என்ற வள்ளுவர் உள்ளத்தை இவ்வளவில் விளங்கமாட்டோமோ என்ற ஐயத்தால், அடுத்த குறளி லும் அதனையே வற்புறுத்திக் கூறுகிறார். 'ஈவார் மேல்

நிற்கும் புகழ் (232) என்பது வள்ளுவர் முடிவு. 'புகழுக்கு வேறு காரணம் யாருரைப்பினும், ஈதற் காரணமே யானுரைப்பது என்ற கருத்துப்பட, அக் குறள் நடப்பது காண்க. குறளை நோக்குக.

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார் மேல் நிற்கும் புகழ்' (232)

வேறு வகையான் பொருள் கண்டாலும், 'உலகத்தார் ஈவாரையே புகழ்கின்றார்கள்' என்ற கருத்தன்றி வேறு கருத்தில்லை. இப்படி வள்ளுவர் விதந்துபேசக் காரணம் என்ன? தொல்காப்பியர் புகழுக்குக் களங்கள் கூறும்போது கல்வி, தறுகண், கொடை என்ற மூன்று குறிப்பார். கல்வியாலும், வீரத்தாலும், கொடையாலும் புகழ்கூடும் என்பது தொல்காப்பியர் கருத்து. மூன்றனுள் கொடையினை இறுதியாக வைப்பர் காப்பியர். கல்வி, வீரம் காரணமாகப் புகழ்விளையும் என்பதில் வள்ளுவர்க்கு வேறுபட்ட எண்ணம் இல்லை. ஆயினும், மூன்றனுள் ஒன்றாக, அதுவும் இறுதியாகக் கொடையை எண்ணுவதில் வள்ளுவர்க்கு உடன்பாடு இல்லை. தொல்காப்பிய நெறியிலமைந்த அறநூல் வள்ளுவர் உடையது. இருப்பினும், புகழுக்கு முதற்காரணம் கொடை என்பது வள்ளுவர் குறிக்கோள்.

புகழுக்குரிய காரணங்களுள் ஒன்றாக ஈகையைப் பேசுவோர் முந்திய புலவர். ஆனால் வள்ளுவர் தலைக்காரணமாகப் பேசுவார். இதனை யுணர்த்தவே,

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்'

என்பர். பாரி பெற்ற புகழ், சங்க காலத்து வீரர் யாரும் பெறாத் தனிப்புகழ்! கடையெழு வள்ளல்கள் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. கடைச்சங்க வீரர் புகழ்

இன்று நினைக்கப்படுகிறதா? இப்படிச் சிந்தித்தால் வள்ளுவர் கருத்தின் வன்மை விளங்கும். ஈகையே புகழுக்குத் தலைக்காரணம் என்பதுவே வள்ளுவர் கருத்தென்று விளங்கிக் கொண்டோம். இவ்விளக்கம்—எதற்கு? வள்ளுவர் உள்ளம், ஈகையறத்தையே தலையறமாகப் போற்றுகிறது என உணர்தற்கு. ஈண்டு இவ்விளக்கம் என்ன பயன் தரும்? செயலளவில் வாய்மையாக வள்ளுவர் போற்றுவது ஈகையறத்தையே என்ற என் கருத்தை எண்பிக்கவும் இவ்விளக்கம் துணைநிற்கும். எவ்வாறு?

'பொய்யாமையாற்றின்' என வாய்மை செயலளவில் ஆற்றப்பட வேண்டும் என வற்புறுத்துவர் வள்ளுவர். வாய்மை அறத்தைச் செயலளவில் ஆற்றுதல் என்பது ஈகையையே குறிக்கும். 'பொய்யாமை யன்ன புகழில்லை' என்ற வள்ளுவர் கருத்தையும், 'ஈவார் மேல் நிற்கும் புகழ்' என்ற வள்ளுவர் கருத்தையும் கூட்டி நினைத்தால், செயலில் செய்யப்படும் வாய்மை, ஈகையே என ஐயமின்றி விளங்கும்.

இங்கு தொடர்புபற்றி ஒரு கருத்து மேலும் சொல்ல விழைவேன். இஸ்லாத்தை உலகில் நிறுத்திய வள்ளல் முகம்மதுநபி (சல்) அவர்களும் இக்கருத்தினரே. பல்வகைக் குற்றங்களையும் இழைத்த ஒருவர், குற்றங்களின் பாவங்கள் நீங்க வழிகாட்டுமாறு வள்ளல் முகம்மதை வேண்டினார். அவர்கள் உரைத்த வாய்மைப் புகழ் வையகம் போற்றி வாகை சூடுதற்குரியது. அவர்கள், குற்றவாளியிடத்துப் பொய்யாமையைப் போற்றுக; பிற குற்றங்கள் தாமே போய்விடும் என்றார்கள். இவ்வுண்மையை அனுபவத்தில் உணர்ந்து கண்ட குற்றவாளி திருந்தினார் என்பது இஸ்லாமிய வரலாறு. பொய்யாமையைப் போற்றும்போது பிற அறங்களைச் செய்தாக வேண்டிய கட்டாய நிலை

உருவாகிறது. குடியும், கூத்தியர் தொடர்பும் உடையார், பிறரிடத்துப் பொய்யாது வாழவேண்டுமானுல், ஒன்று இழிதொடர்பை விடவேண்டும், அல்லது பொய்யாமை யறத்தை விடவேண்டும். இரண்டையும் ஏற்று நடத்தல் இயலாது. பொய்யாமை போற்றினுல் பிற அறங்களையும் போற்றும் நிலை தோன்றும்.

பொய்யாமை போற்றியொழுகும் செல்வர், இல்லை யென வந்தார்க்கு இல்லை என்று சொல்ல முடியாது. ஒன்று பொய்யாமையை விடவேண்டும் அல்லது கரத்தலைவிட வேண்டும். வாய்மையறம் போற்றுவார், கரத்தலைக் கனவிலும் கருதமாட்டார். வள்ளுவர் மிகச்சாடும் இழிவு, பிறர்க்கீயாது உள்ளதை மறைத்து வாழும் கரவொழுக் கமே. இரவலர் மானந்தீர்வதற்குக் காரணமும் கரவே. உள்ளதை மறைத்தொழுகும் கரவொழுக்கம், பொய்யாமை போற்றும்போது போயொழியும் என்பது ஒரு தலை. ஆகவே வள்ளுவர், உள்ளதைப் பொய்யாது, ஈந்து மகிழுதலே செயலில் வாய்மை எனக் கருதினர் என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை.

கடமையும் உரிமையும்

செல்வத்துப் பயன் கொடுத்தலும் துய்த்தலும் (குறள் 1005) என இரண்டு சுட்டிய வள்ளுவர் நுழைபுலம் நுண்மையினும் நுண்மையுடையது. மனிதப் பிறப் பெடுத்தவன், தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிட வேண்டும் என்று சொல்வதினும், பிறரொடு தானும் வாழ வேண்டும் என்று சொல்வதுவே பொருத்தம். அதுதான் உலகொடு ஒட்டிய வாழும் முறை. தான் வாழவேண்டும் என்ற துடிப்புணர்ச்சியே, அவனையும் அறியாமல், பிறர் வாழத் தடையாக அவனை ஆக்கி விடுகிறது. பிறரொடு தானும் வாழவேண்டும் என்ற இயல்புணர்ச்சியே மனிதனை வாழ்வாங்கு வாழச்செய்யும். இது கருதியே செல்வப்பயன் கொடுத்தலும் துய்த்தலும் எனத் துய்த்தற்குமுன் கொடுத் தலைக் கூறியதற்குக் காரணம் என உணரவேண்டும். துய்த்த பிறகு கொடுப்பதென்றால், கொடை கடை போகாது.

மனிதப் பிறப்பெடுத்ததன் வாழ்வு மாண்பு பெற வேண்டுமானால், கடமை உரிமை என்ற இரு பேருணர்வு களும் அவனுக்கு வேண்டும். இரண்டனுள்ளும் கடமையே முன்எண்ணும் சிந்தனை, அவன் வாழ்வைச் சிறக்கச் செய்யும். கொடுத்தல் துய்த்தல் என்பது போலக் கடமை, உரிமை என எண்ணுவதே இயல்பு. உரிமை கடமை என எண்ணுவது, 'தான்' என்ற தடிப்புணர்ச்சியைத் தரும்.

உரிமைக்கு முதலிடம் கொடுத்தவன் கடமையில் கருத்துச் செலுத்துதல் இயலாது.

விடுதலை இந்தியாவின் வரலாறு நமக்கு இப் பேருண்மையைப் புலப்படுத்துகிறது. மக்களிடம் உரிமை யுணர்வு மிகுந்தது. கடமையுணர்வு குன்றியது. விளைவு, நாட்டில் உற்பத்தி குறைந்தது; பூசலும் போராட்டமும் மிகுந்தது. யார் உரிமை பாதிக்கப்பட்டாலும் உடன் உரிமைக்குரல் எழுப்பினர். உற்பத்திக் குறைவால் நாட்டின் அடிப்படையே பாதிக்கப்பட்டதை நினைக்கவும் யாருமில்லை.

இம் முறைகெட்ட போக்கு நாட்டில் வளரக்கூடாது என்ற கருத்தால்தான், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கடமைகளும் வற்புறுத்தப்படச் சட்டத்தைத் திருத்தவும் துணிந்தனர். எல்லோரும் அவர்தம் உரிமைகளை நாட்டுதற்குத் துணைபோகும் அரசியல் அமைப்புச்சட்டம், கடமைப் புறக்கணிப்புகளைக் கண்டித்து, கடமையாற்று தாரைத் தண்டித்தற்கும் துணைபோக வேண்டாமா? கடமையாற்றுத வழி, உரிமை பேணல் எங்ஙனம் கடை போகும்? இக் கருத்தை வலியுறுத்தத்தானே, அமெரிக்க நாட்டின் அருந்தலைவர் கென்னடி, "நாட்டுக்கு நீ செய்யும் கடனை முதலில் எண்ணிப்பாரி; நாட்டிலிருந்து நீ பெறும் உரிமைகள் தாமே வாய்க்கும்" என அறிவுறுத்தினர்.

உயிரும் உடலும், எண்ணும் எழுத்தும், கண்ணும் கருத்தும், சிந்தனையும் செயலும், உழைப்பும் ஓய்வும் என வாங்கு தொடர்புடைய—ஒன்றுக்கொன்று உறவுடைய இரண்டினை எண்ணும் போது, முறைமாறுமல் எண்ண வேண்டும். அவ்வாறே கடமையும் உரிமையும் என முறையாகச் சிந்திப்பதே, கொடுத்தலும் துய்த்தலும் என்பதுபோல, வாழச் செய்யும் வகையான சிந்தனை எனத் தெளிக.

வாழ்வு நூல் செய்த வள்ளுவரும், வாழ்வுயர்த்தும் இரு பேருணர்வுகளாய கடமையும் உரிமையும், மனித வாழ்வில் உரிய இடம் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பதை நயத்தக்க முறையில் காட்டிச் செல்கிறார். கடமையாற்றா தார்க்கு உரிமை கொண்டாடும் உரிமை இல்லை என்பதை யும், கடமையாற்றாது மடியேற்றார் இழிவுடையராய் இகழப்படுவர் என்பதையும், உழவு என்ற உயரதிகாரத்து வைத்து உணர்த்துகிறார்.

'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.' (1039)

'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.' (1040)

முதற்குறளில் உழவனைக் கிழவன் என்றும், நிலத்தை இல்லாள் எனவும் பேசிய நயங்காண்க. மனைவிக்கு வேண்டுவன, ஊண், உடை, உறையுள் முதலியன ஈந்து பேணும் கடமையாற்றாத கணவன், மனையாளின் நலத்தை நாடும் உரிமைமட்டும் பேணுவது எங்ஙனம் முறையாகும்? நாள்தோறும் சென்று நிலத்தைப் பேணாத கடமையுணர் வில்லா உழவன், வருவாயாகிய உரிமையை மட்டும் பேணு வது என்ன முறை? நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன் மக்களைத் தனக்குரியர் என உரிமை பாராட்டு வது எங்ஙனம்? மக்கள் தரும் வரிப்பொருளைப் பெறும் உரிமை அவனுக்கு ஏது? 'நிலம் பேணா உழவன், போக மிழப்பான்' எனப் பரிமேலழகர் தந்த நயவுரை, மனைவியைப் பேணாக் கணவன், அவள் ஊடவே இன்பம் இழப்பான் என்ற கருத்தையும் தந்து, கடமை பேணாதவன் உரிமை இழப்பான் என்ற பெருஞ்செய்தியை உணர்த்தி நிற்கிறது. அடுத்த குறளிலும் அதே கருத்தைத் தொடர்ந்து பேசும் நோக்கில், வள்ளுவரும், 'வறுமை பேசி வாளா இருக்கும்

முயற்சியும் கடமையுணர்வுமில்லாக் கடையவரை, 'நில மென்னும் நல்லாள் நகுவாள்' எனப் பேசுவர். பெண்ணும் இகழும் பெருமைக் குறைவினை எய்துவர் என நாண உணர்ச்சியைத் தூண்டும் வகையில் ஏசுகிறார். 'சானகி நகுவள் என்றே நாணத்தாற் சாம்பிய' இராவணன்போலக் கடமையாற்றாக் குற்றவாளி பிறரால் இகழப்படுவான் என்பதனை எடுத்துக் காட்டுகிறார். 'இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என உரிமை கொண்டாடுகிறோம். தமிழின் வளர்ச்சிக்குத் தகுபணிகள் செய்யாதபோது, இவ்வுரிமைக் குரல் பெருமை இழந்துவிடும் என உணரும் நாண உணர்வு தமிழருக்கு உண்டாவதாகுக. 'செந்தமிழில் இசையில்லை' என்ற பழியைத் துடைக்காத தமிழர்க்குச் செந்தமிழ் எந்தமிழ் எனக்கூறும் உரிமையுமில்லை எனப் பகர்வர் பாவேந்தர் பாரதிதாசன். இன்னும் ஒருபடி உயர்ந்து போய், 'எந்தாய்க்கு மேலாடை' இல்லை எனக் கூறுவது போன்று நாணத்தக்கது இது என இடித் துரைப்பர். தாய்க்கு ஆடை தரும் கடமை தவறிய தனயன், தாயுரிமை கொண்டாடுவது நாணத்தக்கது என்பதை மறுப்பாரும் உண்டோ? அதுபோல், தமிழ்ப் பணி செய்யும் கடமையுணர்வில்லார், தமிழுரிமை பேசல் பழிப்புக்கு இடமாகும்.

மேற் பேசியவெல்லாம், கடமையுணர்வில்லா உரிமை கடையேயாம் எனக் காட்டுதற்கே. கடமை மறந்த உரிமை மடமை என்பதை வள்ளுவரும் குறளகத்துக் குறிப்பான் உணர்த்தக் காண்கிறோம்.

மகனை அவையத்து முந்தியிருக்குமாறு சான்றோன் ஆக்குதல் தந்தை கடமை,

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (67)

என வள்ளுவரும் அறிவுறுத்தக் காண்கிறோம். அத்தோடு நில்லாது, மகன் கடமையையும் அறிவுறுத்தத் தொடங்கி, மகன் தந்தைக்குச் செய்யும் கடன், 'இவனைப்பெற இவன் தந்தை என்ன தவம் செய்தான்' என ஊரார் புகழத் தான் உயர்நலாகும் என எடுத்துக் காட்டுகிறார்.

'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்' (70)

மகனைச் சான்றோன் ஆக்கும் தன் கடமை செய்யாத் தந்தைக்கு, மகனால் பெறும் புகழ்ச் சொல்லைப் பெறும் உரிமை இல்லை என்பதே கருத்தாகும். தந்தை மகனைச் சான்றோன் ஆக்கினால், அதுகேட்டு, ஊரார் புகழ்வதைக் கேட்டு உவப்பாள் தாய். ஈன்று தரும் கடமையைச் செய்யாத தாய் சான்றோன் எனக் கேட்டு உவக்கும் உரிமையை நாடுவாளா? மாட்டாள். அதுபோல, அவை யேறுந் தகுதியை மகனுக்குத் தராத கடமையுணர் வில்லாத் தந்தை, தன் மகன் சான்றோன் என மகிழும் உரிமையை இழக்கின்றான். இதனால் கடமை செய்யாத வன் உரிமை இழப்பது உறுதி எனத் தெளிதல்வேண்டும்.

கடமை செய்தவர், உரிமையை உவப்பதும், நுகர் வதும், நயப்பதும் இயல்பு. கணவன் சொல் இகவாக் கண்ணகி, கோவலன் எழுகென்றவுடன் மதுரை நோக்கி உடன் எழுகின்றாள். இவ்வாறு போதல் மரப்ன்றாயினும் எழுகின்றாள். கணவனுடன் போதற்குத் தான் கண்ட கனவு தடையாயினும் எழுகின்றாள். கடமையாற்றிய களிப்புடன், உரிமையோடு, கணவனைக் கடிகின்றாள். 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என இடித்துப் பேசும் உரிமை, கடமையாற்றியதால் கண்ணகிக்கு வந்தது எனக் கண்டுணர வேண்டும். கோவலனோ, கண்ணகியுடன் இருந்து அவள் இல்லறம் ஆற்றுதற்கு உதவாது மாதவி

மனைபுக்கு மனையகம் மறந்து வாழ்ந்தவன். ஆதலால் கடமையாற்றாக் குற்ற உணர்வால் கூசிப் போகிறான். சிலப்பதிகாரக் கொலைக்களக் காதையில், மாதரி மனையில் நிகழும் கண்ணகி கோவலன் உரையாடலை உளம் ஒன்றிக் கற்றால், கடமை பேணியவர் உரிமை கொண்டாடுவதை யும், கடமை பேணார் உரிமையிழந்து கையறுதலையும் உணரலாம். 'யானுளங் கலங்கி யாவதும் அறியேன்'', 'இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்' எனவரும் கோவலன் பேச்சில், குற்ற உணர்வு காண்க. 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கற்பியல் போற்றிய கடமை உணர்வால், கண்ணகி பேச்சில் பொதிந்த பெருமித உணர்வு காண்க.

இவற்றை உற்று நோக்கின், கடமை உரிமை பற்றிய உண்மை விளங்காமல் போகுமா?

''கடனென்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.''. (981)

என்றபடி, வள்ளுவர் கடமையுணர்வுடைய நன்மக்களைப் பகுத்து, இன்னின்னார்க்கு இன்னின்ன கடமைகள் உண்டு என அவர்நிலை நோக்கி விதிக்கின்றார்.

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (55)

என்ற குறள், இல்லத்தலைவியின் கடமைகளை எண்ணி வரையறுக்கின்றது. இல்லாள் கடமையால் பெறும் புகழ் அவளுக்கு மட்டும் உரியதன்று, அவள் கணவன் பெருமைக் கும் பீடுநடைக்கும் காரணமாக அமைவதுமாகும்.

''புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை'' (59)

என்று, தலைமகள் தகைமையின் தலைமைச் சிறப்பைச் சுட்டுகிறார்.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்." (553)

இக்குறள் மன்னவன் கடமையுணர்த்துவதோடு, அக்கடமை யாற்றாத வழி வரும் கேட்டினையும் உடன் உரைக்கின்றது. "துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் துணை யாதல் இல்வாழ்வார் கடன்" எனக் காட்டுவார்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்றார். செல்வர் கடனைக் காட்டும் குறளைக் காண்போம்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (212)

என்பது, அவரால் பயன் கொண்டார் கடமையை நினைவூட்டும் குறள்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று." (108)

என்பது, செல்வர் கடமை இது, இல்லார் கடமை இது என இரண்டையும் ஓரிடத்து நினைவுபடுத்தக் காண்கிறோம்.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு" (963)

பணிவு எல்லார்க்கும் உரிய பொதுக்கடமையாகும், செல்வர்க்குச் சிறப்புக் கடமையாகும் என அடக்கக் கடமையினை ஆள்நோக்கிப் பகுத்துப் பேசுகிறார்.

இங்ஙனம் எல்லார் கடமையும் உடன்பாட்டானும் எதிர்மறையானும் நூல் முழுக்கப் பரந்து கிடக்கக் காணலாம். அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, கள்ளாமை, வெகுளாமை, கொல்லாமை எனவாங்கு எதிர்மறை அதிகாரங்களும்; அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை எனவாங்கு உடன்பாட்

வ.—5

டதிகாரங்களும் மக்கள் கடனை யறிவுறுத்தி நிற்பனவாகும். இங்ஙனம் நூல் முழுக்கக் கடமைகளை விளக்கும் வள்ளுவர், உரிமைக்குப் பகைவரோ, உரிமை வழங்கும் உள்ளமில்லா வன்நெஞ்சரோ என ஐயுறுதல் அறமாகாது. உரிமை உணர்வு உயிர்க்கெல்லாம் இயல்பு. கடமை உணர்வே சிறப்பு. எல்லோர்க்கும் இயல்பாயுள்ள உரிமைகளை விதந்து பேசுதல் வேண்டாததாகும். யார்க்கும் எடுத்துக் காட்ட வேண்டியது கடமையுணர்வே. வாழ்வுக்கு வழிகாட்டும் நூலாசிரியன் எடுத்துக் காட்டவேண்டிய சிறப்புடையது கடமையுணர்வே என்று தெளிய வேண்டும். எடுத்துக்காட்ட வேண்டிய சிறப்புடைய உரிமைகளைத் தவருது தெளிவுறுப்பர் வள்ளுவர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக என்ற கருத்தை எடுத்து நுண்மை விளக்கம் தரும் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், பகுத்தூட்டுக என்னது பகுத்துண்ணுக என்றமையான், கடமை சுட்டியதோடு உரிமையும் உடன்சுட்டியதை நினைக்கத் தூண்டுகிருர். சில செல்வர் கொடுக்கும் கடமையைச் செய்யாததோடு, துய்க்கும் உரிமையையும் விட்டு வீணே பொருள் தொகுத்துத் தாமும் அழிவர்; தம் பொருளையும் பயனின்று அழிப்பர். இத்தகையார் கடமை, உரிமை இரண்டையும் மறந்தவர். இத்தகையார் இயல்பைக் காட்டி, அவரைத் திருத்த முயன்ற வள்ளுவர் முயற்சிக்கு, நன்றியில் செல்வம் என்ற ஓரதிகாரமே சான்ருகும். தான் துவ்வான், தக்கார்க் கொன்றீயான் எனத் தன் துய்ப்பை முன்காட்டி ஈதலைப் பின் காட்டும் வள்ளுவர் குறளை நினைத்துப் பார்க்க வேண்டும். இங்குச் சிறப்பு நிலையில் நின்று பார்க்காது, இயல்பு நிலையில் நின்று பார்க்கிருர். ஈயாததோடு தானும் உண்ணது கழியும் கடைப்பட்ட செல்வர் இழிவை நினைவு படுத்துகிருர். கடமை, உரிமை என எண்ணுவது சிறப்பு. உரிமை, கடமை என எண்ணுவது இயல்பு.

இத்தகைய இயல்பும் இல்லாதவர் இழிந்தவர் என்பது காட்டவே, இங்கு துய்த்தலை முன்னும் ஈதலைப் பின்னும் வைத்துக் காட்டினர். இக் குறள் கொண்டு, உரிமையைச் சொல்ல வேண்டிய இடத்து விடாது சொல்லும் வள்ளுவர் கருத்துக் காணலாம். கடமை, உரிமை இரண்டையும் போற்றுபவரே வாழ்வாங்கு வாழும் முழு வாழ்க்கையர் என்பதே வள்ளுவர் கருத்து.

கடமையும் உரிமையும் உடன் போற்றும் வாழ்வு சிறப்பானது என்று சுட்டியதோடு, கடமையை நினைத்து உரிமையை எண்ணுத தியாகவாழ்வு பெரும் புகழுக்குரியது எனவும், உரிமை மட்டும் நினைத்துக் கடமை கருதாத வாழ்வு கடைப்பட்ட இழிந்த வாழ்வு, இகழுக்குரியது எனவும் சுட்ட வள்ளுவர் தவறவில்லை. அன்புடையார் வாழ்வு உலகை எண்ணியது; கடமையே கருதும் கண்ணியம் மிக்கது. 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' எனச் சுட்டி, எல்லாம் உலகுக்கு என எண்ணும் உயர்ந்த வாழ்வின் எல்லையைக் காட்டுகிறுர். தம் உரிமைப் பொருள்களைக்கூடக் கடமைகருதி உலகுக்கு உரிமையாக்கும் உத்தமர் அன்புடையார். 'அன்பிலார் எல்லாம் தமக் குரியர்' என்ற விடத்து, உரிமை ஒன்றே கருதி எல்லாம் தமக்கு வேண்டும் என, உலகமே தமக்கென எண்ணும் கீழோர் இயல்பையும் காட்டுகிறுர். முன்னவர் உரிமை மறந்த கடமையாளர்; பின்னவர் கடமை மறந்த உரிமை யாளர். முன்னவர் உலகம் வாழத் தாம் வாழ்பவர்; பின்னவர் தாம் வாழ உலகம் உண்டு எனக் கருதுபவர். வள்ளுவர் மிக வெறுத்துப் பேசும் கீழ்மக்கள், தமக்காக உலகத்தையே பலியாக்க விரும்பும் உலுத்தரே! கடமை மறந்து, உரிமை வேட்கைத் துடிப்பு மட்டும் உடையவர் உலகுக்கு நோய் ஆவர் என்பது வள்ளுவர் கருத்து. கடமை யாற்றிப் பின் உரிமை பேணும் வாழ்வே முழு வாழ்வு.

அறிஞர் போற்றும் அரிய நட்பு

மெய்ப்பொருள் கண்ட ஞானிகள்—பொய்யில் புலவர்கள்—நிறைமொழி மாந்தர் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும், விளங்கிய அறிவுத்தெளிவுடைய முனைவர்கள், எந்நாட்டுப் பிறப்பினும், எம்மொழி பேசினும், அவர்தம் கருத்துக்கள் ஒத்திருக்கக் காண்கிறோம். குடிக்கும் கோப்பை வேறுபட்டாலும் பருகும் பானம் ஒத்திருத்தல் போல, செப்பும் மொழி வேறுபட்டாலும் அறிஞர்தம் சிந்தனை ஒத்திருத்தல் வியப்பு விளைவிக்கும் பேருண்மையாகும். தமிழ் ஞானி திருவள்ளுவரின் திருவுடைச் சிந்தனைகளை அவர் வழிவந்த தமிழறிஞர்கள் எல்லோரும் வழிவழிப் போற்றிவருதல் நாமறிந்த ஒன்று. அவர்கள் எல்லோரும் குறளைக்கற்று குறள்நெறிப்படி தம் நூலைச் செய்தவர்கள். ஆனால் குறள் கல்லா—மொழி, நாடு, நாகரிகங்களால் வேறுபட்ட பிறநாட்டறிஞர்கள் வள்ளுவக் கருத்துக்களையொட்டி வழங்கியிருக்கும் ஒத்த சிந்தனைகளே சிறப்புக்கும் நம் சிந்தனைக்கும் உரியவை. எந்நாட்டறிஞரால் பேசப்பட்டாலும், உண்மைகள் மாறாதவை; நிலைத்தவை என்பதனை இங்குக் காண்கிறோம். அது மட்டுமன்று; திறமான புலமையெனில் வெளி நாட்டாரும் போற்ற வேண்டும் எனவொரு இலக்கணம் வகுப்பார் பாரதியார். இவ்விலக்கணப்படி பிறநாட்டு அறிஞர்தம் கருத்துக்களோடு ஒத்த வள்ளுவர் கருத்துக்களை ஆயும்போது,

வள்ளுவரது உண்மையான புலமையும் வெளிப்படுகிறது. வள்ளுவர் புலமை வழிபடத்தக்க வளமிக்கது. இவ்வுண் மையினை—அவரை வழிவழிப் பாராட்டிய தமிழ்ப்புலவர் களைவிட—ஒத்த உண்மைகளை ஒத்த முறையில் பேசும் வெளி நாட்டறிஞர்களே உள்ளபடி மெய்ப்பிக்கின்றனர். வள்ளுவர் கருத்துக்களைப் பிறநாட்டு நல்லறிஞர் கருத்துக் களோடு ஒப்பாய்வு செய்யும் முயற்சி இன்னும் தொடங்க வில்லை. இம்முயற்சி முறைப்படி வளர்ந்தால், வள்ளுவர் புகழ் இன்னும் வானுறு மதியம்போல் விளங்கித் தோன்றும் என்பது உறுதி.

இஸ்லாமிய உலகில் பேரறிஞராகக் கருதப்பட்டவர் கஸ்ஸாலி. இவர் ஞானாசிரியர்; பன்னூலாசிரியர் (78 பெரு நூல்கள்); தருக்க வாதி; தத்துவப் பேரறிஞர்; ஒழுக்க வழிகாட்டி; சீர் திருத்தச் செம்மலர். இத்தனை தகுதி களிலும் இவர், தாம் வாழ்ந்த பதினோராம் நூற்றாண்டில் முதல்நிலை பெற்றிருந்தார். உலக மேதைகளுள் ஒருவரெனப் போற்றி, ஐக்கியநாடுகள் அவையும், இவர் நூல்களைப் பதிப்பித்துள்ளது. இவரது தத்துவ வித்தகத்தை மேலை நாட்டறிஞர் மேலாக மதித்துப் போற்றியுளர். இஸ்லாமிய உலகம், இவரை (முஜத்தித்) இஸ்லாமிய சீர்திருத்த வாதியாகக் கருதிப் பெருமையுடன் போற்றிவந்திருக்கிறது. "இஹ்யாவு உலூமித்தீன்" என்ற அரபுமொழி நூலை, இப் பேரறிஞர்தம் எழுபத்தெட்டு நூல்களிலும் தலைமை சான்றதாக உலகம் மதிக்கிறது. ஆசியத் துணைக்கண்டத் துக் கிடைக்காத இவர்தம் நூல்கள் ஐரோப்பியப் பல்கலைக் கழகத்துக் காணப்பட்டன. "உலகிலுள்ள எல்லாக் கலைகளும் அழிக்கப்பட்டு விட்டாலும், இவ்வொரு நூலைக் கொண்டு அவற்றையெல்லாம் உயிர்ப்பித்து விடுவேன்" என்பார் கார்சூனி என்னும் பெரியார். இப் பாராட்டு இந் நூலின் தகுதியும் தலைமையும் காண ஒரு நல்ல சான்றாகும்,

இப் பெருநூலில் பேரறிஞர் கஸ்ஸாலி, நட்புக்குத் தனியிடம் தந்து விரித்துப் பேசுகிறார். கூட்டு வாழ்க்கையைத் தனிச்சிறப்பாகக் கொண்ட மக்களினம் உயர்வாக மதித்துப் போற்றும் நற்பண்புகளுள் தலைசிறந்தது நட்பு. தமிழ் ஞானி வள்ளுவரும், அரபு ஞானி கஸ்ஸாலியும், பல்வேறு சிந்தனைகளில் ஒத்த கருத்தினராய் விளங்குவது வியப்புமிக்க செய்தியாகும். நட்பாராய்ச்சியிலும் இரு பேரறிஞரிடத்திலும் மிகுந்த ஒற்றுமைப் போக்கு ஒளிர்கிறது. நட்படிப்படையில் இரு பேரறிஞர்களையும் ஒப்பு நோக்கிச் சில சிந்தனைகளை இச்சிறு கட்டுரையில் வரைதல், எதிர்கால ஒப்பியலாய்வுக்கு ஊக்கந்தரும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

உணர்வொத்த உயர் நட்பு

வள்ளுவர், கஸ்ஸாலி என்ற இரு பேரறிஞரிடத்தும் நட்பியலைப் பகுத்துக்கொள்ளும் முறை, விளக்கும் முறை' நட்புக்குரியர் அல்லாரைத் தெரிந்தெடுத்தல், நட்பின் பயன், நட்பின் உரிமைகள் முதலான எல்லாச் செய்திகளிலும் நிகரற்ற நயமான ஒத்த பகுதிகள் பல உள. இவ்வாராய்ச்சி நூலாகுமேயன்றிக் கட்டுரைப் பொருளாகாது. அன்றியும் யாரும் ஒப்பும் நிலைத்த நட்பியல் உண்மைகளை இவ்விருவர் மட்டுமன்றி உலகத்து எல்லா அறிஞரும் பேசவே செய்வர். அத்தகு இயல்பான நட்புச் செய்திகளை விடுத்து, இவ்விருவர்க்கு மட்டும் சிறப்பான நட்புச் செயதிகளைத் தெரிந்து பேசுதல் மிகுபயன் தருவதாகும்.

> ''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்''

என்பது உள்ளங் கொள்ளத்தகும் நட்புக் குறள். நட்புக்குக் காரணம் மூன்று. அவை புணர்ச்சி, பழகுதல்,

உணர்ச்சி ஒத்தல் என்பன. இம்மூன்றனுள் உணர்ச்சியாடு ஒத்த நட்பே நனியுயர்ந்தது என்பன இக்குறளின் சில பொதுச் செய்திகள். இட அண்மை காரணமாகவும், அடிக்கடி பயின்று பழகுதல் காரணமாகவும் நட்புத் தோன்றி வளரும். ஆயினும், அண்மையில் நெருங்கி வாழ்வோரும், அடிக்கடி சந்திப்போரும் எல்லாரும் நண்பர்களாகி விடுவதில்லை. இவ் வாய்ப்பினைப் பெற்றவருள் ஒருசிலர் தம்மிடையே உள்ள ஒப்புமை காரணமாக நண்பர்களாகின்றனர். ஆகவே நட்புக்குச் சிறப்புக் காரணம் தம்முளே ஒத்த அமைப்பு—ஒத்த உணர்ச்சி இருத்தலே என்பதும் வள்ளுவர் கருத்தாக மேற்குறளில் காண்கிறோம். இவ்வெல்லாக் கருத்துக்களையும் இமாம் கஸ்ஸாலி உடன்பட்டு உரைக்கின்றார்.

அதுமட்டுமன்றித் தனக்கேயுள்ள தனிச்சிறந்த முறையில் பல்வேறு அறிஞர்தம் கருத்துரைகளைச் சான்று காட்டித் தம் கருத்தை நிறுவுவர். அறிஞர் கஸ்ஸாலியைப் படித்தால், பல நூல்களைப் படித்த நிறைவு ஏற்படும். அன்றியும் இஸ்லாமிய உயர்காலத்து அறிஞர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் காட்டிக் கருத்து விளக்கம் செய்வர். வள்ளுவர்க்குப் பாவமைப்பால் இவ்வாய்ப்பு இல்லை. இவ்வொரு வேறுபாடு தவிர்த்து மேற்கூறிய வள்ளுவர் கருத்துக்களை முழுக்க உடன்படுவர் கஸ்ஸாலி.

உங்கள் அடுத்த வீட்டுக்காரர் மீது ஏற்படும் நட்பு, உடன்பயிலும் மாணாக்கரிடைப் பயின்று வரும் நட்பு, பயணத்தின்போது உடன் வருவாரிடம் துளிர்க்கும் நட்பு, இவையெல்லாம் இயல்பான நட்பின் கூறுபாடுகள் என்றும், இவை ஆய்வுக்குரிய தகுதி பெறுதவை ஆகையால் இவற்றைப் பற்றி விரித்தெழுதப் போவதில்லை என்றும் கூறுகிறார் அறிஞர் கஸ்ஸாலி. புணர்ச்சி, பழகுதல் என

வள்ளுவர் குறித்த இரண்டுமே மேற்குறித்தவை. ஆனால் விரித்தெழுதத் தகுதிபடைத்த நட்பாக அறிஞர் கஸ்ஸாலி கருதுவது, உணர்வொப்பால் விளைந்த உயர்நட்பையே. நட்புத் தோன்றுவதற்குரிய காரணங்கள், சூழ்நிலைகளை விளக்கிய வகையில் மட்டுமின்றி, உயர்நட்பைக் கணித்த முறையினும் இரண்டு பெரியார்க்குமுள்ள ஒப்பு நினைக்கத் தக்கதாகும். ஒத்த உணர்வால் தோன்றும் உயர்நட்பு இமாம் கஸ்ஸாலி அவர்களால் விரித்துப் பேசப்படுகிறது. இறை நம்பிக்கையுடையார் தம் ஒத்த குறிக்கோளால்—ஒத்த நம்பிக்கையால்—ஒத்த மனஉணர்வால் நட்புக் கொள்கின்றனர். இங்குப் பொருத்தமான மன ஆற்றல் நட்புக்குக்காரணமாகிறது. இப் பொருத்தத்தை நண்பர்கள் உணராமலும் இருக்கலாம் என்கின்றார் கஸ்ஸாலி. சுவையான பல மேற்கோள்களும், சான்றுகளும் தருகிறார். 'பத்துப்பேர் சேர்ந்திருக்கும் இடத்தில், இருவர் நட்புறவுடன் பழகினால், இருவருக்கும் பொருத்தமான மனப்பண்பு இருக்கிறதென்பது பொருள்' என்ற அறிஞர் மாலிக்கின் கருத்தைக் கஸ்ஸாலி எடுத்துக் காட்டுகிறார். அதுமட்டுமன்று, 'ஓரினப் பறவை மற்றோரினத்துப் பறவையோடு இணைந்து பறக்காது; அப்படிப் பறந்தால் அவ்விரு பறவைகளுக்குமிடையே ஒரு ஒற்றுமை இருக்கிறதென்று பொருள்' என்பது மாலிக்கின் கருத்தாம். ஒருமுறை, ஒரு காக்கையும் புறவும் இணைந்து பறப்பதைக் கண்டு வியந்த அறிஞர் மாலிக், அவற்றைக் கூர்ந்து நோக்கி, அவ்விரண்டு பறவைகளின் கால்களிலும் ஊனம் இருக்கிறதென்று கண்டாராம். பெருமானார் முகம்மதுநபி அவர்கள் கூறிய உயர் கருத்தொன்றையும் அறிஞர் கஸ்ஸாலி இங்கு எடுத்துக் காட்டுகிறார். "நூறு நயவஞ்சகர்களுக்கிடையில் ஓர் இறையடியான் இருக்கும் அவையில், மற்றொரு இறையடியான் புகுந்தால், அவன் தன்னோடு பண்பால் ஒத்த

இறை நம்பிக்கையாளனுக்கருகில் சென்றே அமர்வான்'' என்றார்கள் எம்பெருமானார். ஒத்த மனப்பண்பால் இருவர் ஈர்க்கப்பட்டு நண்பர்களாகின்றனர் என்பதே இமாம் கஸ்ஸாலியின் கருத்து. இதுவரை நாம் ஆய்ந்த நட்பும் இயல்பானதேயன்றி, ஆயத்தகும் சிறப்பானது என்று சொல்ல முடியாது. புணர்ச்சியும் பழகலும் இன்றியுங்கூட, ஒருவரையொருவர் காணாமலே உணர்வொப்பால் நட்பு உருவாகும் என்கின்றார் வள்ளுவர்; புணர்ச்சியில்லாது உணர்ச்சி மட்டுமே நட்புக்கிழமை தரும் என்பது வள்ளுவம் (785). இமாம் கஸ்ஸாலி இக்கருத்தை முழுக்க உடன்பட்டு, அருமையான சான்றுகளையும் விளக்கங்களை யும் தருகிறார். பெருமானார் முகம்மது நபி அவர்கள் சொன்ன செய்தியை எடுத்துக்காட்டுகிறார்: ''நம்பிக்கை யாளர்களின் உயிர்கள் தூரத்திலிருந்தே—அவர்கள் ஒரு வரையொருவர் பார்க்காவிட்டாலுங்கூட ஒன்றையொன்று சந்தித்துக் கொள்கின்றன'' என்பது நபிமொழி. இம் மொழிக்கு நபி நாயகர் வாழ்விலேயே வியக்கத்தக்க சான்று உள்ளது. மதீனாவின் பள்ளியில் அமர்ந்திருந்த பெருமானார் முகம்மது நபி, ஏமன் நாட்டிலிருந்து வரும் அன்புத் தென்றலின் மென் சுகத்தை நுகர்ந்தின்புறுவ தாகவும், தன்பால் நட்புக்கொண்ட இறையடியாரின் பரிவு காரணமாகப் பலர் இறையருள் பெற்றுச் சுவர்க்கம் புகுவர் என்றும், அவர் ஏமன் நாட்டிலுள்ள கரன் என்னும் ஊரினர் என்றும் உரைத்தனர். அப்போது தோழர்கள், 'அவர் தங்களைக் கண்டு பழகியுள்ளனரா?' என்று கேட்ட போது, 'இல்லை' என்றும், ஆனால் 'அகக்கண்ணால் கண்டு களித்தின்புறுகின்றார்' என்றும் கூறியமைந்தனர். பின்பு, பெருமானார் உரைத்தபடி, அவர் தோழர்கள் அறிஞர் உமர், அறிஞர் அலி இருவரும் ஏமன் நாடு சென்று, உவைசுல் கரனீ என்ற அப் பெருஞானியைக் கண்டு பேசிய

போது, மேலும் வியப்புத்தரும் செய்தியை அறிந்தனர். உஹத் என்ற போர்க்களத்தில் அண்ணலெம்பெருமானது ஒரு பல் பகைவர் தாக்குதலால் சிதறி வீழ்ந்தபோது, நான் என் பற்கள் அனைத்தையும் பிடுங்கிவிட்டேன். போர்க்களத்தில் பெருமானர் இழந்த பல் எது என்று தெரியாமையால், இதுவோ அதுவோ என ஐயுற்று ஒவ்வொரு பல்லாகப் பிடுங்கிவிட்டதாக உவைஸ் உரைத்தபோது, ஒரு முறை கூட நேரில் கண்டு பழகாத பெருமானர், உவைஸ் இருவருக்கும் இடையேயிருந்த கண்ணன்ன கழிபெரு நட்புக் கண்டு கழிபேருவகை எய்தி, நட்பின் பெட்பினை உணர்ந்து திரும்பினர் என்பது வரலாறு. இவ்வுண்மை வரலாற்றுச் செய்திக்குப் பன்னூற்றுவர் சான்று பகர்ந்துளர். உணர்வொத்த நட்புடையார் உயிர்கள், புணர்ச்சி பழகல் இன்றியே உணர்ச்சியொப்பால் பன்னூறு கல் தொலைவு கடந்தும் சந்தித்து மகிழ்கின்ற இவ்வுண்மையைத் தமிழக வரலாறும் உணர்த்துவதை நாமறிவோம்.

திருக்குறளுக்குத் தெளிவுரை வழங்கிய பரிமேலழகரும் மேற்குறளுக்கு விளக்கம் தரும்போது, 'புணர்ச்சி பழகுதல் இரண்டுமின்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம்' என உரைக்கின்றார். இவ்விருவர் நட்பின் திறத்தைப் புறநானூறு விரித்துப் பேசுகிறது.

"கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்
காண்டல் இல்லாது ஆண்டுபல கழிய"
வழுவின்று பழகிய கிழமையர்"

என்று, அவர்தம் நட்பைக் கோப்பெருஞ் சோழனே பேசுவான். அன்றியும், தன் பெயர் யாதெனக் கிளந்தபோது, 'என் பெயர் பேதைச் சோழன்' என்று கூறினாராம், பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரினராய ஆந்தையார் என்ற அரும்புலவர். வரலாறு காட்டும் இவர்தம் காதற்

கிழமை வழிவழிப் புலவர் பாராட்டுக்குரியதாயிற்று. "பிசிரோஎன் என்ப என் உயிர் ஓம்புநனே" என்பான் சோழன். ஒருவர் பாண்டிய நாட்டினர்; மற்றொருவர் சோழ நாட்டினர். இருவரும் கேள்வியால் நண்பராயினர்; அதுவும் 'வழுவின்று பழகிய கிழமை'யால். மதீனா வாழ்ந்த பெருமானாரும், ஈரானில் கரன் எனும் ஊரில் வதிந்த உவைசும் கேள்வியால் விளைந்த வழுவின்று பழகிய கிழமையும், மேற்குறித்த கிழமையொடு ஒப்பிட்டு இறும்பூ தெய்தத் தக்கதாம்.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்த காலத்து, உடனிருந்தவர்கள், ஆந்தையார் வருவாரா என ஐயுற்ற போது, உறுதியாக வருவார் என நம்பி, வடக்கிருக்க இடம் ஒதுக்கி வைத்தான், அவர் உளமறிந்த கோப்பெருஞ் சோழன். அதுபோன்றே வந்தார் ஆந்தையார். இதனை,

"வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே"

என வியப்பர் புலவர் பொத்தியார். இச் சொற்களோடு, "என்னை வந்து உவைஸ் சந்திக்க மாட்டார். நீங்கள் அவரைச் சந்திக்குங் காலத்து, என் அன்பைப் புலப் படுத்துக" எனப் பெருமானார் முகம்மது தன் தோழர்கட்குப் பணிக்க, அதுபோன்றே தோழர் இருவரும் அவரைக் கண்டதும், இவர்தம் வருகைக்குக் காத்திருந்தவர் போல, இறையன்பர் உவைஸ், "என் பரிவால் இறையடியார்கள் பலரை இறைவன் பிழை பொறுத்தான்" என்ற செய்தியைப் பெருமானார் கூறியதுபோலவே கூறியது கண்டு, அறிஞர் பெருமக்கள் உமரும், அலியும் கொண்ட வியப்பையும், "வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே" எனப் பொத்தியார் நடையில் பாடக் கூடாதா?

நட்பின் தன்மையையும், நன்மையையும் விளக்கும் போது வள்ளுவர்,

"அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு." (787)

என்ற பேருண்மையைக் காட்டுவர். இது நட்பின் இயல்பு களில் நனியுயர்ந்த ஒன்று. நண்பர்க்குக் கேடு வந்துற்ற போது, அது நீக்க உயிர்கொடுத்தும் முயல்வதும், விலக்க முடியாதபோது உடனனுபவிப்பதும் நண்பர் பண்பாம். இதனை வள்ளுவர், நண்பர்க்கு அழிவு வந்தபோது தானும் அவ்வழிவில் பங்கு கொண்டு துன்புறுவதை நண்பர்க்குரிய முதல் பண்பாகக் கூறுவார். இந் நட்பின் தலைப்பண்பை அறிஞர் கஸ்ஸாலி விரித்துப் பேசுகிறார். பல்வேறு அறிஞர் கருத்துரைகளையும் எடுத்து விளக்குகிறார். அறிஞர் உமர் கருத்து, நல்ல நண்பர்கள் தம் நண்பர்க்கு இன்பம் வரும் போது இனிமை காட்டுவார்கள், துன்பம் வரும்போது துணை செய்வார்கள் என்பது. இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து நிற்பவனே உண்மை நண்பன். நண்பர்க்கு நலம் விளையும் என்று கண்டால், தன்னைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்பவனே உண்மை நண்பன் என்பது அறிஞர் அலியார் கருத்து. இவ்வறிஞர் கருத்தெல்லாம் தெரிவித்து, இமாம் கஸ்ஸாலி, துன்பத்திற்குத் துணைபோவதே நட்பின் தலைத் தகுதி எனச் சுட்டிக்காட்டுவர்.

நண்பர்கள் ஒருவருக்கொருவர் பெறும் பயன்நோக்கில் நட்பை ஆராயும்போது, பெருமானார் முகம்மது நபியின் நயமிகு கருத்தொன்றையும் இமாம் கஸ்ஸாலி எடுத்தாள் கிறார். "நண்பர் இருவரும் ஒரு மனிதனின் இரண்டு கைகளைப் போன்றவர்கள்; அவை ஒன்றையொன்று தேய்த் துக் கழுவுகின்றன" என்பது நபிமொழி. இதனை விளக்கும் அறிஞர் கஸ்ஸாலி, கைகளிரண்டும் ஒரே வேலையில்

ஈடுபடுவது போல, நண்பர்களிருவரும் ஒரே வேலையில் ஈடுபடவேண்டும் என்பது பொருள் என விளக்குவர். மேலும் நண்பர்கள் இருவர் அல்லர் ஒருவர் என்பதுவே பொருத்தம் என்றும் கூறுகிறார். நபிநாயகரின் உவமை தரும் பொருள் ஆய ஆயப் பெருகுவது காணலாம். ஒரு கை தன்னளவில் தன்னை முழுமையும் கழுவித் தூய்மை செய்யல் இயலாது. ஒருகை மறுகையினை முழுமையாகத் தூய்மை செய்ய முடியும். ஒரே நேரத்தில் இரண்டு கைகளும் செயல்பட்டு, ஒன்று மற்றொன்றை உள்ளும் புறமும், விரல்களுக்கிடையிலும் தூய்மை செய்வது நம் அனுபவம். ஒவ்வொரு நேரத் தொழுகைக்கு முன்பும், புறத்தூய்மை செய்யும் போது, நபி நாதரைப் பின்பற்றும் ஒவ்வொரு இறையடியானும் இதைச் செய்கின்றான். அனைவரும் அறிந்து அனுபவித்த ஒரு உவமையின் வழி அருமையான நுண்ணிய உண்மை உரைக்கப் படுகிறது. இரண்டு கைகளும் இணைந்து ஒரு வினையைச் செய்வதுபோல, இரண்டு நண்பர்களும் இணைந்து ஒத்த ஒரு வினையை மேற்கொள்ள வேண்டும் என்பது விளக்கப்பட்ட பொருளாக, அறிஞர் கஸ்ஸாலி காணுவர்.

இவ்வொரு உண்மை மட்டும் அன்று. இன்னும் உயர்ந்த ஒரு பேருண்மையும், இதே உவமையில் விளக்கப் பட்டுள்ளது காணமுடியும். ஒரு கை மற்றொரு கையின் மாசு துடைத்துத் தூய்மையாக்குவதுபோல', ஒரு நண்பர், மற்றொரு நண்பர் வழுவியபோது, அவர் குற்றம் நீக்கி முழுத் தூய்மையாக்க முந்தவேண்டும் என்பதுவே அது. பெருமானார் உவமையில் கழுவுவதே வினையாகக் கூறப் பட்டுள்ளது. இரண்டு கைகளும் இணைந்து பல்வேறு வினைகளைச் செய்யமுடியும். விதந்து இங்கு ஓதப்பட்டது கழுவும் வினை. ஆகவே, நண்பர்கள் கூடி வினைசெய்ய வேண்டும் என்பதுமட்டும் இங்குப் பொருளன்று; ஒருவர் மற்றொருவரின் குற்றம் நீக்கவேண்டும் என்பது உளங்

கொளத்தகும் குறிப்புப் பொருளும், சிறப்புப் பொருளும் ஆகும். இக் கருத்தை இந் நபிமொழி மூலம் அறிஞர் கஸ்ஸாலி காணவில்லையாயினும், நண்பருடைய மாசு போக்குதல் நட்பின் தனிப்பண்பு என்பதைப் பல சான்றுகளோடு விளக்கியிருக்கிறார். இவ்வுண்மையை வள்ளுவர் மிகச் சுருக்கமாக, "மருவுக மாசற்றார் கேண்மை" (800) எனக் குறிப்பின் புலப்படுத்துவர். நட்புக் கொள்ளும் போதே மாசு நீங்கியவரா எனக்கண்டு, நட்பாராய்ந்து, நட்புக் கொள்ளவேண்டும் என்பதும், பழகியபிறகு அவர் பால் மாசு கண்டால், நட்பை முறித்துவிடாது, அவர் மாசு நீக்க முயலவேண்டும் என்பதும் வள்ளுவர் வகுத்த நட்புக் கொள்கை.

இமாம் கஸ்ஸாலி இதனை முழுமையும் உடன்படுவர். 'நட்பின் உரிமை', 'நண்பர் தவறுதல் இயல்பு' என்ற இரு தலைப்புக்களுள் இதனை விரித்தாய்கிறார் இமாம் கஸ்ஸாலி.

துன்பக்காலத்துத் துணைபோவதே நட்பில் ஆயத்தகும் சிறப்புடையது என்பது, நாம் போற்றும் இரு பேரறிஞரின் ஒத்த கருத்து. இன்பக்காலை உடனின்பந் துய்த்தல் எல்லார்க்கும் இயல்பாதலின் இதனை அறிஞர் எடுத்து விளக்குவதில்லை. அறிவு எல்லா உண்மைகளையும் விளக்குவதன்று; விளக்கத்தகும் உண்மைகளைத் தெரிந்துகொண்டு தேவை அளவுக்கு விளக்குவது அறிவெனப்படும். அந் நெறிப்பட்ட நம் அறிஞர் பெருமக்கள், இன்பத்து உடனுறைதலைப் பேசாது விடுத்துத், துன்பத்துத் துணை நிற்றலை விரித்துப் பேசினர்.

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (798)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். (799)

துன்பம் வந்தபோது கைவிடுவார் நட்பைக் கைவிடுக; கேடு வந்தகாலைக் கைவிடுவார் நட்பு உள்ளத்தைச் சுடும், என்றெல்லாம் துன்பத்துக்குத் துணை போகாத நட்பின் நலமற்ற தன்மையை—இழிவை எடுத்துக் காட்டுவர் வள்ளுவர். நீர் வற்றியதும் கிணற்றினின்றும் பறந்து செல்லும் குருவி போன்றவர் நட்பைக் கண்டு வெருவி ஓடவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. இதனை இமாம் கஸ்ஸாலி அவர்கள், "துன்பம் வரும்போது தனிவிடுத் தோடுவாரோடு, நட்புச் செய்யாது விலகி ஓடவேண்டும்" என எடுத்துரைக்கிறார்.

'இடுக்கண் களைவது நட்பு' என்பது வள்ளுவர் வாய் மொழி. அதுமட்டுமன்று; மற்றோரிடத்தில் வள்ளுவர், கேட்டினும் உண்டோர் உறுதி என்றும், கிளைஞர் உண்மையை அளக்கும் அரிய கோல் அது என்றும், துன்பத்துக்குத் துணையாவதே நட்பை யளக்கும் கோல் என்ற உண்மையை உயர்வாக விளக்கிக்காட்டுகிறார். கேடு வந்துற்றபோது கூடித் துணைசெய்வதே நட்பின் உயிர்நிலை என்பது வள்ளுவம். இவ்வுண்மையை இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சிச் சான்றுகளுடன் விளக்குகிறார் இமாம் கஸ்ஸாலி. நிகழ்ச்சி இதுதான்: இன்றைக்கு நடக்க முடியுமா? நினைத்துப் பார்க்கத் தக்கது. இப்னு உமர் என்பார் ஆட்டுத்தலை ஒன்றைத் தம் நண்பர்க்கு அன்புதவி யாகத் தந்தார். பெற்றுக் கொண்ட நண்பர் சிந்தித்தார். அவருக்கும் அது தேவையாயினும், அவரது நண்பர் தேவை அதனினும் அதிகமாயிருக்கலாம் எனத் தோன்றியது. உடன் அதை நண்பர்க்கு அனுப்பி வைத்தார். அந் நண் பரும் அவ்வாறே சிந்தித்தார். அதனை அவருடைய நண்பர்க்கு அனுப்பினார். இவ்வாறே ஏழுபேரிடம் சென்ற ஆட்டுத்தலை இறுதியில் அனுப்பியவரிடமே திரும்பிவந்தது. இவ் வியத்தகு நிகழ்ச்சி அக்கால நண்பர்களின் பண்

பொத்த நிலையை, நண்பர்க்கு வறுமைக்காலத்து உதவும் உயர்ந்த நட்புத் தன்மையை இனிதின் காட்டுகிறது. "நான் கொடுக்கும் ஒரு பிடி உணவை என் நண்பன் உண்டால் அதன் சுவையை என் வாயில் உணர்கின்றேன்" என்ற உணர்ச்சியே நண்பர்க்குப் பெருமை தருவது என்கிருர், இமாம் கஸ்ஸாலி. உயிர் நட்பு இதுவே!

இங்கு ஆயத்தகும் நுண்ணிய செய்தி மற்ருென்றுண்டு. இடுக்கண் களேவது நட்பென விளக்க வந்த வள்ளுவர், உயிர்பிணிக்கும் உவமையொன்றையும் உடன் பெய்தார். அவ்வுவமை அனேவர் உள்ளமுங் கவர்ந்தது; எல்லோரும் அறிந்தது.

> உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களேவதாம் நட்பு. (788)

நண்பர் துன்பம் துடைத்தல் மட்டும் நட்பின் உயர்வாகாது. அதுவும் உரிய காலத்துச் சென்று, நண்பர் மானம் பெருமை இவற்றிற்கு ஊறு வருமுன்பு திடுமென விரைந்து சென்று குறை தீர்க்கவேண்டும் என்பதை உவமைவழிப் புலப்படுத்திஞர். இச் செய்தியை இதே உவமைகொண்டு பேசும் இமாம் கஸ்ஸாலியின் கருத்தை ஒப்பியல் நோக்கில் ஆய்வார் இறும்பூதெய்வது உறுதி. உரைநடைப்போக்கில் செய்தி விளக்கம் செய்கிருர் சிந்தனேயாளர் கஸ்ஸாலி. உங்கள் நண்பன் ஒருவன் உறங்கும்போது அவன் ஆடை காற்றில் அலேக்கப்பட்டு ஒதுங்கி விடுகிறது. இப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? மற்றவர் மறுமொழி, 'அவர் ஆடையைச் சரிசெய்து, மானத்தைக் காப்போம்' என்பது. இதுகேட்ட முன்னவர் மொழிகிருர், 'இதுபோன்றே உங்கள் நண்பர் பற்றிய குறைகளேயும் நீங்கள் மறைத்து, அவர் மானங்காக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.' இவ்வுரையாடற் பகுதி, 'உடுக்கை இழந்தவன் கைபோல்' என்ற

சிந்தனையோடு முழுமையும் உடன்பட்டியல்வது காணத் தகும். நண்பர்க்கு மானக்கேடு வந்தபோது, அதுகாத்து, அவர் பெருமையைப் பேணவேண்டும் என்ற இயல்பையும் விளக்குகிறது; அதுவும் வள்ளுவர் வழியில் விளக்குகிறது இங்கு நினையத்தக்கது. வள்ளுவரைக் கற்றறிய வாய்ப்பில் லாதவர் அறிஞர் கஸ்ஸாலி என்பதே. கற்றிருப்பாராயின் பல இடங்களில் வள்ளுவர் கருத்துக்களை எடுத்தாண்டு தம் நூல்களை அழகுபடுத்தியிருப்பர்.

நட்பின் பயன்களுள் சிந்தனைக்குரிய சிறப்புடைய அடுத்த செய்தி 'மிகுதிக்கண் மேற்சென் றிடித்தல்' என்பர் வள்ளுவர். தவறு எங்கு நடந்தாலும், தனக்குத் தெரிந்தால் அது தவிர்க்க முந்தவேண்டுவது, ஒவ்வொரு தனி மனிதனின் கடமையென்பது நபி நாயகரின் பொதுக்கொள்கை. அரசியற்றுறையிலுங்கூடத் தன்னிலும் ஆற்றலும் வலிமையுமுடைய தலைவன் தவறு செய்யினும், அதனை இடித்துக்காட்டித் திருத்தல் அறிவுடையார் கடன் என்பதும், இதுவே உண்மையில் அஞ்சாமையாகும் என்பதும், வள்ளுவரும் இமாம் கஸ்ஸாலி அவர்களும் ஏற்றுக் கொண்ட ஒத்த கொள்கை. மன்னன் நெடுங் கிள்ளியிடம், போர் நடக்கும்போதும் அஞ்சாது சென்று, 'நின்பால் அறமும் இல்லை; மறமும் இல்லை; இந்நிலை நாணத்தக்கது, என்று சொன்ன அறிஞர் கோவூர்கிழாரது அஞ்சாமைத் திறம், தமிழறிந்தார் அனைவரும் அறிந்தது. இதனையொத்த பல நிகழ்ச்சிகளை இஸ்லாமிய வரலாற்றில் காண்கிறோம். ஞானி கஸ்ஸாலியும் உளங்கொள எடுத்துக்காட்டுகிறார். அரசியல் துறைக்குப் பொருந்தும் இவ்வுண்மை, நட்புத்துறைக்கும் நனி பொருந்துவதாகும். நண்பரிடம் தீமை கண்டால், அது போக்க முயல்வது இன்றியமையாதது என்பதனைக் கூற வேண்டுவதில்லை.

தம் நண்பர் வழுவியபோது வீழாமல் தடுப்பது நண்பர் தலைக்கடன்.

நண்பர் மிகை செய்தால் அதனைக் கடிந்துரைத்துத் திருத்த முயலுதல் கடினமாகத் தோன்றுவது இயல்பே. முகம் முறித்து நண்பர் உள்ளத்தைப் புண்படுத்த உண்மை நண்பரின் உள்ளம் தயங்கவே செய்யும். ஆயினும், நண்பர் நலமே பெரிது; பிழைநீக்கிக் கறைபோக்குவதே கடமை என்றுணரும் அறிவிஞர், இதனைச் செய்யத் தயங்க மாட்டார். நோயாளியின் நோவினைப் பொருட்படுத்தாது, அவர்தம் நோய் முற்றிலும் தீர முழுமனதாகப் பணி செய்யும் மருத்துவர் பணிபோன்ற தூய அறப் பணியாகும் இஃது. இவ் வள்ளுவ நட்புக்கோளை உடன் படும் அறிஞர் கஸ்ஸாலி, "நீ செய்யும் நன்மைகளைப் பாராட்டுகிறவர்களாகவும், நீ செய்யும் தீமைகளை எதிர்க்கிறவர்களாகவும் உள்ளோரை நண்பர்களாக்கிக் கொள்" என உரைக்கின்றார். அறிஞர் அத்தாவு அவர்களின் கூற்றை மேற்கோள் காட்டி, "உங்கள் நண்பர் கடமையை மறந்திருக்கிறாரா? நினைவுறுத்துங்கள்" என்றும் இமாம் கஸ்ஸாலி அறிவுறுத்துகிறார். நண்பரை இடித்துக் கூறித் திருத்தவேண்டும் எனமட்டும் வள்ளுவர் உரைத்தார். தன்னை இடித்துரைத்துத் திருத்த வரும் நண்பரிடம் எப்படி நடக்கவேண்டும் என்று, திருத்தப் படும் நண்பர்க்குத் தனியே அறிவுரை கூறவில்லை. இமாம் கஸ்ஸாலி அதனையும் செய்கின்றார். நண்பர் கூறும் கடுஞ் சொற்களைப் பொறுக்கும் இயல்பு வேண்டும் என்கிறார். நண்பர் தரும் கசப்பு மருந்து தம் நன்மை கருதியது என்றுணரும் இயல்பு வேண்டும் என்கின்றார். திருத்த வரும் நண்பர்மேல் சினங் கொள்வது மூடத்தனம் என்கின்றார்.

நண்பர் மிகை செய்த போது அது தகைந்து திருத்தவேண்டுமே தவிர, அம் மிகைகருதிப் பகை கொள்ளலோ, நட்பையே ஒதுக்கி விடுதலோ தேவையில்லை என்ற கொள்கையும், இரு பேரறிஞர்க்கும் உடன்பாடே. நண்பன் தவறு செய்கிறான் என்று அறிந்தால் சொல்லித் திருத்துக; முடிந்தவரை திருத்த முயல்க; முடியவில்லை என்பதற்காக நட்பை முறிக்க வேண்டிய தில்லை. இதுவே இருவரும் ஒத்தியம்பும் நட்பின் நடைமுறை. இரு பெரும் ஞானிகளும் மனித நிலையை நுனித்துக் கண்டவர்கள்.

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு (503)

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

மனிதன் அறியாமையுடையவன்; தவறுவது இயல்பு; ஆகவே, திருத்துவதே அறிவுடைமை; தவறு அறவே இல்லாதவரைத் தேடி நட்புக் கொள்ள முயல்வார், ஒருநாளும் அத்தகையாரைக் காணமாட்டார்; நட்புங் கொள்ள மாட்டார். குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. இதற்காகப் பெருங்குற்றவாளிகளோடு நட்புக் கொள்ள வேண்டும் என்பதில்லை. சிறு தவறுகளை அறிந்தும் அறியாமலும் செய்யும் சராசரி மனிதர்களைக் கெட்டவர்கள் என்று ஒதுக்கித் தள்ளிவிடாது, தழுவிப் போற்றி நட்புச்செய்து கொள்ளவேண்டும் என்பதே என் கருத்து என, ஏற்புடை விளக்கம் தருவர் இமாம் கஸ்ஸாலி. மிகை நாடி மிக்க கொளல் என்ற வள்ளுவர் வழியல்லவா இது!

மற்றொரு செய்தி: தனியே விரித்துப்பேசாது, சுருக்கம் கருதிப் பொதுப்படப் பேசும் போது, இமாம்

கஸ்ஸாலி உரைக்கிருர்கள், "உங்களுக்கு எதை நீங்கள் விரும்புகிறீர்களோ, அதனை உங்கள் நண்பர்க்கும் விரும்ப வேண்டும்" என்பர். நட்புக் கடமைகள் அனைத்தையும் இதனுள் அடக்கிப் பேசிவிடுகிருர் கஸ்ஸாலி. இக்கொள்கையும் வள்ளுவருடையதே. ஆனுல் நட்பியலில் பேசவில்லை. இக்கொள்கை நட்புத்துறையில் மட்டுமின்றி, யாரிடம் கொள்ளும் எத்தொடர்பிலும் மேற்கொளத்தகும் தகுதியுடையது. ஆதலினுல், 'தீவினை யச்சம்' என்ற அதிகாரத்துள்,

"தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்."

என வள்ளுவர் பொதுப்படக் கூறுவார். தான் விரும்பு வதைப் பிறருக்கும் விரும்ப வேண்டும் என்பது கஸ்ஸாலி யின் கருத்து. தனக்குத் துன்பம் தருவதைப் பிறருக்குச் செய்யாதொழிய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. வேறுபட்ட நடையால், ஒன்றுபட்ட கருத்து உரைக்கப்படுகிறது.

வள்ளுவர் வழியில் இறைமுறை இயம்பல்

வான்தரு சிறப்பின் கடவுட் பத்தினி

தமிழ் முதற்காப்பியம் செய்த பெருமையும், குறள் வழிக் காப்பியம் செய்த அருமையும் இளங்கோவைச் சாரும். எல்லாப் புலவர்களும் வள்ளுவர்நூலை வழிவழிப் போற்றியுளர் என்பது தமிழிலக்கியக் காட்சி. ஆயினும், இளங்கோ வள்ளுவர் வழியை அழுத்தம்பெறத் திருத்த மாகப் போற்றியுள்ள திறம் கண்டு களித்தற்குரியது. பத்தினி வழிபாடு இளங்கோவின் ஒரு உயர் குறிக்கோள் என்பது நூலில் முறையாகக் காட்டப்பட்டுள்ளது. இளங்கோ, வீரக்கற்பினள் கண்ணகிக்கு எழுப்பிய பத்தினிக் கோட்டமே வஞ்சிக் காண்டம். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என்று கேட்டு, 'பெண்ணிற் பெருந்தக்க தில்' என்று முடிவும் காட்டிய வள்ளுவர் வழியில் பத்தினியைப் போற்றினர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த கண்ணகி, வானுறையும் தெய்வத்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியினை, வள்ளுவர் வழியில் முறையாகக் காட்டி, முடிவில் கண்ணகி பெற்ற பெருந்திறத்தை 'இமையோர் இளங்கொடி' என்ற தொடரால் முடித்துக் காட்டுவர். கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கும் முறையில் வள்ளுவ வழியை இளங்கோ முழுமையும் பற்றி நிற்கிறார் என்பது தெளிவு. இவ்

வுண்மைக்குப் பெருஞ்சான்றாக, 'வான்தரு சிறப்பின் கடவுட் பத்தினி' எனக் கண்ணகியைப் பாராட்டுவர் இளங்கோ.

மழைதரும் மாண்பு கண்ணகிப் பத்தினியின் பெருமை யாகக் காட்டுகிறார். இக்கருத்தும் வள்ளுவக் கொடையே.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என மழை வளம்தரும் மாண்பு கற்புடையாளுக்குடையது என வள்ளுவர் காட்டினார். இதுமட்டுமன்று,

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு" (அடைக்கலக் காதை)

என்றும் இளங்கோ கற்பின் திறத்துக்கும் மழைவளத்துக் கும் ஒரு தொடர்பு காட்டிக் கண்ணகி பெருமை பேசுவர். தெய்வந் தொழாது கொழுநனைத் தொழும் கற்புடைமைக் கும், மழைவளத்துக்கும்தொடர்பு காட்டியமை தெளிவான வள்ளுவர் வழியாகும். இவற்றால் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை, வள்ளுவர் வழியில் இளங்கோ போற்றினார் என அறிகிறோம். வள்ளுவர் வழியைத் தான் போற்றியதை வெளிப்படையாகவே விளக்க நினைந்த இளங்கோ, 'கண்ணகி தெய்வந் தொழாது கொழுநனைத் தொழுது நின்றவள்' என்பதை வள்ளுவத் தொடர்களாலேயே விளக்குவர். "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு வாளை" என மதுரைக் காண்ட முடிவில் வரும் வெண்பா மட்டும் சான்றில்லை; வேறு பல சான்றுகளும் உண்டு. கண்ணகி தெய்வந் தொழாமையைப் 'பீடன்று' எனக் கண்ணகி தேவந்திக் குரைக்கும் இடத்துக் காட்டினார் இளங்கோ. கொழுநனைத் தொழுதலை, "தன் கணவன் தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக் கையாற்பற்ற" (ஊர்சூழ் வரி) எனக் காட்டுவர். 'தன் கணவன்

தொழுதகைய திருந்தடி' என்றும், 'கையாற்பற்ற' என்றும் வள்ளுவத் தொடர்களேயே ஆளல் காணத்தகும்.

மூவுண்மைகளும் வள்ளுவர் வழியில்

'உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்துவர்' என்ற குறிக்கோளே கண்ணகி காப்பியத்து விரிக்கப்படுகிறது. சிலப்பதிகாரம் கண்ணகி காப்பியமே என்பதனை இளங்கோவே, காப்பியத்துத் தோன்றி ஐயத்திற்கிடமின்றி யுரைப்பர். "இமையோர் இளங்கொடி தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி" (வரந்தரு காதை) சிலப்பதிகாரம் என இளங்கோவே காப்பியத்துத் தோன்றி, இது கண்ணகி காப்பியம் என இனங்காட்டக் காண்கிறோம். இதுவன்றி வேறுசில பொருள்களையும் காப்பியம் பேசுகின்றது எனப்பதிகம் பகரும். பதிகம் பேசும் மூவுண்மைகள் மட்டும் அன்றி, இன்னும் வேறு பலவும் காப்பியச் செய்திகளாகக் கொண்டாலும், அவையெல்லாம் வள்ளுவர் வழியிலேயே உரைக்கப்படுகிறது என்பதே நாம் எடுத்துக்கொண்ட செய்தி. ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் என்ற உண்மை ஊழதிகாரம் காட்டும் செய்தியே. ஒரு குறள் அல்லது ஓரதிகாரம் காட்டிய உண்மை, சிலப்பதிகார நூல் முழுக்க ஊழின் ஆற்றலாக மலர்ந்துள்ளது. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்' என்ற உண்மை வெருவந்த செய்யாமை என்ற அதிகாரச் 'செய்தியே என்பது தெளிவு. கெடும், தேயும், சிறுகும் என்றெல்லாம் முறைநவறிய அரசனின் அழிவை வள்ளுவர் பலவகையாகக் காட்டுவர். "அறங் கூற்றாகும்" என்ற தொடர்கூட "அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து" என்ற வள்ளுவத்தின் சாயலேயாகும். ஆகவே மூன்று உண்மைகளாகப் பதிகம் உரைப்பன வள்ளுவரின் மூன்று குறள்கள் அல்லது மூவதிகாரச் செய்திகளே என்பது தெளிவு. இவற்றாலும்

இளங்கோ காப்பியம் வள்ளுவத் தடத்தில் பிறழாது போதல் போதரும்.

இறைமுறை இயம்பல்

கண்ணகியைக் கற்புடைத் தெய்வமாகக் காட்டும் போது, வள்ளுவர் வழியில், 'வான்தரு சிறப்பின் கடவுட் பத்தினி' என இளங்கோ காட்டினார் எனக் கண்டோம். இதனினும் நாம் காணத்தகும் நுட்பமான பெருஞ்செய்தி, 'அரசியல் பிழைத்தோர் அழிவும்' கண்ணகி காரணமாக வள்ளுவர் வழியில் முழுமையாகக் காட்டப் படுகிறது என்பதே.

அரசன் செய்யும் முறையினது தன்மை, ஒருபாற் கோடாது நடுநிலைப்பட்டதாதலின், அது செங்கோன்மை என வள்ளுவரால் குறிக்கப்பட்டது. செங்கோன்மை அதிகார அனைத்துக் குறள்களிலும் அரசன்முறை செய்தல், செங்கோல் செய்தல் எனவே குறிக்கப்படுகிறது. 'மன்னவன் கோல்' (2, 3,6) 'கோலோச்சும்' 4,5) எனவரும் வள்ளுவத் தொடர்களே சான்று. பாண்டிய நாடு நமக்கு முதன் முதலாக "செங்கோல் தென்னவர் காக்கும் நாடாகவே" (புறஞ்சேரி யிறுத்த காதை) சிலம்பில் அறிமுகப்படுத்தப் படுகிறது. செங்கோல் காரணமாக எங்ஙனும் இசை போகிய பாண்டியநாடு, செங்கோன்மை பிறழ்ந்த காரண மாக எரிமண்டி யழிகின்ற காட்சியையும் சிலம்பு காட்டத் தவறவில்லை. செங்கோல் பிழைத்தான் பாண்டியன் எனக் கருதும் கண்ணகி, திறங்கேட்க மன்னவன் அவை புகுந் தாள். சிலம்பினை உடைத்து வாய்மை காட்டினாள். கண்ணகி காட்டியதால் பாண்டியன் அரசியல் பிழைத்தான் என்ற உண்மை வெளிப்பட்டது. அவ்வளவில் இளங்கோ, பாண்டியனை நமக்கு அறிமுகப்படுத்தும் அற்புதமான காட்சியில், பாண்டியன் "தாழ்ந்த குடையன், தளர்ந்த

செங்கோலன்'' (வழக்குரை காதை) ஆகின்றான். கண்ணகி உடைத்த சிலம்பின் மணி பாண்டியன் வாய்முதல் தெறித்து வாய்மை காட்டிவிட்டது கண்ட அளவில், 'தளர்ந்த செங்கோலனா' கின்றான் பாண்டியன் என்று காட்டும் இளங்கோ, வள்ளுவச் 'செங்கோல்' தொடரைத் தொடர்ந்து ஆளுதல் காணலாம். வள்ளுவர் செங்கோன்மை அதிகார முதற்குறளில், 'இறை முறை' என மன்னவன் முறை செய்தலைக் குறிக்கிறார்.

''ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'' (541)

இக் குறளில் இறைமுறை இது என இலக்கணம் கூறப் படுகிறது. நடுவுநிலைமைப் பண்புடையவனே மன்னவன் ஆதலால், அப்பண்பு இறை எனக் குறிக்கப்பட்டு, நடுவு நிலைமை புரிதல் இறைபுரிதல் என்றாயிற்று. ஓர்தல், யார் மாட்டும், கண்ணோடாமை, இறைபுரிதல், தேர்ந்து செய்தல் என்பன இறைமுறையின் இலக்கணங்கள் எனக் கூறுவது இக்குறள். வள்ளுவர் வகுத்த அரசியல் முறையினை அணுவும் வழுவாது போற்றும் இயல்பினர் இளங்கோ என்பது காட்டப் போதுமான பகுதி வழக்குரை காதை. மன்னவன் வாயிலில் நுழையும் போதே கண்ணகி, ''இறை முறை பிழைத்தோன் வாயிலோயே'' எனப் பேசுகிறாள். இறைமுறை என்ற வள்ளுவத் தொடரை ஆண்டு, அம்முறை பிழைத்தவன் பாண்டியன் என்கின்றாள். அது மட்டுமா? 'தேர்ந்து செய்வஃதே முறை' (541) என்பது வள்ளுவம். தேராமை முறையன்மை ஆகும்; முறை தவறியது ஆகும். பாண்டியன் முன் சென்று நின்ற கண்ணகி, அவனைத் 'தேரா மன்னா' என விளிக்கின்றாள். தேர்ந்து செய்தல் முறை' என்ற வள்ளுவர் இலக்கணத்தைப் பிழைத்தவன் பாண்டியன். ஆதலால் 'தேரா மன்னன்' என அழைக்கப்

படுகின்றான். பாண்டியனைத் 'தேரா மன்னன்' எனக் கண்ணகி மட்டும் அழைக்கவில்லை; இளங்கோவும் அழைக்கின்றார். "யாவதும் சினையலர் வேம்பன் தேரானாகி" (கொலைக்களக் காதை) என இளங்கோ தன் சொற்களாகவே குறிக்கின்றார். பாண்டிமாதேவி ஊடல் கொண்டு, ஆடலரங்கிலிருந்து கூடாதேகினாள். மன்னவனும் தேவிகோயில் நோக்கி நடக்கும்போது, இடையில் வந்து, வீழ்ந்தும் தாழ்ந்தும், ஏத்தியும் இயம்பியும் கொல்லன் உரைத்த பொய்மொழிகளைத் தேராதவன் ஆயினான் பாண்டியன். ஆகவே, 'சிலம்பு கள்வன் கையகத் தாகில் கொன்று கொணர்க!' என ஓராது தேராது பணித்தான். கொல்லன் உரைப்பதனாலும்,சிலம்பு கோவலன் கையிருப்பதனாலும், கோவலன் குற்றவாளி ஆகமாட்டான். கொல்லன் உரையினை, சிலம்பு கோவலன் கையில் இருப்பதனை எல்லாம் ஓர்ந்தும் தேர்ந்தும் பார்த்திருக்க வேண்டும். இவற்றைச் செய்யாது விடுத்தமையே பாண்டியன் செய்த குற்றம் என்பதனைப் பாண்டியன் தன் சொற்களாலே,

"பொன்செய் கொல்லன் தன்சொற்கேட்ட யானோ அரசன்?"

எனக் குறிக்கின்றான். வாதியின் கூற்றைக் கேட்ட அளவில், அது உண்மையா எனத் தேராது, 'கொன்று சிலம்பு கொணர்க!' என விடுத்த ஆணையே அவனைத் தேராமன்னனாக்கியது. 'தேரா மன்னா!' என்ற கண்ணகி சொற்களிலும், 'சினையலர் வேம்பன் தேரானாகி' என்ற இளங்கோ முடிவிலும், 'தேர்ந்து செய்வஃதே முறை' என்ற வள்ளுவ அரசியலுண்மை களிநடம் புரிதல் காணலாம். அத் தேர்தலைச் செய்யா மன்னவனை 'முறையில் அரசன்' என்றும், 'இறை முறை பிழைத்தோன்' என்றும் கூறும் கண்ணகி சொற்களில், வள்ளுவத்தொடர் ஆளப்படுதல் காண்க.

பாண்டியன் தேர்ந்து முறை செய்யாமையால், கோவலன் கொலையுண்டான். கல்லாக் களிமகன் வாள் எறிய வீழ்ந்தான் கோவலன். இதனைக் 'காவலன் செங் கோல் வளையுமாறு கோவலன் வீழ்ந்தான்' (கொலைக்களக் காதை) என்றே இளங்கோ குறிப்பர். 'பத்தினிப் பெண் இருந்த நாட்டில் நீணில வேந்தர் கொற்றம் சிதையாது' (அடைக்கலக் காதை) என்று முன்பு பாராட்டப்பட்டது. இப்பொழுது பத்தினிக்குக் கேடு சூழ்ந்ததால், காவலன் முறை தவறியமையால் —'தென்னவன் கொற்றம் சிதைந் தது இதுவென் கொல்?' (ஊர்சூழ் வரி) என்று பேசப்படு கிறது. இறைமுறை பிழைத்தான் பாண்டியன்; ஆகவே அவன் கொற்றம் சிதைந்தது, வளையாத செங்கோல் வளைந்தது என்று காட்டுவதே இளங்கோ நோக்கம். இங் கெல்லாம் வள்ளுவரை நினைந்து, அரசமுறை பேசும் தன் போக்கை மற்றவர் உணர்ந்து கற்கவேண்டும் என்ற கருத் தான், வள்ளுவச் சொற்களை இளங்கோ ஆளுதலை அறிந்து கற்க வேண்டும், அதுவே புலவர் உள்ளமறிந்து அவர் நூல் கற்கு முறை எனத் தெளிதல் வேண்டும்.

கண்ணீர்க் காப்பியம்

இறைமுறை பிழைத்தால், செங்கோல் தவறினுல் அரசு அழியும்; செல்வம் தேயும் என்பது வள்ளுவம். பாண்டியன் கொற்றம் சிதைந்தது, அவன் 'செங்கோல் வளைந்தது என்று காட்டி, வள்ளுவ உண்மையைக் காப்பி யத்து நாட்டினுர் இளங்கோ, வள்ளுவ உண்மை கண்ணகி வழிக் காட்டப்பட்டது என்றும் முன்பு கூறினேம். சாத்தனுர் வாய்வழி இதனை இளங்கோ தெளிவு படுத்துவர். 'கணவனை இழந்தபின் கண்ணகி தன் நாடு செல்லாது, இந் நாடு புகுந்தது ஏன்?' என்று காரணம் கூறுகிறுர் சாத்தனுர்:

கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி இறைக்குரைப் பனள்போல்''

(காட்சிக்காதை)

தென்னவன் கொடுங்கோன்மையால் தானுற்ற துயரத்தை உனக்குக் கூறவே இங்கு வந்தாள் என்ருர். செங்கோன்மை கொடுங்கோன்மை என வள்ளுவர் இறைமுறை செய்தியை உடன்பாட்டானும், எதிர்மறையானும் பேசுகிருர். இங்கு இளங்கோ, எதிர்மறைத் தொடரையும் எடுத்தாண்டு, தன் வள்ளுவ ஆட்சியைத் தெள்ளிதின் காட்டினுர்.

''அல்லற்பட் டாற்ருது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.'' (555)

கொடுங்கோன்மையின் விளைவை இக்குறள் விளக்கி நிற்கிறது. மன்னவன் கொடுங்கோலனுயின் மக்கள் அல்லற்பட்டாற்ருது அழுவர், கண்ணீர் சிந்துவர். அக்கண்ணீரே அவன் செல்வத்தைச் சிதைக்கும் படையாக மாறும் எனச் செங்கோலர்க்கு எச்சரிக்கிருர் வள்ளுவர். இதனைக் கண்ணகி வழிக் காட்சியாக்கிக் காட்டுகிருர் இளங்கோ. கண்ணகி ஆற்ருது அழுத கண்ணீர், பாண்டியன் செல்வத்தைச் சிதைக்கும் வரலாறே சிலப்பதிகாரம். சுட்டி ஒருவர் பெயர் கூருது வள்ளுவர் குறித்த அரசியலுண்மையை, கண்ணகி, நெடுஞ்செழியன் ஆகியோர் பெயர் கூறிக் காப்பியச் செய்தியாக்குகிருர் இளங்கோ. சிலப்பதிகாரம், கண்ணீர்க் காவியமாகவே மாறிவிடுகிறது. 'அல்லற்பட் டாற்ரு தழுத கண்ணீர்' என்ற வள்ளுவர் குறளை, சொல் வழுவாது ஆட்சி செய்வர் இளங்கோ.

'அல்லலுற் ருற்ரு தழுவாளைக் கண்டேங்கி' (ஊர்சூழ்வரி)

என்ற சிலம்படி, மேற்குறித்த உண்மையை ஒலிக்க வில்லையா? கள்வன் எனத்தேராது கூறிக் கணவனைக்

கொன்று விட்ட மன்னவன் கொடுங்கோன்மையால் கண்ணகி அல்லலுற்ருள்: ஆற்ற முடியாது அழுதாள்; கண்ணீர் சிந்திக் கதறிஞள். இவ்வழுகை மதுரை மக்கள் எல்லோரையும் மயங்கச் செய்தது; வளையாத செங்கோலை வளைத்தது; சிதையாத கொற்றத்தைச் சிதைத்தது என்று இளங்கோ, வள்ளுவ உண்மையை ஊர்சூழ்வரியில் அவலக் காட்சியாக வரைந்து காட்டுகிருர்.

''அல்லலுற் ருற்ரு தழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையா ரெல்லாரும் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்?
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்த திதுவென் கொல்?''

'ஐயரி யுண்கண் அழுதேங்கி யரற்றுவாள்' என்று, மீண்டும் தொடர்ந்து கண்ணகி அழுகையைக் காட்சி தோறும் அரங்கேற்றுகிருர். கண்ணீரோடு கண்ணகி காவலன் கோயில் குறுகிப் பாண்டியன்முன் நிற்கின்ருள். இவளைக் கண்ட காவலன் வாயின் முதற்சொற்களைக் கேட்போம்:

''நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோயென!''

கண்ணகியைக் கண்ட காவலனின் உள்ளத்தை உறுத்துவது கண்ணகியின் கணணீரே என்பதை முதற்கண் காட்டுகிருர் கவிஞர். முதற்கண் பாண்டியன் நெஞ்சைச் சுட்டது கண்ணகியின் நீர்வார் கண்களே, 'நீர்வார் கண்ணை யார் நீ?' என்ற பாண்டியன் விஞவுக்குக் கண்ணகி பொருத்தமாக விடை கூறுகின்ருள். 'பசுவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத் தன் அரும்பெறற் புதல்வனைத் தேரேறித் தேய்த்து நீதிகாத்த புகார்ப் பதியினள்' என்று, தன்னை அறிமுகம்

செய்கின்ருள். இங்கும் அல்லலுற்ருற்று அழுத பசுவின் கண்ணீர், சோழன் நெஞ்சு சுட்டது என்றே காட்டுகின்ருர். 'பசுவின் கண்ணீர் கண்டு பொறுக்காத சோழன், மகனைக் கொன்று இறைமுறை காத்தான். பெண்ணின் கண்ணீர் கண்டு நீ என்ன செய்யப் போகிருய்?' என்ற குறிப்புப் பொருளைக் கண்ணகி சொற்கள் தாங்கி நிற்பது காணலாம்.

கண்ணகியின் அவலக்கோலத்தை நுவலும் வழக்குரை காதை இறுதிவெண்பாவும் முதற்கண் கண்ணகியின் கண்ணீரையே காட்டும். 'காவி யுகு நீரும், கையில் தனிச் சிலம்பும், கண்ணீரும்' என வரும் வெண்பாப் பகுதிகள், கண்ணகியின் கோலத்தைக் கண்டாரை உறுத்துவது அவள் கண்ணீரே என்பதைத் தெளிவுபடுத்தும்.

இதற்கு முன்பும், வழக்குரைக்க வருமுன், கணவனைக் கண்டு கண்ணீர் விட்டழுதாள் என்றும், கணவன் கோவலனும், 'அவள் கண்ணீர் கையான் மாற்றினன்' என்றும் ஊர்சூழ்வரி பேசும். வழக்குரை காதையின் உயிர்ச் செய்தி, கண்ணகி கண்ணீர் கண்டு அஞ்சிக் கூடலான் கூடாயினன் என்பதே என்பதை, நம் உளங்கொள உரைக்க இளங்கோ விரும்புகிருர். கோவலன் கையால் கண்ணகியின் கண்ணீரைத் துடைத்தான். ஆயினும் கண்ணீர் வற்றி விடவில்லை. கணவன் 'இருந்தைக்க' என அமரரொடு போனபின், மன்னவனைத் திறங்கேட்க, அவன் கோயில் நோக்கிப் போகின்ருள். போகும்போது அவள் நிலையை,

''நெடுங்கயற்கண் நீர்சோர
நின்ருள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்ருள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்''

என இளங்கோ காட்டுவர். மன்னவன் கோயில் வாயிலைக் குறுகும்போது, நெடுங்கயற்கண் நீர்சோரவும், நீர் துடையாமலும் சென்ருள் என்று காட்டினர். கோயிலின்

அகத்தே மன்னவனைக் காணும்போது அவள் உள்ளம் உறுத்தியது கண்ணகி கண்ணீரேயாகும். அதனைக் காட்டும் முன்னர், கோயில் குறுகும்போதும் கண்ணகி கண்ணீர் சோர நின்றாள் என்று இங்கு காட்டுவது, வழக்குரைகாதையின் உயிர்க்காட்சிக்கு, ஊர்சூழ்வரியிலேயே காப்பியங் கற்போர் உள்ளங்களை ஆயத்தம் செய்து கொள்வதற்கேயாம்.

இங்ஙனம் மதுரைக் காண்டம் முழுக்கக் கண்ணகி கண்ணீரால் நனைந்து, சிலப்பதிகாரம் படிப்பார் உள்ளத்தை நெகிழச் செய்கிறது. மதுரைக் காண்டம் கண்ணீர்க் காண்டமாக மாறுகிறது. இங்ஙனம் மாற்றும் இளங்கோ ஒரு குறிப்பினை உடையார் என நாம் அறிய வேண்டும்.

''அல்லற்பட் டாற்ற தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'' (555)

என்ற கொடுங்கோன்மைக் குறள்வழிப் பாண்டியன் கொடுங்கோன்மையைப் பாடவேண்டும் என்பதே அவர் குறிப்பு. கண்ணகி ஆற்றாதழுத கண்ணீர், கொடுங்கோலனாய பாண்டியன் செல்வத்தைத் தேய்க்கும் படையாயிற்று என்பதைக் காட்டுவதே, இளங்கோ குறிக்கோள்.

வள்ளுவர் வழியில் பாரதி

திருக்குறள் உறுதி

திருவள்ளுவர் தன் குறளால் வையத்தார் உள்ளுவ எல்லாம் அளந்தார் எனப் பாராட்டுவர் பரணர். வள்ளுவ ஞர் முப்பாலே எப்பாலவரும் ஒப்புவர் என்றார் கல்லாடர். உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உவந்துதரும் வள்ளுவர் குறள் எனப் புலவர் பலரும் வழிவழிப் போற்றி யுள்ளனர். காப்பியப் புலவர்கள் மட்டுமின்றி, அண்மைக் காலக் கவிஞர்களும் வள்ளுவரைச் சொல்லாலும் பொருளா லும் போற்றிக் கொண்டுளர். தமிழ்ச் சமுதாய நிலேபேற் றுக்கே திருக்குறள் காரணமாகும் எனக் கருதியுளர். உலகுக்கே வழிகாட்டும் உறுதிகொண்ட குறள் தமிழகத்தைத் தாழ்த்தி விடாது நிலேநிறுத்தும் என்று பாரதியார் உறுதியாக நம்பிஞர். பைங்கூழ் வளர்க்கும் மாமழை போலத் தமிழர் வாழ்வை உயர்த்தும் திருக் குறளேத் 'தெய்வ வள்ளுவன் வான்மறை' எனத் துதிப்பார்

"திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகுங் கருதியும்"

தமிழச்சாதி அமரத்தன்மை வாய்ந்ததென்ற அயராத் துணிவு பாரதிக்கு இருந்தது. திருக்குறள் வாழ்வை உயர்த்தும் வான்பொருள் கொண்டது. அப்பொருள் உறுதியும் தெளிவும் விரிவும் அழகும் கொண்டது. ஆகவே

தமிழர் வாழ்வைத் தரணியில் உயர்த்தும் தகுதி கொண்டது என்பது பாரதி நம்பிக்கை. அதுகாரணமாக வள்ளுவர் வழியில் 'கவிதைத் தொழில்' புரிந்தால் மாநிலம் பயனுற வழி காட்ட முடியும் என்று நம்பினர். அந்த வல்லமையைத் தனக்குத் தருமாறு தெய்வத்தை வேண்டினர்.

முப்பால்களைப் பேசிய வள்ளுவர் அறப்பாலையே அடிப்படையாக வைத்தார். பாயிரத்தில் அறன் வலியுறுத்தினர். 'அறத்தான் வருவதே இன்பம்' என எப்படியும் இன்பந் துய்க்கும் மக்கள் மனப்போக்கை மாற்றி அறவழியிலேயே இன்பத்தை நாடவேண்டும் என வழி காட்டினர். வள்ளுவர்தம் அடிப்படை அறக்கொள்கையே தம்மை இயக்குவதாகத் தன் சுயசரிதையில் பாரதி பெருமையோடு கூறிக்கொள்கிருர்;

'அறமொன் றேதரு மெய்யின்ப மென்றநல்
லறிஞர் தம்மை யனுதினம் போற்றுவேன்

என ஆணையிட்டுரைக்கும் பாரதியார், அறிஞரென வள்ளுவரைக் குறிப்பதும், நாளெல்லாம் போற்றுவேன் என நவில்வதும் நினைக்கத் தக்கவையாகும். புலவர் என்றும் அறிஞர் என்றும் பெயர் சுட்டாது வள்ளுவரைக் குறித்துச் செல்லும் பாரதி நடை, இச்சொற்கள் வள்ளுவரையே குறிக்கும் என்ற உறுதியால் எழுந்ததாகும். 'அனுதினம் போற்றுவேன்' என்ற குறிப்பு, எல்லாத்துறைகளிலும் வள்ளுவரைப் பின்பற்றியே பாக்கள் புனையும் தன் போக்கைக் குறிக்கவே சுட்டப் பட்டதாகும்.

அறத்தை வள்ளுவர் வழியில் போற்றிய பாரதி, பொருளையும் அப்புலவர் வழியிலேயே புகல்வதாகப் பாடுகின்ருர். வாய்மொழிப்புலவர் வள்ளுவர் தகுதியை, பொய்யில் புலமையைப் புகழும் பாரதி மொழி கேளீர்:

'பொருளி லார்க்கிலை யிவ்வுல கென்ற நம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்'.

இங்கும் 'நம்புலவர்' என வள்ளுவரைப் பொதுமைப் படுத்தும் நடைநயம் காண்க. 'பொருளிலார்க்கு இனமில்லை, துணையில்லை; பொழுதெல்லாம் துன்பம் வந்தெய்தும்' என விளக்கந்தந்து, 'பொருளிலார் பொருள் செய்தல் முதற் கடன்' என மக்கள் கடமையை பாரதியார் நினைப்பூட்டுவர். 'செய்க பொருளை'என்ற வள்ளுவ முழக்கம் பாரதி பாட்டில் ஒலிக்கும். பொருள் செயல்வகை அதிகாரக் கருத்துக்க ளனைத்தையும், பொருட்பெருமை என்ற தன் சுயசரிதைப் பகுதியில் எடுத்தாளுவர் பாரதியார். பொருள் திரட்டும் முயற்சி உலகோர்க்கு இன்றியமையாதது, பொருள் வெறி கொண்டு புன்மைச் செயல்கள் புரிவதே வெறுக்கத் தக்கது என்ற வள்ளுவர் கொள்கையை, முழுக்க முழுக்க வழிமொழிந்து பேசுவர் பாரதியார். ஒன்றை இங்கு உற்று நோக்க வேண்டும். கண்ணன் பாட்டில், 'காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை' என்று பேசியவர் பாரதியார். இதனைப் பிறர் பிறழ உணரக்கூடும் என்று கருதி சுயசரிதையில் தன் கருத்தை ஐயமறத் தெளிவுறுத் துவர்.

பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்
போற்றிக் காசினுக் கேங்கி யுயிர் விடும்
மருளர் தம்மிசை யேபழி கூறுவன்;
மாமகட்கிங் கொருன முரைத்திலன்.

வாழ்வு பொருளின்றி அமையாது. ஆனல் அப் பொரு ளுக்காக வாழ்வையே அழிப்பது இழிவென வரையறை காட்டுகிருர்! காசு வேண்டும்; ஆனல் காதலைக் கொன்று காசைப் போற்றுதல் கடையேயாகும் என வள்ளுவர் நெறியை வகையுறப் போற்றுகிருர். 'செய்க பொருளை' என்ற வள்ளுவராணையும், 'பொருட் செல்வம் பூரியர்

கண்ணுமுள' என்ற வள்ளுவர் வசையும் ஒன்றுக்கொன்று முரணுக மாட்டா. அதுபோன்றே 'காசு பெரிதில்லை' என்ற கண்ணன் பாட்டுக் கருத்தும் 'பொருள் செய்தல் முதற்கடன்' என்ற பொருட் பெருமையும் முரணுகா.

பொருளை உயிரெனப் போற்றினுலும், அது ஈட்டும் நெறியில் நேர்மை வேண்டியவர் வள்ளுவர். நடு இகந்த ஆக்கத்தை அன்றே ஒழியவிட ஆணையிட்டறைந் தவர் வள்ளுவர். இந்நெறியை முறையாகப் போற்றிய பாரதி, பாஞ்சாலி சபதத்தில்,

> பாரினிற் பிறருடைமை—வெஃகும்
> பதரினைப் போ லொரு பதருண்டோ?

எனப் பாடுவார். சூதுவழிப் பாண்டவரை வெல்லும் சதித் திட்டம் கேட்ட திரிதராட்டிரன் கொதித்து மொழிந்த கூற்று இது. அன்றியும் 'ஆண்மையிலாச் செயல்' என பிறருடைப் பொருள் விரும்பும் பேடிமையை இகழ்வர் பாரதியார். வெஃகும், பதர் என்ற இரண்டு சொற்களும் எண்ணத் தக்கவை. கீழ் மக்களைப் பதரெனவும், பிறர் பொருள் விழையாமையை வெஃகாமை எனவும் வள்ளுவர் குறிப்பர். 'வெஃகாமை' திருக்குறளின் ஓரதிகாரம். வள்ளுவரை எடுத்தாளும் தன் போக்கை உணர்த்தவே 'வெஃகும் பதர்'எனப் பிறருடைமை விரும்பும் பேதையைக் குறித்தார் பாரதியார். துரியனைத் தெருட்டும் திரிதன் பேச்சில், வள்ளுவர் வகுத்துரைத்த பொருட் செய்திகள் பலவற்றையும் போற்றிக் கொள்வர் பாரதியார். திரிதராட்டிரன் தொடர்ந்து பேசும்போது, வள்ளுவர் பொருட் செய்திகளை வகுத்துரைக்கின்றுன். எடுத்த கருமத்தில் தளர்வற்ற முயற்சி, பிறர் பொருளை இம்மியும் கருதாமை, தம்மைச் சார்ந்தவரைக் காத்திடுதல் இவையே செல்வத்திலக்கணமென்றனர் மூதறிஞர். திரிதன்

வாய் மொழியில் மூதறிஞர் எனப் பாரதி குறிப்பது வள்ளுவரையே என எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. மேற் குறித்த செல்வத்திலக்கணம் மூன்றும் வள்ளுவர் பேசும் ஊக்கமுடைமை, வெஃகாமை, ஒப்புரவு ஆகிய மூன்றுமே ஆகும்.

அரசியல்

அரசியலின் அரும் பயனை அழகுறக் காட்டும் வள்ளுவர், ஆளுவோர், ஆளப்படுவோர் இருவருக்கும் கல்வியை உயிராக்குவார். பொருட்பாலில் இறைமாட்சிக்கு அடுத்து, கல்வி, கல்லாமை, கேள்வி எனப் பேசுகவின் முறை காண்க. இறைமாட்சிக்கு அடுத்துக் கல்வியை வைத்துக் கல்வியே மன்னர்க்கு மாண்பு தரும் எனக் காட்டினர். கல்லாத மக்களை விலங்கொடனையர் எனக்காட்டி, மனிதப்பண்பு கல்வியினுல் மாண்புறும் வகை காட்டினுர். மன்னர்க்கும் மக்கட்கும் கல்வி, கேடில் விழுச் செல்வம் ஆகும் என்றுர். இக்கருத்தை வலியுறுத்த வீதி தோறும் இரண்டொரு பள்ளி, ஊர்கள் தோறும் பலப்பல பள்ளி வேண்டினுர் பாரதியார். வள்ளுவர் வலியுறுத்திய கல்வியைக் காலத்துக்கேற்ற புதுவேகத்தோடு புரட்சிப் பண் பாடும்போது,

> 'தேடு கல்வி யிலாததோ ரூரைத் தீயினுக்கிரையாக
> மடுத்தல் வேண்டும்'

என்பர் பாரதியார். அரசியல் நெறி உரைக்கும் வள்ளுவர் பகைவலியும் துணைவலியும் தூக்கிச் செயல்பட வேண்டும் என எடுத்துரைப்பர். பாண்டவரோடு பகைத்தல் அறிவுடைமையாகாது என்பதனை எடுத்துக்காட்டத் துரியன் பேசும் சொற்களனைத்தும், தேனூறும் வள்ளுவத்தில் தோய்ந்த வானுயர் கருத்துக்களாம். 'எள்ளத் தகுந்த

பகைமையோ' என்பான் திருதன். 'சிறுமட்குடம் மாமலையைப் பகை கொள்ளச் சொன்ன நூல் சற்றுக் காட்டுவாய்' என நகைப்பான். 'ஒப்பில் வலிமையுடையதாம் துணையோடு பகைத்த லுறுதியோ?' என வள்ளுவர் வழியில் துரியனைப் பேசச் செய்வார் பாரதியார். மன்னனுக்கு வள்ளுவர் வகுத்துரைத்த இன்றியமையா இலக்கணம் செவிப்பகைப்பச் சொற்பொறுக்கும் ஆற்றலாம். இடிப்பார் கொடு மொழிகளைப் பொறுக்கா மன்னவன், கெடுப்பாரின்றியும் கெடுவான் என்பது வள்ளுவர் வாய்மொழி. இப்பண்பு துரியனிடம் இல்லையென்பதை விதுரன் மதுர மிக்க மொழிகளில் எடுத்துக் காட்டுந்திறம் இன்பமிக்கது. 'நலன் கூறி இடித்துரைப்பார் மொழிகள் கேளா நரபதி' என, ஆட்சித் தலைவனுக்கு வேண்டும் அரும் பண்பு துரியனிடம் மருந்துக்குமில்லை என்பதை எடுத்துரைத்து, அதுவே அவனழிவுக்கு வழிகோலும் என்பதைக் குறிப்பின் உணர்த்துகிறார். விதுரன் வாய் வழித் துரியனிடம் இல்லாத அரசப் பண்பை எடுத்துக்காட்டும் பொழுது, பாரதியின் பாட்டுத்திறம் வானுற உயர்ந்து விடுகிறது:

கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விடந்தோய்த்த நெஞ்சுங் கொண்டோர்
படுஞ்செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்

என்ற விதுரன் பேச்சில், 'கொடுங் கோன்மை' அதிகார வள்ளுவர் கருத்துக்கள், கல்லைக் கனியாக்கும் கவிதை நடையில் கரைபுரண்டு வரக் காண்கிறோம். கொடுங்கோலரசர் இடித்துரைக்கும் கடுஞ் சொற்களைப் பொறார். ஆகவே பொறுக்கும் ஆற்றலில்லாக் கொடுங்கோலர் செவிகளை 'மென்மைக் காது' என்றார் பாரதியார். அக் கொடுங்கோலர் நெஞ்சு கருங்கல் என்று கூறவில்லை; 'விடந் தோய்ந்த கருங்கல்' என்று கூறினார் பாரதியார். 'கெடுப் பாரிலானும் கெடும்' என்று வள்ளுவத்தை ஓசை கூட

மாறுது 'படுஞ் செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்' எனப் போற்றிக் கொள்கிருர். நாட்டு மாந்தரை ஆட்டு மந்தை யென்றெண்ணும் கொடுங்கோலர் செயல் கண்டு கொதிக்கிறது பாரதி நெஞ்சம். "பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள்" என்ற பாரதி மொழிகளில் மண்டிக்கிடக்கும் சீற்றத்தை அளவிட முடியுமா? நாட்டைத் தனதென எண்ணித் தோற்றுவிட்ட தருமன் செயல் கண்டு, "தேயம் வைத்திழந்தான்—சீச்சி சிறியர் செய்கை செய்தான்". சொற்களில் சினம் கொப்புளித்து நிற்கிறது. தருமனும் சிறிய செயல் செய்தது கண்டு ஆவேசங் கொண்ட பாரதி 'ஊரையாளும் முறைமை உலகில் ஓர் புறத்துமில்லை' என்கின்ருன். வள்ளுவர் தம் செங் கோன்மை, கொடுங்கோன்மை அதிகாரங்களில் உளந் தோய்ந்த பாரதி, பாஞ்சாலி சபதம் முழுக்க வள்ளுவர் வகுத்த இறை முறையையே எடுத்துப் பேசுகிருர்.

புரட்சி

அருளாளர் வள்ளுவர் பசிக் கொடுமை கண்டு உருகி நின்றவர். 'நெருப்பினுள் தூங்கலாம்; பசி என்னும் நிரப்பினுள் துஞ்சல் இயலாது' என்று பேசியவர். இன்மையுள் எல்லாம் இன்னுதது வறுமையே எனப் பிறர் இன்மை கண்டு வருந்தியவர் வள்ளுவர். ஒரு நாட்டினில் இருக்கலாகாக் கேடுகளை எடுத்தெண்ணும் போது உறுபசியை முதற்கண் வைத்தவர் வள்ளுவர்.

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு."

மக்களை வருத்தும் கொடுமைகள் மூன்று குறித்து அம் மூன்றனுள்ளும் பசியினை முதலில் குறித்தார். பசி, பிணி, பகை இம் மூன்றனுள் எது இருந்தாலும் நாடு காடாக

மாறிவிடும் என்ற வள்ளுவர் குறள் பசிப்பிணியின் கொடுமையைக் குறிக்கப் போதுமானது.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"

என்ற திருக்குறளில் வள்ளுவரின் உள்ளம் காணலாம். மக்கள் பசியொடு பிறரிடத்துப் பிச்சையேற்று வாழ்வது தான் முறை என்றாகிவிட்டால், இந்த உலகைப் படைத்துக் காக்கும் பரம்பொருள் இருப்பதில் பொருள்தான் என்ன? இருப்பதினும் இறத்தல் நன்று என்று பரம் பொருளையே பரந்து கெடுக எனச் சாபமிட்டுப் பாரகத்துப் பெரும் புரட்சிக்கு வித்திடுவார் வள்ளுவர். உலக வறுமைக்குக் காரணம் உழைக்காமையும், உழைத்தாலும் பயனுற முடியாத சமுதாய அமைப்புமே காரணம். உலகை உருவாக்கிய இறைவன் காரணன் அல்லன். பசிப்பார் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது சமுதாய அமைப்பை மாற்றுவதனாலேயே முடியும் என்பதுவே வள்ளுவர் குறிக்கோள். அக் குறள் குறித்து நிற்கும் அனைத்துப் பொருளையும் 'வேண்டின்' என்ற குறளகத்து மூன்றாஞ் சீரை நுணித்து நோக்குவார் உணர முடியும். வறுமை இயல்பு அன்று; இறைவன் வகுத்த விதி அன்று; நாம் உருவாக்கிக் கொண்டது. வறுமை வந்தால் இரத்தல் தொடரும்; அதை யாரும் தடுக்க முடியாது. பசி பத்தையும் பறக்கச் செய்யும். இரத்தலால் வரும் மானக்கேட்டைத் தவிர்க்க வேண்டும். வறுமையையொழிக்க வேண்டும். பசியினைப் போக்க வேண்டும். அதற்கு உலகியற்றியானை நாடிப் பயனில்லை, உழைப்பை நாடவேண்டும். உழைப்புக்குரிய பயன் இல்லையென்றால் சமுதாய அமைப்பை மாற்ற வேண்டும். இதுவே வள்ளுவர் வகுத்த தத்துவம். வறுமைக்கு இறைவனைக் காரணங்காட்டிக் கொண்டிருக்

கின்றவரை வறுமை ஒழியாது. உண்மையான காரணத்தை உணர்ந்து அதனை ஒழிக்க வேண்டும். நோய் நாடி நோய் முதல் நாட வேண்டும் என்றெல்லாம் பசிபோக்கும் புரட்சிக்கு வழிகாட்டியவர் வள்ளுவர். இதே குறிக்கோள் கொண்ட பாரதியும், வள்ளுவர் வகுத்த புரட்சியை உள்ள வாறுணர்ந்து, வள்ளுவர் உள்ளத்தைத் தெளிந்து வறுமையை ஒழிக்க வழிகாட்டுகிறுர்.

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்"

வள்ளுவர் வழியில் பாரதி வகுத்துக் கொண்ட குறிக்கோள் இது. வயிற்றுக்குச் சோறு இல்லையென்ருல் அதற்குக் காரணம் 'மனிதர் உணவை மனிதர் பறிப்பதே' என்கின்ருர் பாரதியார். உலக மக்களனைவருக்கும் உலகப் பொருள்கள் சொந்தம். ஒருவர்க்குரியதை மற்றவர் பறிப்பதால் பஞ்சம் உருவாகிறது. ஆகவே தேவைக்குமேல் அனுபவிப்போர் திருடர்களாகின்றனர். இதனைப் பாரதியார், 'பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்' என வேண்டுவர். வள்ளுவர் உணர்ந்தவாறே வறுமைக்குக் காரணம் வையகத்தைப் படைத்தோனல்லன்; பிறர் பங்கைத் திருடும் மனிதர்களே எனத் தெரிந்துரைப்பர். இவ்வுணர்ச்சியின் பயனுல் பாரதி வகுத்த புரட்சியே,

"தனி ஒருவனுக் குணவில்லை யெனில்
சகத்தினை யழித்திடு வோம்"

என்பது. ஒருவனுக்கு உணவில்லையென்ருல் அதற்குக் காரணம் சமுதாயமே என்பதை இங்குப் பாரதி தெளிவுபடுத்துவார். 'வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம்; இன்றேல் அனைவரும் வீழ்வோம்' என்ற பொதுவுடைமைத் தத்துவத்தைப் புவிக்குக் காட்டுகிருன் பாரதி. சிலர் வாழப் பலர் வாடுவதைத் தடுப்பதே வள்ளுவர் வழியில் பாரதி

புகுத்திய புரட்சி எனத் தெளிதல் வேண்டும். உலக உடைமைகளைப் பகிர்ந்து உண்ணல் இயற்கைநெறி. பலர் வாடச் சிலர் மட்டும் உண்ணல் மக்கள் தம் சிறுமையால் வகுத்துக் கொண்ட செயற்கை நெறி. இச் சிறுநெறியை மாய்த்துச் செந்நெறியை ஆக்குதலே வள்ளுவரும் பாரதியும் வையகத்துக்கு உணர்த்தும் வாழ்வு நெறியாகும்.

வள்ளுவர் வழியில் பாவேந்தர்

பாவேந்தர் பாராட்டு

திருக்குறள் தெள்ளுதமிழ் நடையுடையது; அள்ளு தொறுஞ் சுவையுடையது; உள்ளுதொறும் உணர்வூக்கந் தருவது ஆகவே அக்குறள் தந்த கோமானைப் பெற்றதால் இவ்வையகமே புகழ் பெற்றது எனப் பாடுகிறார் பாவேந்தர். உலகினுக்கு வள்ளுவனைத் தந்து தமிழ்நாடு புகழ்கொண்ட தாகக் கருதினார் பாரதி. ஆனால் பாவேந்தரோ,'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப்பாடித் தன் பாட்டில் கருத்துப் புதுமையையும், இடப் பொதுமையை யும் பெருக்கிக் காட்டுவர். வள்ளுவனைத் தமிழகம் உலகி னுக்குத் தந்ததாகப் பாரதியார் கூறினார். பாரதிதாசன் வள்ளுவனை உலகம் பெற்றுக் கொண்டதாகக் கூறுகிறார். இவர் பாராட்டு வரலாற்றுண்மை சான்றது என்பதை வையகம் அறியும். பிறநாட்டார் தமிழகம் போந்து வள்ளுவரைப் பெற்றனரே தவிர, தமிழ் நாட்டார் திக் கெட்டும் சென்று வள்ளுவத்தைப் பரப்பியதில்லை என்பதை இடித்துக் காட்டுகிறார் பாவேந்தர். தன்னைத் தமிழ் மாணவன் எனப் பெருமையுடன் அழைத்துக் கொண்ட போப், வள்ளுவரை இங்கு வந்து பெற்றுச் சென்றவர் என்பதை மறுக்க முடியுமா?

"வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் வினைத்தவற்றுள்
பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வி னி லே அழைத்துச்
சொல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே!"

வெல்லுந்திறம் பெற்றது; குற்றமற்றது; தூயவாழ்வுக்கு வழிகாட்டுவது; எல்லாவழியும் ஒருங்கு காட்டுவது; இக் காரணங்களால் இணைபற்றது முப்பால் என்பது பாவேந் தரின் திறனாய்வு. இஃது எவரும் ஒப்பும் தப்பில்லாத் தகை சான்றது பாட்டின் முதற்பகுதியில் பாராட்டில் புதுமை சேர்த்த கவிஞர், இப்பகுதியில் மரபு போற்றலைக் காண் கிறோம். திருக்குறளை முப்பால் எனப்பேசுவது மரபு வழிப் பட்டது. புதுமை விரும்பும் கவிஞரும் மரபு மதிக்கும் மாண்புடையர் என்பதற்கு இஃதோர் அழகுச் சான்று. மரபுணர்ச்சி இல்லாதார் புரட்சி செய்வது கடைபோகாது. கறங்கொரு நிலையைச் சுற்றியே சுழலும் அரங்கின்றி வட்டாட முடியாதது போல—நிலமின்றி வானம் நிலைபெற முடியாதது போல, மரபுத்தளம் இன்றிப் புரட்சிப்பூ பூக்க முடியாது. பழமையினின்று பூத்த செல்வமே புதுமை. பாவேந்தர் பழைய குறளே இன்றைய மக்கள் வாழ்வில் புதுமையைப் புகுத்த முடியும் என்ற அதிகாரத் துணி வினராய், இணையில்லை முப்பாலுக்கென்றார். எந்தப் பாவேந்தர்?

"பொதுமக்கள் நலம்நாடிப் புதுக்கருத்தைச் சொல்க!
புன் கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம்வந் தாலும்
அதற்கொப்ப வேண்டாமே"

என எழுத்தாளரைப் புதுவழிப் புகுத்தும் குறிக்கோள் பூண்டவர் பாவேந்தர். புன் கருத்தை நீக்கவேண்டும்; புதுக் கருத்தை ஆக்கவேண்டும் என எழுத்தியல் கற்பித்த வர் பாரதிதாசன். புதுமை நாடியாக இருந்தாலும்

குறளருமை அவரைப் பழைமை நாடியாக மாற்றி விடுகிறது. இன்றுவரை எழுந்த எந்த நூலும் முப்பாலுக்கிணையில்லை எனத் திருவள்ளுவர் திறங்காணச் செய்கிறது. மேல்கீழ் உணர்ச்சி மக்களிடை வேண்டாம் என மறுத்தவர் தான் கவிஞர். நூல்களிடை மேல்கீழ் உணர்ச்சியைக் காட்டினலன்றோ மக்கள் கற்கத்தகும் நூலைத் தெரிந்துரைக்க முடியும். ஆகவே தரம்காட்டும் திறனய்வினை மேற்கொண்டு 'இணையில்லை' எனப் பேசுகிருர்.

திருக்குறளை 'முப்பால்' எனக் குறித்ததும் மரபுவழிக் கூற்று என்பதை மறத்தலாகாது. திருக்குறளின் முதல் திறனய்வுத் தொகைநூல் திருவள்ளுவமாலை. இளங்கோ, கம்பர் ஆகியோர் திறனய்வு செய்திருப்பினும், அவை அவரவர் தனிக்காப்பியத்தில் இடம் பெற்றன. பலர் செய்த திறனய்வு திரட்டப்பட்டு எழுந்த முதல் தொகை நூல் அது. ஐம்பத்து மூவர் செய்த திருவள்ளுவமாலைத் திறனய்வில், பதின்மூவர் 'முப்பால்' எனக் குறளைச் சுட்டல் நோக்கத்தக்கது. எழுவர் வேதத்தொடு குறளை ஒப்பிட்டுப் பாராட்டுகிருர்கள். அவருள் வெள்ளி வீதியார், திருக்குறள் நான்மறையினும் மேன்மையுடையது எனப் பேசுகின்ருர். காரணம் ஒரு சாராரே கற்றற்குரியது வேதம்; எல்லாரும் கற்றற்குரியது குறள் என்பதும் அவர் கருத்து. மனேன்மணீயச் சுந்தரனரும், வள்ளுவர் செய் திருக்குறள் மக்கள் எல்லோருக்கும் ஒரு நீதியுரைத்தது எனப் பாராட்டி, மக்களைக் குலவேறுபடுத்திய மனுநீதியினும் உயர்ந்தது என எழுதிய அஞ்சாமைத் திறனய்வும் இங்கு எண்ணத்தக்கது.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ? மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

(மனேன்மணீயத் தமிழ்த் தெய்வ வணக்கம்)

திருக்குறள் நூலுக்குச் சாதி அடிப்படையன்று; நீதி அடிப்படை. மக்கள் எல்லோருக்கும் சமநீதி சுட்டுவது எனக் குறள் நெறி குறித்தார் சுந்தரனார். வெள்ளி வீதியாரும், சுந்தரனாரும் செய்த திறனாய்வு பாவேந்தர் திறனாய்வுக்கு வழிகாட்டியாய் நின்று மரபூக்கம் கொடுத்தது போலும்! 'ஆரியர் நான்மறை போல் அத்திப்பழமன்று; தித்திக்கும் முப்பழம்' எனத் திருக்குறளைப் புகழ்கின்றார்.

வள்ளுவர், பாவேந்தர் இறைக் கொள்கை

வள்ளுவர் கடவுட் கொள்கையை நுணுகி நோக்கினால் 'இறைவனின் ஒருமையும் முதன்மையும்' என்று சுருங்கக் கூறலாம். முதலதிகாரப் பத்துக்குறள்களிலும் இறைவனை ஒருமையில் சுட்டக் காண்கிறோம். 'முதற்றே உலகு' என்று அவ்வொரு இறைவனே உலகத்துக்கு முதல்வன் என உலகத்துக்கு மூலமும் காட்டுகிறார். பண்பால் பன்மையனான இறைவனை, ஒருமை, முதன்மை என்ற இரு நிலைகளில் மட்டும் விளக்கும் வள்ளுவர் நோக்கம், ஆழ்ந்து நோக்கு வார்க்குத் தெள்ளிதின் புலனாகக்கூடும். இறைவன் ஒருவனே என்பதும், அவனே உலகத்துக்கு மூலம்—முதல் என்பதுமே வள்ளுவர் குறிக்கும் இறையியல்புகள் எனத் தெளியலாம். இதனையே நூலில் பின்னே 'பெருமை'யதிகாரத்தில் 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' என எடுத்தோதுவர். ஓரிறைவனையே மூலமாகக் கொண்டது உலகு என்றால் அவ்வுலக மக்கள் ஒத்த பிறப்பினர். 'ஒருமைப்பாட்டுக் குரியவர்—தம்மளவில் பிறப்பால் வேறு பாடற்றவர் என்பதைக் கூறவேண்டுவதில்லை. மனிதகுலத்தை ஒரு குலமாக நோக்கிய வள்ளுவர் கொள்கை புறக்கணிக்கப் பட்டதால்—வேற்றுமை மனிதகுலத்தை வேரறுத்து விட்டது என்பது வரலாறு காட்டும் படிப்பினை. மனிதப் பிறப்பெடுத்த அனைவரையும் ஒரு குலத்தாராகக் கண்டு—

அவரனைவருக்கும் ஒரு நீதி கண்ட வள்ளுவர் பெருமையை யும், மேற்காட்டிய சுந்தரனார் பாராட்டு விளக்கி நிற்கும். (வள்ளுவர் செய் திருக்குறளை—மனோன்மணீயம்) இவ்வள்ளுவர் பழங்கடவுட் கொள்கை பல சான்றோராலும் வழிவழிப் பின்பற்றப்பட்டது உண்மையே. மாணிக்க வாசகருங்கூட,

"ஒரு நாமம் ஓருருவம் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டோமோ?

எனக்கூறி, இறைவனது பண்புப் பன்மை காரணமாக ஆயிரம் திருநாமம் அவனுக்குச் சூட்டலாம் என்று பாடினார். ஆனால் ஆயிரம் திருவுருவம் சூட்டலாம் எனக் கூறாது விடுத்தார். அவன் நாமங் கடந்தவன் உருவங்கடந்தவன் எனினும், நாமச்சூட்டு பண்பு விளக்கமாக அமையுமா தலால், பலநாமம் சூட்டலாம். மனிதர் இறைப்பண்புகளை எய்தும் முயற்சிக்கு அது உதவும். ஆனால் பல உருவச்சூட்டு மோதலுக்கு இடம் தருமே தவிரப் பயன் வேறு பயவாது என்ற கருத்தால் போலும், நாமமில்லாதவனுக்கு ஆயிரம் திரு நாமம் பாடலாம் என்றவர், உருவமில்லாதவனுக்கு ஆயிரம் திருவுருவம் சூட்டலாம் எனக் கூறாது விடுத்தார் என்பதை உணர்ந்து பார்க்கவேண்டும். பாரதியும், 'ஒன்று பரம் பொருள் நாமதன் மக்கள் உலகின்பக்கேணி' எனச் சுருக்கமாக வள்ளுவர் வழியில் இறையொருமையையும், நாம் அவ்வொரு மூலத்திலிருந்து வந்தவர் என்ற வாய்மை யையும், இவ்வுண்மையை மக்கள் உணர்ந்தால் உலகம் இன்பத்தின் இருப்பிடமாகும் எனக் கடவுட்கருத்துப்பற்றிய வள்ளுவச் சாற்றை வடித்தெடுத்துத் தந்தார். அப்பாரதி யின் தாசர் பாவேந்தர், புரட்சிக்கவிஞராகப் புதுமை வேட்ட புலவராக அறிமுகப்படுத்தப் படுவர். எனினும், அவர் வேண்டும் புரட்சி, வள்ளுவ இறைக்கொள்கை

மீண்டும் உயிர்பெற வேண்டும் என்பதேயாகும். பாவேந்தர் பாக்கள் அனைத்தும் சமுதாயச் சீர்திருத்தமாக—அவர் பேசும் சிந்தனைகள் அனைத்தும் வள்ளுவ வேரிலிருந்து விரிந்தவை, வள்ளுவ நிலத்திலிருந்து பூத்துக் காய்த்துக் கனிந்தவை என்பது மறுக்கமுடியாப் பேருண்மையாகும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவ இறைக் கொள்கையை எத்துணை இடங்களில் மீண்டும் மீண்டும் வேறு வேறு சொற்களில் பயின்று பயின்று பேசுகிறார் பாவேந்தர்.

> "சித்தத்தினிலே இருளைப் போக்கும் சொல்லைக் கேளீர்
> செனனத்தாலே உயர்வும் தாழ்வும் இல்லை—உறுதி"

இது பாவேந்தரின் பழைய தொடக்ககாலப் பாட்டு. (தொகுதி 1) பிறப்பாலே உயர்வும் தாழ்வும் இல்லை என்ற கொள்கை உலக இருளைப் போக்கும் உரங்கொண்டது என்று வள்ளுவர் பெயர் குறிக்காமல் கொள்கை குறித்த இடம் இது. பின் தனித்தமிழ் இயக்கங் காணத் தூண்டித் 'தமிழியக்கம்' பாடிய பாவேந்தர், தானே 'செனனத் தாலே' எனச் சொல்லாளும் அவ்வளவு தொடக்க காலப் பாட்டு இது (1930). இப்பாட்டுத் தலைப்பைக் கூட 'சகோத ரத்துவம்' என்றே அழைத்தார், உலக மக்கள் ஒற்றுமைக்கு உறுவழி காட்டுவதும், வேற்றுமைக்கு வழி வகுப்பன வற்றைச் சாடுவதுமே பாவேந்தர் பாட்டுத்திறமாக நாம் தொடர்ந்து காணுகிறோம். அப்பாட்டின் தொடக்கத்தில், வள்ளுவர் கொள்கையே தாம் பேசுவது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டி,

> "பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை—இந்தப்
> பிழை நீங்குவதே உயிருள்ளாரின் கடமை"

எனப்பாடுவர். பிறப்பொக்கும் மக்கட்கெல்லாம் என்ற வள்ளுவர் கொள்கையை உணரா மக்கள் 'மடமை'யிலுள்

ளார் என்றும், அம்மடமை நீங்குவதே அவர்தம் கடமை என்றும் அறிவுறுத்துகிறார்.

பாவேந்தர் கவிதைத் தொகுதி இரண்டிலும், மக்கட்கிடையே "பின்னல் அகற்றிப் பிழைதீர் நெறி இது பேணிர் என்றே பன்னல் உடையது வள்ளுவர் முப்பாற் பனுவல் ஒன்றே" என்றும், 'ஒத்துப் பிழைக்க வழிகாட்டி வள்ளுவன் ஓதிய நூல் திருக்குறள்' என்றும் பேசுவர். இவ்விடங்களை ஆழ்ந்து நோக்குவது இருபது நூற்றாண்டுக்கால இடைவெளிக்கிடைய இரு புலவர் தம் ஒத்த உள்ளங்காண உறுதுணை புரிவதாகும். 'பிழைதீர் நெறி' என்று பாவேந்தர் வள்ளுவர் நெறியையே குறிக்கின்றார். பல்வேறு நெறிகளைப் பேசியவன் வள்ளுவன். இப்பாராட்டு எவ்வள்ளுவ நெறியைக் குறிக்கும்? 'பொய்தீர் ஒழுக்க நெறி, என்ற வள்ளுவர் முதலதிகாரத் தொடர் நமக்கு உதவும். இறைவனை ஒருவனாக—முதல்வனாகக் கண்டு, அவ்வொரு மூலத்திலிருந்து வந்த மக்களை ஒத்த பிறப்பினராகப் பின்னும் காணும் நெறியையே வள்ளுவர் பொய்தீர் ஒழுக்கநெறி என்றார். வேற்றுமை காணமுடியா ஒத்தபிறப்புடையது மனித இனம் என்று காட்டி மக்கள் வேற்றுமை யறுக்கும் ஆற்றல் குறள் நெறிக்கே உண்டு என்பதையே பாவேந்தர் இங்கு தெளிவு படுத்துகிறார். மேலும் வள்ளுவர் பேசிய அப்பேருண்மையை மீண்டும் வலியுறுத்தவே, 'ஒத்துப் பிழைக்க வழிகாட்டியது வள்ளுவர் நூல்' என்றும் எடுத்தோதினார். அதுமட்டுமா! தொகுதி மூன்றைக் கண்டால்,

> 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனுமோர்
> சிறப்புடைய நம் கொள்கை நானிலத்தின் செல்வம்'

(திராவிடர் திருப்பாடல் —111) என்று முழங்குவார். இங்கு வள்ளுவர் சொற்களையே எடுத்தாண்டு 'நம் கொள்கை

என்று பேசுகிறார். வள்ளுவர் கொள்கையே தம் கொள்கை என்பதை எட்டுணையும் ஐயமின்றித் தெள்ளத் தெளியக் காட்டுகிறார் கவிஞர். 'வள்ளுவர் சொல் தாழ்வொன் றடையாது' என்று வள்ளுவ மாரு உண்மைகளை மேலும் சுட்டிக் காட்டுவர்.

மேற்குறித்த சான்றுகளைக் காண்பார், இருபுலவர்தம் கடவுட் கொள்கையும் ஒன்றென்று காட்டிய என் கருத்தில் ஐயப்பாடு கொள்ளக்கூடும். காரணம் பாவேந்தர் பாரதி தாசனை நாத்திகர் என்றே யாரும் காட்டி வந்திருக் கின்றனர். ஆகவே, அழகொழுகும் அவர்தம் கவிதைகளின் சுவையைக்கூடப் பலர் பயிலத் தயங்கி ஒதுங்கியுளர் என்பதும் உண்மையே. ஆனல் பாவேந்தர் உள்ளம் நாத்திக உள்ளமா? ஆயவேண்டும். தம் கடவுட் கொள் கையைப் பாவேந்தர் நேராகவே பேசுகிறார்.

'ஒருகடவுள் உண்டென்போம் உருவணக்கம் ஒப்போம்
உள்ளபல சண்டையெல்லாம் ஒழியும் மதம் ஒழிந்தால்
திருக்கோயில் தொழிற்சாலை பார்ப்பனரும் கையில்
செங்கோலேந் தும் பிறரும் மக்களைச்சார்ந் தோரே'.

(கடல்மேற் குமிழிகள் III—38).

இக் கடவுட் கொள்கையைப் பாவேந்தர் பல்வேறு இடங்களில் தெளிவு படுத்துகிறார். இறைமறுப்புக் கொள் கையர் அல்லர் பாவேந்தர். இறைவன் பெயரால் மக்களிர் உயர்வு காட்டும் கொள்கையை மறுப்பார் பாவேந்தர். பல்வேறு மதங்களின் வேறுபட்ட கடவுட் கொள்கைகளில் விளைந்திருக்கும் விபரீதங்களை உணர்த்துவார் பாவேந்தர். கடவுட் கொள்கையால் வள்ளுவர் மனித இனத்தை ஒன்று படுத்த முனைந்தார். பல்வேறு அறிஞர்தம் நோக்கும் அதுவே. ஆனல் கடவுள் கொள்கை மக்களைப் பிரிக்கிறது, வேறுபடுத்துகிறது என்பதை நடைமுறையில் கண்ட

பாவேந்தர் அக்கொள்கைகளை மறுத்துச் சாடினார். சொற்கள் வெடித்து வரும் காட்சியைக் காணீர்.

"இந்த உலகில் எண்ணிலா மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்"

ஒரு கடவுளை ஏற்றவர் பாவேந்தர்; ஒரு கடவுள் பெயரால் தோன்றிய பல்வேறு மதங்களை மறுத்தவர் பாவேந்தர். ஆகவே, 'ஒரு கடவுள் உண்டென்போம் உருவணக்கம் ஒப்போம்' என்பதே அவர் கடவுட் கொள்கை. இது நாத்திகம் என்றால் வள்ளுவரும், மாணிக்கவாசகரும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், வள்ளலாரும், இராமானுசரும், ராம்மோகனரும், பாரதியும் எல்லோரும் நாத்திகப் பழிக்கு ஆளாக வேண்டியிருக்கும் ஆகவே, பேசுகிறார்,

ஒரு மதமும் வேண்டாம்—தம்பி
உண்மையுடையார்க்கே
சாதியில்லை தம்பி—மக்கள்
தாழ்வு யர்வும் இல்லை
தீதகற்ற வந்த—நம்
திருக்குறளைப் பாராய்"

பாவேந்தர் விரும்பிய சீர்திருத்தம்

சமய, சாதிப் பிரிவுகள் தமிழ் நாட்டார் ஒற்றுமைக்கு, உழைப்புக்கு, உயர்வுக்குத் தடை என்பது பாவேந்தர் ஆய்ந்து கண்ட உறுதியான கொள்கை. ஏற்றத் தாழ்வு நோக்கமும், கூடி உழைக்காமையும் மக்களை வறுமையுள் ஆழ்த்தியுள்ளது என்ற கருத்தினர். சாதி மத பேதங்களால் இறைவன் பெயரால் கொண்ட தவறான விதி நம்பிக்கை யால் மதியிழந்த மக்களது மூடப் பழக்க வழக்கங்களால் உலகு போர்க்களமாகியிருக்கிறது என்று கருதுகிறார். இப்

போரிடும் உலகை மாய்த்துப் புதியதோர் ஒன்றுபட்ட மனித சமுதாயத்தை உருவாக்க எல்லாச் சீர்திருத்தங்களே யும் பேசுகிறார். சமய சாதி வேறுபாடு, தீண்டாமை ஒழிப்பு, பெண் முன்னேற்றம் முதலிய பல்வேறு துறைகளில் சீர்திருத்தம் விழைகின்றார். தென்னாட்டார்—நிலைநினைத்து வெடிக்கும் உள்ளம் துடிக்கும் நெஞ்சம் எனக் கனல் தெரிக்கும் சொற்களால், மக்கள் உள்ளத்தில் உணர்வு ஏற்ற முயல்கின்றார். இம்முயற்சியும் பாவேந்தர் செய்த புரட்சியன்று. இந்தியப் பெரு நாட்டுள்ளும், தமிழகத் துள்ளும் முன்னோடிகள் பலர் உளர்.

உலக ஒருமைப் பாட்டைக் குறிப்பால் இறைக் கொள் கையால் வலியுறுத்தி மட்டும் அமைந்தார் வள்ளுவர். சமயக் கணக்கர் மதிவழி கூறாது பொது வழி கூறிய திறம் ஆயப்பட்டுள்ளது. ஆனால் விதந்து தனித்துச் சமுதாய சீர்திருத்தங்களைப் பேசும் வாய்ப்பும் தேவையும் வள்ளு வர்க்கில்லை. மொழிப்பற்றோ, நாட்டுப்பற்றோ, விடுதலை வேட்கையோ, இன உணர்வோ திருக்குறளில் இடம் பெற வில்லை. வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்த தமிழ் நாட்டார்க்கு அக் காலத்தில் இவ்வுணர்வுகளைப் பேசும் அவசியம் இல்லை. பெண் முன்னேற்றம் முதலிய இன்றையத் தேவைகளையும் அன்று பேச வாய்ப்பில்லை. ஆனால் வள்ளுவர்க்குப் பிறகு மக்கட் சமுதாய வாழ்வில் விளைந்த மாற்றங்கள் பல்வேறு சீர்திருத்தங்களைத் தேவை யாக்கின. ஆகவே, பாவேந்தர் வள்ளுவ அடிப்படையில் இன்றைய நிலைக்குத் தேவையான எல்லாச் சீர்திருத்தங் களையும் பேசினார். பலரும் பேசிப் பயனில்லை என்ற உண்மை கண்ட பாவேந்தர் பேரார்வத்தால் பச்சையாக அழுத்தமாக, வெளிப்படையாகப் பேசினார். அவ்வளவே வேறுபாடு.

பாரதப் பிரதமராயிருந்த மொரார்ஜி தேசாய், காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தில் 1978 மே திங்கள் 27-ம் நாள் ஆற்றிய சொற்பொழிவில், தீண்டாமையை ஒழிக்கக் கலப்பு மணத்தைத் தூண்டலே உறுவழி என உரைத்திருக்கின்றார். மேலும் "தீண்டாமைக் கொள்கையால் நம் உடன் பிறந்த சோதரரை நாம் தீண்ட மறுப்பதால் நம்மைப் பிற நாடுகள் தீண்ட மறுக்கின்றன" எனவும் உணர்ச்சிப் பொங்கப் பேசியிருக்கின்றார். பாவேந்தர் பாரதிதாசன் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருப்பித் திருப்பி இதையே பேசினார்.

"பஞ்சமர் பார்ப்பனர் என்பது நம் பழிச்சின்னம்"

என்கின்றார். இவ்வாண்டின் தொடக்க மாதங்களில், தாழ்த்தப்பட்டோர் கொடுமைப்படுத்தப்பட்ட ஏழாயிரம் குற்றங்கள் பதிவாகியுள்ளதாகப் பாராளுமன்றத்தில் உள்துறைத் துணையமைச்சர் தெரிவித்திருக்கிறார். இந்நிலையெல்லாம் காட்டுவதென்ன? பாவேந்தர் எதிர்நோக்கிய சமுதாயத் திருத்தங்கள் இன்னும் நாட்டில் இடம் பெறவில்லை; எவ்வளவு பச்சையாக, வேகமாக வெளிப்படையாக அறிவியக்கங் கண்டு, முயற்சி மேற்கொண்டும் விரும்பிய பயன் விளையவில்லை என்பதுவே. உண்மை இவ்வாறிருக்கப் பாவேந்தர் மிகுதியாகப் பேசினார் என்றோ பெரிதுபடுத்தினார் என்றோ கூறுவது எங்ஙனம் பொருந்தும்? எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பாவேந்தர் சமுதாயச் சீர்திருத்தமும் புரட்சியன்று

வள்ளுவர் வழிப்பட்ட இறைக் கொள்கைக்கு மீண்டும் புத்துயிருட்டியவர் பாவேந்தர். சமய சாதி பகுப்புக்களை ஒழித்துப் பரம் பொருள் ஒன்றென்று கொண்டு உரு வணக்கம் ஒழித்து, மக்களை சரி நிகர்

சமானமாக வாழச் செய்யும் இறைக் கொள்கையே பதேவந்தர் கண்டது. இது வள்ளுவர் வழியில் வந்த பழையது; புதியதன்று என மேலே கண்டோம். இனி, இவ்விறைக் கொள்கைப்படி பாவேந்தர் பாராட்டிய, காண விரும்பிய சமுதாய சீர்திருத்தங்களும் புரட்சியன அல்ல; பழையனவே எனக் காண்போம். சமுதாய சீர் திருத்தத்தில் புதிய நெறி காட்டியவர்களாக இராமா நுசரையும், இராமலிங்கரையும், பாவேந்தரே பாராட்டு கின்றார் (தொகுதி II—23—புதுநெறி காட்டிய புலவன்). இந்தியத் திருநாட்டின் இணையிலாச் சீர்திருத்தவாதி களாக நால்வரை நாம் மதிப்பிடலாம். இராசாராம் மோகன்ராய், தயாநந்த சரஸ்வதி, இராமலிங்க அடிகள், இராம கிருஷ்ண பரமஹம்சர் ஆகிய நால்வரும், திட்ட மிட்ட சமுதாய சீர்திருத்தத்தில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டவர்கள் என்பதை யாரும் ஒப்புவர். இந் நால்வர் வழிகளிலும் சில நுண்ணிய வேறுபாடுகளைக் காணக்கூடும் என்றாலும், அடிப்படைச் சமுதாய சீர்திருத்தத்தில், ஆறு வழிகளில் இவர்தம் நெறி ஒன்றுபட்டு இணங்குவதைச் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. அவர்கள் நுனித்துக் கண்டு நயம்படக் காட்டுவார். ''சாதி வேறுபாடுகளை அறவே ஒழித்தல், 'தெய்வம் ஒன்று' என்ற உண்மையை மக்கள் உணரும்படி செய்தல், இந்து சமயத்தினரிடையே காணப் படும் எல்லாவிதமான வேற்றுமைகளையும் தொலைத்துச் சமத்துவம் நிலவும்படி செய்தல், இந்துமத வேத, ஆகம, சாத்திர நூற்களைத் தாம் தாமே படித்துப் புரிந்து கொள்ளாமல், அந்தணர் சொன்னதையெல்லாம் மக்கள் அப்படியே நம்புவதை எதிர்த்தல், பெண்ணடிமையை ஒழித்து ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலையைத் தோற்றுவித்தல், சர்வ சமயங்களிடையேயும் சமரசம் ஏற்படுத்தப் பாடுபடுதல் ஆகிய சீர்திருத்தக் கொள்கைகள்

மேற் சொன்ன பெரியார் நால்வருக்கும் பொதுவானவை யாகும்.'' எவரும் ஒப்பத் தகும் உயர்கருத்து இஃதெனப் போற்றுவோம். மேற் குறித்த ஆறு கொள்கைகளையும் பாவேந்தர்க்கு முன்பே இந்தியச் சீர்திருத்தவாதிகள் முழு மூச்சோடு பரப்ப முயன்றனர். முயற்சி எந்த அளவுக்கு வெற்றியைத் தந்தது என்பதுபற்றிக் கூற வேண்டுவதில்லை. இந் நால்வருள் இராமாநுசரையும், இராமலிங்கரையும் பாவேந்தரே பாராட்டுகிறார் என்பது மேற்காட்டப்பட்டது.

பாவேந்தர் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளும் மேற்காட்டிய அடிப்படைகளினின்றும் மாறுபடவில்லை என்பதைப் பாவேந்தரைப் பயிலும் ஆய்வாளர் ஒப்பவே செய்வர். மேற் குறித்த அறிஞர் அனைவரும் இறைவனை ''உருவாய்—அருவாய்—உளதாய்—இலதாய்'' அமைந்த பெரும் பொருளாகவே கண்டனர். அப்பெரும் பொருளை, ''ஏகன் அநேகன் இறைவன்'' என்றே கண்டனர். இதனினும் ஆழமாக நாம் காண வேண்டிய ஒன்று, இந் நால்வருள்ளும் வள்ளலார் நெறி அடிப்படை மாற்றம் ஒன்றுடையது. முந்திய மூவரும் இருக்கின்ற சமய நெறி யில் சீர்திருத்தம் வேண்டினர். வள்ளலாரோ, சமயச் சாதிச் சழக்கையறுத்து அருட்சோதியைக் காண முயன்றார். சமயங்களே இல்லாத ஆன்மநேய ஒருமைப் பாட்டில் ஓருலகம் காண உழைத்தார். பாவேந்தர் நோக்கமும் முற்றும் இதுவாகவே காண முடிகிறது.

''துருக்கர் கிறித்தவர் சூழ்இந் துக்களென்
றிருப்பவர் தமிழரே என்ப துணராது
சச்சரவு பட்ட தண்டமிழ் நாடு
மெச்சவும் காட்டுவோன் வேண்டுமென் றெண்ணி
இராம லிங்கனை ஈன்ற தன்றோ?''

(தொகுதி II—28)

என்ற பாவேந்தர் சொற்கள், சமயங் கடந்த மக்கள் ஒருமைப் பாட்டுக்கு உழைத்தவர் அடிகளார் என ஆய்ந்து பாராட்டுவதே பாவேந்தர் நோக்கம் எனக் காட்டும். இக் கொள்கையாலேதான்,

''தீயில் நில நீரில் காற்றில் செழுவானில்
ஆயில் குறியில் அறியாப் பெரும் பொருட்குக்
கோயில் தனைஒப்புக் கொள்ளோம்''

என, ஓரிறைவனை ஒப்பி அவன் எங்கும் உள்ளவன் குறிப் பிட்ட இடத்தில் அவனை அடக்கல் மக்களைப் பிரிக்கும் மடமை என்கின்றார். தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பதைச் சாடுகிறார். வள்ளலாரைப் பல கோணங்களில் ஆய்ந்து கண்ட ம. பொ. சிவஞான கிராமணியார், அவரைச் ''சாதி சமயங்களின் எதிரி; நால் வருணப் பாகுபாட்டை நாசமுறச் செய்தவர்; தெய்வம் பல பேசுவோர்க்கும் பகைவர்; சாதிக்கொரு நீதி கூறும் சாத்திரங்களைச் சாடியவர்'' என மதிப்பிடுகிறார். இம் மதிப்பீடே வள்ளலார்க்குப் பெருமை தருமானால், தம் பேச்சிலும் மூச்சிலும் இக் கொள்கைகளையே பரப்பிய பாவேந்தர்க்கு மட்டும் எங்ஙனம் பெருமை இல்லாமற் போகும் என்பது தமிழர் எண்ணத்தக்கது.

''எல்லா உயிர்களிடத்தும் இறைவன் இருப்பதை உணர்தலே இறைபக்தி'' என்பது காந்தீயம். கருணை நெறியை வளர்க்கச் சமயமும் சாதியும் தடைகளா வதைக் கண்டு, ''தயவை விருத்தி செய்வதற்குத் தடையா யிருப்பன சமய ஏற்பாடு, சாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்'' என்று மொழிந்தார் வள்ளலார். காந்தீயமும், வள்ளலார் கண்ட கருணை நெறியுமே, பாவேந்தர் பாக்களில் களிநடம் புரிவதைக்

காய்தல் உவத்தல் அகற்றிக் காண்பார் எளிதில் உணரலாம்.

சமய சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் முன்னேற்றம், காதல் புரட்சித் திருமணம், விதவை மண ஏற்பு, பொருந்தா இளமை மண ஒழிப்பு, உழைப்பாளர் உயர்வு எனவரும் பாவேந்தர் பல்வகைத் திட்டங்களும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவ நிலத்தில் முளைத்தவை என்பதும், தனக்கு முன்பு பல் வேறு அறிஞர் முயன்ற நெறிகளுக்கே பாவேந்தர் புத்துயிரூட்ட முயன்றார் என்பதும் நம் ஆய்விற் கண்ட உண்மைகளாம். எனவே பாவேந்தர் வழி பழையது வள்ளுவர் வகுத்தது என உணரலாம்.

———

V.Balakrishnan.
V.Balakrishnan.
Balakrishnan.
Balakrishnan.

V.Balakrishnan.
V.Balakrishnan.
V